Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
எப்.28–மே.04,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 150

## திருமணக்

## தாக்குதல்

எக்ஸ்பிரஸ் ரிப்போர்ட்

## நடந்தது என்ன ?



## ரஜனியின் இரகசியம்

## நக்மாவின் சாகசம்

www.padippakam.com

# முரசம்

## முயல்வாரா பிரதமர்?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
ஒரே ஒரு வார
பிரிவின் பின்னர்
மறுபடி சந்திப்பது ஆனந்தம்!

விடுமுறை தேவைதானா?
என்று உரிமையோடு கோபித்து
மடல் அனுப்பியவர்களின்
'முரசு'மீதான ஈடுபாடு
மனதுக்குள் நிறைவு தந்தது!

இது நூற்றி ஐம்பதாவது
வெற்றி முரசு!

செய்திகளில்
திரிபற்ற தன்மை!
விமர்சனங்களின்
சார்பற்ற நேர்மை!
வாசக நெஞ்சங்களின்
நம்பிக்கைக்கு முரசு
காட்டும் விசுவாசம் அதுவே!

முரசுக்கு உரம்
வாசகர் பலம்!
முரசுக்கு இதம்
வாசகர் நேசம்!
முரசுக்கு பெருமிதம்
புத்திசாலியான வாசகர்கள்!

❑❑

நாட்டின் பிரதமர்
எண்பது வயதை தாண்டிவிட்டார்.

உலகின் முதலாவது பெண் பிரதமர்.
பெண்ணால் நாடாளவும் முடியும்
என்று நிரூபித்த தன்னம்பிக்கையாளர்!
எனவே அதற்கான புகழாரங்கள்
அவரைச் சேரத்தான் வேண்டும்!

அரசியல் எதிரி என்பதற்காக
அவரது குடியுரிமையை
ஜே.ஆர்.பறித்ததும்
அரசியல் நாகரிகத்திற்கு
முற்றிலும் மாறான செயல்தான்!

பழிக்குப் பழி என்ற வகையில்
ஜே.ஆரின் குடியுரிமையை
இன்றைய ஆட்சியாளர்கள்
பறிக்காமலிருப்பதை பாராட்டலாம்!

அதேசமயம்,
அம்மையார் ஆட்சியில்
மலையக தமிழ் மக்களை
நாடுகடத்துவதில் கரிசனம்காட்டிய
சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்
மாபெரும் வரலாற்றுத்தவறு
என்பதையும் மறந்துவிடமுடியாது!

தரப்படுத்தல்,
தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள்
போன்ற நிகழ்வுகள்
அம்மையார் ஆட்சியில்தான்
அரங்கேறியிருந்தன.

ஆயுதப் போராட்ட உணர்வுக்கு
விதைபோட்ட
பிரதான நிகழ்வுகள் அவைதான்!
அந்த விதையின்
அமோக விளைச்சல்தான்
இன்றைய யுத்தம்!

நாட்டை பொருளாதார ரீதியில்
சொந்தக்காலில் நிற்கவைக்க
சிறிமாவோ அம்மையார்
மேற்கொண்ட முயற்சிகள்
மிகுந்த துணிச்சலானவை!

அந்த துணிச்சலில் பாதியை
இனப்பிரச்சனைத் தீர்வில்
அம்மையார் காட்டியிருந்தால்
வடக்கு-கிழக்கில்
இன்று அவரது சிலைகள்
மாலையோடு காணப்பட்டிருக்கும்!
வாழ்த்துக்களும் வந்து சேர்ந்திருக்கும்!

தென்னிலங்கையின் ஏனைய
அரசியல் தலைவர்கள் போலவே
அம்மையாரும்
இனப்பிரச்சனை தீர்வில்
தனக்குக் கிடைத்த வாய்ப்பை
கை நழுவ விட்டிருந்தார்!

தந்தை செல்வாவோடு பேசி
பிரச்சனையைத் தீர்க்க
தவறிய தலைவர்கள் பட்டியலில்
அம்மையாரும் அடக்கம்.

இப்போதும் ஒன்றும்
காலம் கடந்துவிடவில்லை.
ஆட்சியில் தனக்குள்ள செல்வாக்கை
பயன்படுத்தி
இனப்பிரச்சனை தீர்வுக்கு
மூத்தவர் என்ற வகையில்
முன் முயற்சி செய்யலாம்!

ஏனோ தெரியவில்லை.
இனப்பிரச்சனை விவகாரத்தில்
அம்மையார் மௌனமாக இருக்கிறார்.
மௌனம் கலைந்து
மனம்திறந்து தீர்வுக்கு
அவர் உதவினால்
ஐக்கிய இலங்கையை
தனது கொடையாக
அவர் விட்டுச் செல்லலாம்!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## சோதனைகள்

சோதனையின் வழியாக கடந்து செல்லாத ஒரு நபரும் இல்லை என்றே சொல்லலாம். எல்லா விசுவாசிகளும் சோதனையில் விழுந்த அனுபவத்தை நிச்சயமாக பெற்றிருப்பர்.

'எனக்கு மட்டும் தான் சோதனை, வேதனை, போராட்டங்கள், பிரச்சனைகள்' என்று யாராலும் சொல்லமுடியாது.

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. (1கொரி 10:13) சோதனையை மக்கள் மூன்று விதமாக எடுத்துக் கொள்கிறார்கள்.

1. சோதனையை ஒரு பொருட்டாக எண்ணாமல் அதில் விழுந்து விடுகிறவர்கள். எது நல்லது என்று படுகிறதோ அதை செய்கிறவர்கள். எது சந்தோசத்தை கொடுக்கின்றதோ அதை நிறைவேற்றுகிறவர்கள். எது சுவையாக இருக்கிறதோ அதை பானம் பண்ணுகிறவர்கள். தங்களை தாங்களே திருப்திப்படுத்திக் கொள்கிறவர்கள்.
2. சோதனையை சுய பெலத்தினால் மேற்கொள்கின்றவர்கள். அதற்காக எல்லா வழிமுறைகளையும் ஞானத்தையும் பயன்படுத்துவார்கள்.
3. சோதனையை தேவனுடைய பெலத்தினால் மேற்கொள்கிறவர்கள். சோதனைகளைக் கண்டு சோர்ந்து விடாமல் இயேசுவை நோக்கிப் பார்க்கிறவர்கள் தங்களின் சோதனைகளைத் தாங்க அவர் ஒருவரே போதுமானவர் என்ற நம்பிக்கையுடையவர்கள். ஆண்டவர் இயேசுவும் சோதனைகளை மேற்கொண்டு வெற்றி சிறந்தவர். நாமும் நமது சோதனைகளை தாங்கி ஜெயம் பெற இயேசுவையே நோக்கிப் பார்ப்போம்.

சகோ.எஸ். யேசுநாதன், செங்கலடி.

## ஆன்மீகம்

### உத்தம நபியின் உயர் நிலைக் கல்வி



சீனம் சென்றேனும் சீர் கல்வி தேடு என்று கூறிய செம்மல் நபியின் சிந்திய முத்துக்கள் இவைகள்:

கல்வியைத் தேடுங்கள்: ஏனென்றால் இறைவன் நல்லருளோடு இதைத் தேடுபவன் தூய செயல் செய்பவனாவான்.

கல்வியைக் கற்றுக் கொடுப்பவன் தர்மம் செய்தவனாவான். தகுதியுடையவர்கள் இடையே அதை செம்மையாகப் பரப்புபவன் இறைவனுக்கு வணக்கம் செலுத்தியவனாவான்.

கல்வியைக் கற்றவன் இவ்வுலகிலே உயர் இடங்களைப் பெறுகிறான். மறுவுலகிலே அல்லாஹ்வின் அன்பைப் பெறுகிறான்.

கல்வி ஒருவருக்கு அல்லாஹ்வால் ஏவப்பட்டதையும் விலக்கப்பட்டதையும் பகுத்துக் காண்பிக்கிறது.

இப்படி உத்தம நபி உயர் நிலைப்படுத்திய கல்வி, செல்வத்தைவிடச் சிறந்ததுதான். காரணம் கல்வி உங்களுக்கு பாதுகாவல் தருகிறது. செல்வத்தை நீங்கள் பாதுகாக்க வேண்டும் அல்லவா?

எம்.சி.கலீல், கல்முனை.05

## கவிதைப்போட்டி இல-147

### பரிசுக்குரிய கவிதை

#### எனது தொழில்

ஏற நினைக்கையில் யோக்கியவானாய்
ஏறி அமரும்போது பாக்கியவானாய்
ஏறி இறங்கும் போது அயோக்கியவானாய்
ஆக்கிப் படைப்பதே எனது தொழில்.

ச.மகாலிங்கம், வெலிமடை குருப்-வெலிமடை.

* * * * * * * *

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

#### பெரிய ஆசை

லஞ்சம் பெற ஆசை
வஞ்சம் செய்ய ஆசை
யுத்தம் மூட்டிவிட ஆசை
மத வெறியை தூண்டிவிட ஆசை
மானிடரை கொன்று ஆற்றில்விட ஆசை
முதலில் உன் மேல் அமர்ந்துவிட ஆசை.

ஏ.சி.எம். ராபி, மாபேரியா-உகுவலை.

## கவிதைப் போட்டி இல-150



#### பதவி வெற்றிடம்.

நடிக்கத் தெரிந்தவர்களுக்கு
முன்னுரிமை!
வாக்குறுதிகளை வழங்குவதில்
வள்ளலாகவும்,
மறப்பதில் வல்லவர்களாகவும்
இருத்தல் அவசியம்!
இனவாதத்தை தூண்டக்கூடிய
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இராமசாமி ரமேஷ்குமாரி-டெஸ்போட், நானுஓயா.



#### யார் கதிரை?

நாடாளுமன்றத்தின்
நாற்காலியுமில்லை,
பாஞ்சாலைக்குருவின் ஆசனமும்
அல்ல,
இது—
செல்விழுந்த வீட்டிற்குள்
திருடிய கதிரை!
சென்றிப் பொயின்டில்
சேர் இருக்கும் கதிரை!

அம்பிளாந்துறையூர்-அரியரன்.

### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 04.05.1996.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 150.
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

#### நாற்காலிதானெதற்கு?

நாடிழந்த நமக்கெல்லாம்
நாற்காலி தானெதற்கு....?
ஊரிழந்து உறவிழந்து
உறக்கமெனும் நிலையிழந்து
வீடிழந்து பொருளிழந்து
விளைநிலங்கள் தான் இழந்து
விதியிலே தவமிருந்து
விழி நீரைத் தானுகுக்கும்
நாதியற்ற மனிதருக்கு
நாற்காலி தானெதற்கு?

பி.எஸ். ராஜேந்திரா-மட்/புனித மிக்கேல் கல்லூரி.

#### வெற்று நாற்காலி...

தமிழனின்
பிரச்சனையை
தீர்ப்பேன்
என உட்காரப் போகிறார்கள்;
தீர்த்தேன்
என
எழமாட்டார்கள்!

பாலகமலன்-வவுனியூர்.

#### இருக்கை

கலியுகத்தில் கடவுள்
காலி செய்து விட்டுப்
போன இருக்கை
இனி யாருக்கு?

கேதீஸ்வரி மயில்வாகனம், திகனை-கண்டி.

#### ஆசை

சின்ன சின்ன ஆசை
தொட்டுப் பார்க்க ஆசை
தொட்டு பார்த்த போது
இருந்து பார்க்க ஆசை
இருந்து பார்த்த போது
என்றும்
என்றென்றும் இருந்துவிட ஆசை.

டேவிட் குணசிறி-கல்முனை.

#### தலைகீழ்

இதில் அமர்ந்து
சாதிக்கிறவர்களை விட
மக்களைச்
சோதிக்கிறவர்கள் தான்
அதிகம்...

கொக்காகல-எஸ். பிரபா.

#### கதிரையின் கம்பீரம்

குண்டொன்று வெடித்ததனால்
குலை நடுங்கிச் சாயாமல்
கச்சிதமாய் காட்சிதரும்
கம்பீரக் கதிரையைப் பார்!

ஏ.எம்.முஸ்தபா-மட்/மீராகேணி வித்தியாலயம், ஏறாவூர்.

#### அறிவித்தல்

நாற்காலிக்குச் சண்டை செய்யும்
நாட்டு மாந்தருக்கோர் அறிவிப்பு!
மனித மனம் படைத்தவர் எவரோ
அவரே இந்த ஆசனத்தில் அமரவும்!

சி.விவேகானந்தன்-விஷ்ணு கோயில் வீதி, கிரான்.

#### அரியாசனம்

ஆணென்ன பெண்ணென்ன
அரியாசனம் இருந்தென்ன?
போர் புயல் ஓயவில்லை
சிறு வாழ்வு சிறப்பில்லை.

ந-அலாஹிர், டீன் டல்-குறிஞ்சிப்பிட்டி.

#### ஆசை

யுத்தம்
சத்தம்
இரத்தம்-எல்லாம்
இதற்கு தானே....!

சுபா வரன்-கண்டி.

## வாசக(ர்) சாலை

தித்திக்கும் தேன் தமிழில் வாராவாரம் நீ சுமந்து வரும் பாப்பா முரசு, இராமாயணம், லேடீஸ் ஸ்பெஷல் மற்றும் புதுப் புது அம்சங்களை நித்தம் சுமந்து வந்து எங்களை வியப்பில் ஆழ்த்தும் தினமுரசின் நற்பணி சிறப்பாகத் தொடர வாழ்த்துக்கள்.

நிஸ்னா ஜமீல், அநுராதபுரம்.

யுத்தங்களால் ரணமாகிப் போன இதயங்களுக்கு 'ஒத்தடம்' கொடுக்கிறார் கந்தசாமி அண்ணா, 'காதிலை பூ' பகுதி மூலம்! 'அவலம்', 'விதி', யுத்தகாலச் சிறுகதைகள் இரண்டும் கண் கலங்க வைக்கின்றன. 'நீ நீயா!' தொடரட்டும் 'திகில்'. 'தேன்கிண்ணத்தில்' உள்ள ஒவ்வொரு கவிதையும் உண்மையிலேயே தேன் கலந்த கிண்ணங்கள்தான். 'சனத் ஜெயசூரியாவின்' பயோடேட்டாவை தந்ததற்கு நன்றி! புகைப் படத்தையும் பிரசுரித்திருக்கலாமே! 'கார்லோஸை' கண்டுபிடிப்பது கூட இலகு. ஆனால் ரசிகனை.....?!

எம். ரிஷான் ஷெரீப்-மாவனல்லை.

ர(ரு)சிக்க வைக்கும் ரசிகன்!

ஒரு புறம் இனிக்கும் "இலக்கிய நயம்!" மறுபுறம் கலக்கும் "கார்லோஸ் தொடர்" இரண்டிலும் வியக்கவைக்கிறார். அபிமான "ரசிகன்!"

வழக்கத்தில், "அரைப்பக்க அளவில்" வெளிவரும் மயக்கும் தேன் கிண்ணப்பகுதியில் புதிய (அம்ச) பகுதிகள் ஆக்கிரமிப்பது நியாயமாகப்படவில்லை!?

கோட்டைமுனை முத்துமணி-பதுளை.

அன்பு முரசே!

நீ வாரா வாரந் தாங்கி வரும் அனைத்தும் அமுதம். உன்னை கையில் எடுத்தவுடன் எதை முதலில் வாசிப்பது என்ற தவிப்பு என்னில் ஏற்படுகின்றது. காதிலைபூ கந்தசாமியின் கற்பனை ஊற்றில் நனைந்து மகிழ்ச்சியடைகிறேன்.

க. யோகேஸ்வரன்-கலகல்லையூர்.

அரசு-புலிகள்-எதிர்க்கட்சி ஆகிய மூன்றுதரப்பும் பொது இணக்கம் காணாதவிடத்தில் பிரச்சனை தீராது என்பது சரியே. பல தடவைகள் நம்பி ஏமாந்தவர்கள் தமிழ் மக்கள். நம்பிக்கையூட்ட வேண்டிய கடப்பாடு பெரும்பான்மை சமூகத்திற்கு உரியதன்றோ. முரசின் அரசியல் கருத்துக்கள் காலத்துக்கேற்ற கருத்தாக அமைவதையிட்டு மகிழ்ச்சி.

பா.ஏகாம்பரம்-வவுனியா.

தமிழ் கட்சிகள் இந்த நேரத்திலாவது தமக்குள் இணைந்து பொதுத்தீர்வு யோசனைகளை முன்வைத்திருப்பது நல்ல சகுனம்தான். முடிவில் இறுதி வரை உறுதியாக இருக்கப் பிரார்த்திப்போமாக. கூட்டணியினர் மட்டும்தான் தனிக்கச்சேரியில் ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள். இன்றைய இக்கட்டான நிலையில்கூட கூட்டணி தனிக்கச்சேரி நடத்துவதை முரசு அம்பலப் படுத்தியேயாக வேண்டும்.

சி.உதயகுமார், கொழும்பு-6.




வெளிநாடுகளில் புலிகள் இயக்கத்தினருக்கு மட்டும்தான் ஆதரவு என்று முரசுக்கு எண்ணமோ? புலிகளுக்கு எதிரான செய்திகளை எழுதி ஆதாரத்தோடு அனுப்பினால் பிரசுரிப்பீர்களா? வெளிநாடுகளில் முன்னாள் போராளிகள் சிலரின் தொல்லை தாங்கமுடியாமல் இருக்கிறது.

வி.அலோசியஸ்-சுவிற்ஸர்லாந்து.

என் இனிய முரசாரே!

நீர் தரும் 'காதிலை பூ கந்தசாமி'யாரின் கற்பனை வெகு ஜோராக இருக்கின்றதே. அதனுடன் "கொழும்பு வர அச்சம்" கார்ட்டூன் படம் சூப்பர்.

டி. சசிகலா-சாம்பல்தீவு.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

- * கே.பார்வதி, பண்டாரவளை.
- * ஜெ. ஜெகதீஸ்வரி, திருக்கோணமலை.
- * சி.மோகன், வவுனியா.
- * எஸ். ஜெயசுப்பிரமணியம், தலவாக்கலை.
- * மணிமேகலா ஞானசேகரன், கம்பளை.
- * அனஸ், அக்குறணை.
- * பூ.மகேந்திரதாஸ், கோட்டைக்கல்லாறு.
- * திருமதி இந்திராணி பாலகிருஷ்ணன், ஹட்டன்.
- * சேகர் மணிசேகரன், இரண்டைப்பாதை.
- * என்.ரீ.அமீனுதீன், அக்கரைப்பற்று-06.
- * ஜே.எம்.கியாஸ், கிண்ணியா-04.
- * எம்.குமாரி, ஹெரப்டன்.
- * இ.இல்லத்துல் இர்பான், மூதூர்.
- * லதா செல்வராஜ், பத்தனை.
- * திருமதி.எ.சிவகுமார், கொழும்பு-13.
- * ரா.லலிதா, இறக்குவானை.
- * ரி.விமலேஸ்வரி, சிலாபம்.
- * ஜெ.கருணாநிதி, அக்கரைப்பற்று.
- * ஏ.எஸ்.எம்.ரிஸ்வி, மதவாச்சி.
- * செல்வி நிம்மிராஜ், கொழும்பு-13.
- * இளையதம்பி உதயகலா, முறக்கொட்டாஞ்சேனை.
- * கே.புவனலோஜினி, இறக்குவானை.
- * ஏ.ஏ.எம்.அன்சிர், கொச்சிக்கடை.
- * ஆ.மீரா, மடுல்சீமை.
- * கஜன் மகேந்திரன், கொழும்பு-13.
- * வே. தணிகாசலம், கண்டி.

அரசிடம் செப்புக்காசுகூட வாங்கவில்லை என்று தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர் திரு.சிவசிதம்பரம் செப்பியிருக்கிறார். அதென்றால் உண்மைதான். அக்கட்சியின் பா.உக்கள் சாராயக்கடை லைசன்ஸ், வேலை வாய்ப்புக்களை மட்டும்தானே வாங்கினார்கள். (அவற்றைவைத்து வெளியே சம்பாதித்தது வேறு விஷயம்) அதிரடியார் அதனை சுட்டிக்காட்ட மறந்தது ஏனோ?

என். நாகேந்திரன்-மட்டக்களப்பு.



படிப்பகம்

www.padippakam.com

# தளபதிகளோடு பிரபா அவசர ஆலோசனை!

## அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய்வு

யாழ்-குடாநாட்டில் உள்ள தமது முக்கிய நிலைகளை புலிகள் வன்னிப் பெரு நிலப்பரப்புக்கு இடம்மாற்றிவிட்டனர்.

புலிகள் இயக்க முக்கிய தலைவர்கள் பலர் வன்னியில் காணப்படுகின்றனர்.

"யாழ்-குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை முன்னரே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். பாரிய நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டால் எவ்வாறு நடந்துகொள்வது என்பதை முன்கூட்டியே திட்டமிட்டிருந்தோம். அதன்படியே எமது அணிகள் நடந்து கொள்கின்றன" என்று புலிகள் இயக்க பிரமுகர்கள் கூறிவருகின்றனர்.

**சாதகம்**

இடம்பெயருமாறு தம்மால் விடுக்கப்பட்ட கோரிக்கையை வடமராட்சி, தென்மராட்சி மக்களில் குறிப்பிட்டளவான மக்கள் ஏற்க மறுத்தது தொடர்பாக புலிகள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் படையினர்நிலை கொள்ளும் பகுதிகளில் மக்கள் இல்லாமலிருப்பது புலிகளுக்கு அரசியல் ரீதியில் சாதகமாக இருந்தது.

தற்போது படையினரின் கட்டுப்பாட்டில் வந்து கொண்டிருக்கும் பகுதிகளில் மக்களும் இருப்பதால் அரசாங்கத்தின் பிரசாரத்திற்கு சாதக நிலை ஏற்படலாம் என்று புலிகள் சற்றுக் கவலை கொண்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் ரிவிரெச 2 நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தனது முக்கிய தளபதிகளை அழைத்து கலந்துரையாடினார். வன்னியில் நடைபெற்ற அக்கலந்துரையாடலில் புலிகள் இயக்க படைத்துறை துணைத்தளபதி பால்ராஜ், கடற்புலித் தளபதி சூசை, அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்செல்வன் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர் என்று தெரியவருகிறது.

வடக்கில் படையினரின் நடவடிக்கையை கட்டுப்படுத்தக்கூடிய கனரக ஆயுத பலம், போதிய ஆட்பலம் என்பவை இல்லாத நிலையில் வேறு திசைகளில் கவனம் செலுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

**வடமராட்சியில்**

வன்னியில் இருந்து புலிகளின்குரல் வானொலி செயற்பட்டுவருகிறது. தமது தரப்பில் இதுவரை ஏற்பட்ட இழப்பு விபரம் எதனையும் புலிகளின் குரல் வெளியிடவில்லை. தென்மராட்சியில் உள்ள கொடிகாமம் பகுதியை படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளனர். அதனால் வடமராட்சிக்கு தென்மராட்சியிலிருந்து தரைவழியாக புலிகள் செல்லும் பாதை தடைப்பட்டுள்ளது. வடமராட்சியில் குறைந்தது 2 இலட்சம் மக்கள் இருக்கின்றனர்.

எனவே ரிவிரெச 2 நடவடிக்கைக்குப் பின்னர் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கணிசமான மக்கள் இருப்பர்.

இதுவரை யாழ்குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் படையினரின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் கணிசமான மக்கள் உள்ளடக்கப்படும் நடவடிக்கையாக ரிவிரெச2 அமைந்துள்ளது.

**பிரசாரம்**

யுத்தத்தை நிறுத்தி அரசாங்கம் புலிகளோடு பேசவேண்டும் என்று வலியுறுத்தி வெளிநாடுகளில் உள்ள புலிகள் இயக்க கிளைகள் பிசாரத்தில் ஈடுபடவுள்ளன.

ஏற்கெனவே வெகுஜன அமைப்புக்கள் சார்பாக ஐக்கிய நாடுகள் சபை செயலாளருக்கு ஒரு மகஜர் அனுப்பப்பட்டது. யுத்த நிறுத்தம் செய்யப்பட வேண்டும். அரசு நிபந்தனையின்றி புலிகளோடு பேசவேண்டும் என்று அதில் கூறப்பட்டிருந்தது. புலிகளின் அனுமதியுடன்தான் அம் மகஜர் வடக்கிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிப்படையானது தொழிலாளர் பலம்!

## ஒற்றுமையால் வெற்றிகரமான வேலை நிறுத்தம்!

தோட்டத் தொழிலாளர்கள் தம்மத்தியில் இருக்கக்கூடிய ஒற்றுமையையும், அதன் பலத்தையும் வெளிப்படுத்திவிட்டனர். வேலை நிறுத்தம் மூலமாக மலையக தோட்டத் தொழிலாளர்கள் தமது ஒற்றுமையை நிரூபித்துக்காட்டிவிட்டனர்.

இதேவேளை இ.தொ.கா தலைவர் அமைச்சர் தொண்டமான் வேலை நிறுத்தத்திற்கு முன்பாக தமிழ்நாட்டுக்கு சென்றிருந்தார்.

இங்கு இருந்தால் சமரச ஏற்பாடுகளுக்கு தூதுகள் விடப்படும் என்பதால் அதனைத் தவிர்க்கவே அவர் சென்றதாகக் கூறப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர்கள் புதிய கோரிக்கைகள் எதனையும் முன்வைக்கவில்லை. ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்டு வழங்கப்படாமல் இருக்கும் சம்பள உயர்வையே கேட்கின்றனர். அக் கோரிக்கையின் நியாயத்தை எவரும் மறுக்க முடியாது. அதனால்தான் ஆளும் கட்சி சார்பான தொழிற்சங்கங்கள் கூட வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்தன. இது ஒரு முக்கியமான திருப்பமாகும் என்று மலையக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வேலை நிறுத்தம் நூற்றுக்கு நூறுவீதம் வெற்றியளித்துள்ளமையானது எதிர்காலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை எவரும் அலட்சியம் செய்ய முடியாத நிலையை உருவாக்கும் என்று அந்த வட்டாரங்கள் திருப்தி தெரிவித்துள்ளன.

மலையக தொழிற்சங்கங்கள் சிலவற்றை வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாமல் தடுக்க சில சக்திகள் இறுதிநேர முயற்சியில் ஈடுபட்டன. ஆயினும் அம் முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை.

# மட்டக்களப்பில் தொடர் கடத்தல்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு-கொமாந்துறையிலிருந்து கிரான் வரையான பகுதியில் கடந்த 19.04.96 அன்று புலிகள் அன்னை பூபதியின் நினைவாக கடைகளைப் பூட்டி போக்குவரத்தை நிறுத்தி ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு கேட்டனர். இதனால் அப்பகுதியைக் கடந்து உள்ளூர் மற்றும் கொழும்பு, வவுனியா, திருமலை போன்ற இடங்களுக்கு மட்டக்களப்பிலிருந்து செல்லும் வாகனங்கள் பகல் 2 மணிவரை செல்ல முடியவில்லை. பகல் 2 மணிக்குப் பின்னரே படையினர் ரோந்து சென்று வீதிப் பாதுகாப்பை வழங்கினர்.

அவ்விடங்களில் காலையிலிருந்து பகல்வரை பெருந்தொகையான புலிகள் திரண்டிருந்தனர். சென்ற நாலாண்டுகளின் பின்னர் புலிகள் தமது கட்டுப்பாட்டிலில்லாத பகுதியில் ஹர்த்தாலை அனுஷ்டித்துள்ளனர்.

இதனிடையே இம்மாத ஆரம்பத்திலிருந்து வந்தாறுமூலையில் வைத்துப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட 2 கூட்டுறவுச் சங்க பஸ்கள், ஒரு போ.வ. சேவை பஸ், 4லொறிகள், ஒரு வெளிநாட்டு உதவி நிறுவன பஜேரோ, 10 இற்கு மேற்பட்ட உழவு இயந்திரங்கள், 2மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றைப் புலிகள் திருப்பி ஒப்படைத்துள்ளனர்.

வெளிநாட்டுக்கான சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் (CAA) பஜேரோ வாகனம் புலிகளால் கடத்திச் செல்லப்படும் போது அது மோதுண்டதால் வாகனம் சுக்குநூறாக நொருங்கிய நிலையில் மீட்கப்பட்டது. வாகனத்தைக் கடத்திச் சென்ற புலி உறுப்பினர் ஸ்தலத்திலேயே பலியானார். மற்றொருவர் காயமடைந்தார்.

கொழும்பிலிருந்து பொருட்கள் ஏற்றி வந்த ஈஸ்ரன் ட்ரான்ஸ்போர்ட் லொறி சுட்டு சேதப்படுத்தப்பட்ட நிலையில் பொருட்களின்றி மீட்கப்பட்டது. சுமார் 30 இலட்சரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பொருட்கள் லொறியிலிருந்ததாகப் புகாரிடப்பட்டுள்ளது.

சமீப நாட்களாக வந்தாறுமூலையில் வைத்து அரச, தனியார் வாகனங்களிலிருந்து புலிகள் பற்றரிகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

# பாதுகாப்புக்கு சவால்

## வட-பத்திரிகை தெரிவிப்பு

கொழும்பு துறைமுகத்தில் நடத்தப்பட்ட கடற்கரும்புலித் தாக்குதல் தொடர்பாக வடபகுதியில் இருந்து வெளியாகும் ஈழநாதம் பத்திரிகை பின்வருமாறு தெரிவித்துள்ளது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த உயர் பாதுகாப்பு ஏற்பாடுகள் கொண்ட பகுதிமீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலானது சிறீலங்கா தலைநகரான கொழும்பின் பாதுகாப்புக்கும், அதன் பொருளாதாரத்திற்கும் பலத்த அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இத்தாக்குதல் பாதுகாப்புக்கு விடப்பட்ட சவால் மட்டுமல்ல, சிறீலங்காவின் பொருளாதாரம்மீது விழுந்த அடியாகும். என்று குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ராய்டர் செய்தி நிறுவனத்துக்கு ஃபிரான்சிலுள்ள புலிகளது பிரமுகர் லோறன்ஸ் திலகர் பின்வருமாறு தெரிவித்துள்ளார். "அரசாங்கம் யுத்த மன நிலையில் இருக்கிறது. அதற்கு பதில் சொல்லும் வகையில் தாக்குதல்கள் அமைந்துள்ளது."

ஏப்ரல் 12 இல் கொழும்பு துறைமுக தாக்குதல் முயற்சியில் பலியான கடற்கரும்புலிகளது பெயர் விபரங்கள் பின்வருமாறு:

லெப்ரினன்ட் கேணல் ரதீஸ் (வல்வெட்டித்துறை), மேஜர் ரதன் (திருகோணமலை), மேஜர் பொய்யாமொழி (திருகோணமலை), மேஜர் ஜனார்த்தனன் (காங்கேசன்துறை), மேஜர் ரவாஸ் (சாக்கோடை), மேஜர் பரன் (பருத்தித்துறை), கப்டன் சுபாஸ் (திருக்கோணமலை), கப்டன் மதனி (வெற்றிலைக்கேணி), கப்டன் விக்கி (வெற்றிலைக்கேணி).

ஒன்பது கடற்கரும்புலிகளதும் நினைவாக வடபகுதியில் மூன்றுநாட்கள் நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

# சுவாமியின் புகார்

தமிழக ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி புலிகள்மீது குற்றம் சாட்டியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் இந்தியாவுக்குள் ஊடுருவி இருப்பதாகவும், தன்னைக் கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் அவர் புகார் தெரிவித்துள்ளார்.

சுப்பிரமணிய சுவாமியின் புகாரை புலிகளின் அனுதாபியான திரு.பழ.நெடுமாறன் மறுத்துள்ளார். "தமிழக அரசியலிலோ, இந்திய அரசியலிலோ புலிகள் தலையிட்டதுமில்லை. தலையிடப் போவதும் இல்லை. விடுதலைப் புலிகள் சுப்பிரமணியம் சுவாமியை ஒரு போதும் வேட்டையாட மாட்டார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தமிழ் தேசியக் கட்சித் தலைவரான நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

# கில்லாடியான வியாபாரிகள்

உலகச் சந்தையில் மாவின் விலை உயர்ந்து விட்டது என்று அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் தெரிவித்தன. அதற்காக இங்கும் மாவிலை அதிகரிக்கப் போவதாக சொல்லப்படவில்லை.

ஆனால் வியாபாரிகள் புத்திசாலிகள். மாவிலையை இங்கும் ஏற்றுவதற்கான முன்னுரைதான் அச் செய்தி என்று புரிந்து கொண்டனர். உடனடியாகவே மாவின் விலையையும், பாணின் விலையையும் அதிகரித்து விட்டனர். சில பகுதிகளில் பாணின் விலை ஒரு ரூபா கூடுதலாக வைத்தும் விற்பனை செய்யப்பட்டது.

இத்தனைக்கும் பின்னர்தான் மாவிலை அதிகரிப்பு தொடர்பாக அரசாங்கம் அறிவித்தது.

## கனடாவில் நினைவு தினம்

அன்னை பூபதியின் 8வது ஆண்டு நினைவு தினம் கனடாவில் ரொறன்ரோவிலும் அனுஷ்டிக்கப்பட்டது. 20.04.96 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் திராவிடர் கழக பொதுச் செயலாளர் சி. வீரமணி கலந்து கொண்டார்.

"தமிழீழம் உருவாகுவதன் மூலமே உலகத் தமிழினம் பாதுகாப்பாக வாழமுடியும்." என்று சி.வீரமணி தெரிவித்தார்.

## புதுமையான பிரசாரம்

இந்திய தேர்தலில் தமிழகத்தில் மட்டுமல்ல பிற மாநிலங்களிலும் நடிக, நடிகையர் செல்வாக்கு அதிகரித்துள்ளது.

தேர்தலில் நேரடியாக குதிக்க விரும்பாத நடிக, நடிகைகளை தமக்காக பிரசாரம் செய்யுமாறு கட்சிகள் இழுக்கின்றன.

நடிகை விஜயசாந்தி ஒரு புதுமை படைத்திருக்கிறார். ஆந்திராவில் எதிரும் புதிருமாக மோதும் இரண்டு கட்சிகளையும் ஆதரித்து பிரசாரம் செய்யப் போகிறார்.

இந்திரா காங்கிரஸ் சார்பாக பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் மகுந்தா பர்வத்தம்மா என்பவருக்காகவும் விஜயசாந்தி பிரசாரம் செய்கிறார்.

தெலுங்கு தேசம் கட்சியின் சார்பில் போட்டியிடும் நடிகை சாரதாவுக்கு ஆதரவாகவும் விஜயசாந்தி பிரசாரம் செய்கிறார்.

'ஆஷா ஜோதி விஜயசாந்தி யுவசேனா' என்னும் அமைப்பையும் விஜயசாந்தி துவங்கியிருக்கிறார்.

# வாகரையில் உணவு நெருக்கடி

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு வாகரைக் கிராமத்தில் சனநடமாட்டம் குறைந்து வருகிறது. எந்நேரத்தில் எது நடக்குமோ என்ற மரணபயம் வாகரை மக்களைக் கௌவியுள்ளது. அங்கிருந்து மக்கள் கதிரவெளி, பனிச்சங்கேணி, வாழைச்சேனை போன்ற பகுதிகளை நோக்கி இடம் பெயருகிறார்கள். வாகரையிலுள்ள புலிகளின் முகாமை நோக்கி 05.04.96 அன்று ஏவப்பட்ட 12 ஷெல்கள் வந்து வீழ்ந்தன. எனினும் புலிகளின் முகாமுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை. அருகிலிருந்த தபாலகமே சிறிது சேதத்திற்குள்ளானது.

கடந்த ஜனவரி மாதத்திற்குப் பின்னர் வாகரைப் பகுதி மக்களுக்கு உணவு முத்திரை மற்றும், நிவாரணப் பொருட்கள் கொண்டு செல்லப்படவில்லை. இதனால் அங்கு உணவுப் பஞ்சம் ஏற்படும் நிலையேற்பட்டுள்ளது.

ஹஜ் (ஈத்-உல்-அல்ஹா)
பெருநாளைக்
கொண்டாடும் அன்பு
நெஞ்சங்களுக்கு
முரசின்
வசந்த வாழ்த்துக்கள்

# விளையாட்டு விழாவும் பஸ்சேவையும்!

கடத்திச் செல்லப்பட்ட பஸ்களைக் கொண்டு புலிகள் மட்டு-பதுளை வீதியில் பஸ் சேவைகளை நடத்தினார்கள். இச் சேவைக்காக இ.போ.ச. பஸ் கட்டணத்தையே புலிகள் அறவிட்டனர். இதனிடையே கடந்த 10.04.96 அன்று பதுளை வீதியில் புலிகள் சகல விளையாட்டுக்கழகங்களையும் அழைத்து அன்னை பூபதியின் நினைவாக விளையாட்டுப் போட்டியையும் பரிசளிப்பு விழாவையும் நடத்தினர். படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள விளையாட்டுக் கழகங்களையும் கண்டிப்பாகக் கலந்து கொள்ளுமாறு புலிகள் கேட்டிருந்தனர். புலிகள் நடத்திய விளையாட்டுப் போட்டியில் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்தவர்கள் பங்கு கொண்டனர். என்ற விடயம் படையினருக்குத் தெரியவரவே அவர்கள் விசாரணைக் குட்பட்டுள்ளனர்.

# குட்டிக்கதை சொன்ன சூப்பர் ஸ்ரார்

சுயநலத்துக்காக ஆண்டவன் கொடுத்த அறிவையும், அழகையும், திறமையையும் பயன்படுத்தும் பெண்ணால் நாட்டுக்குத் துன்பம் நேரிடும் என்பதை அரசியல் தலைவர் போல் குட்டிக்கதை கூறி விளக்கினார் ரஜினி. ஆனால் இந்தக் கதை யாருக்குப் பொருந்தும் என்பதை அவர் சொல்லவில்லை.

சென்னையில் நடிகர் ரஜினிக்கு சினிமா எக்ஸ்பிரஸ் விருது வழங்கப்பட்டது. இந்த விழாவில் ரஜினி பேசும்போது இந்தக் குட்டிக் கதையைக் கூறினார். கதை வருமாறு:

இங்கிருக்கும் பெண்கள், நடிகைகள் எல்லோரையும் பார்க்கும் போது எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. பிரம்மா மனிதர்களைப் படைக்கும் போது அவர்கள் கர்மாபடி தான் படைப்பார். அதன்படிதான் ரூபத்தைக் கொடுப்பார். சில சமயங்களில் பெண்களை அவர் படைக்கும் போது பிரம்மா இரண்டு சொட்டு கண்ணீர் சிந்துவார். இதைப் பார்த்த நாரதர், இது ஏன் என்று கேட்டார். அதற்கு பிரம்மா, ரொம்ப அழகு, அறிவு, திறமை இம்மூன்றும் இருக்கும் பெண்ணுக்கு அவங்க வாழ்க்கை கண்ணீரில் தான் முடியும். அதனால் தான் என் கண்ணீரையும் அதில் கலக்குறேன் என்றாராம்.

உடனே இதற்கு என்ன பரிகாரம் என்று நாரதர் கேட்டார். இந்த அறிவு, அழகு, திறமை இம்மூன்றும் வந்தது என்னால் இல்லை. இது ஆண்டவன் கொடுத்தது. எனவே இதை அடுத்தவர்களுக்காகப் பயன்படுத்துவேன் என்று நினைத்தால் எந்த துன்பமும் வராது. ஆனால் சில பேர் இந்த அறிவையும், அழகையும் திறமையையும் தங்களுக்காகவே பயன்படுத்துகின்றனர். சிலபேர் தங்கள் குடும்பத்திற்காக பயன்படுத்து கின்றனர். இப்படிப்பட்ட பெண்களால், சிலரால் அவர்கள் குடும்பத்துக்கு துன்பம் வருகிறது. சிலரால் சமுதாயத்திற்கு துன்பம் வருகிறது. சிலரால் நாட்டுக்கே துன்பம் வருகிறது. இதுதான் பிரம்மா சொன்னது.

சினிமா எக்ஸ்பிரஸ் பத்திரிகை சார்பில் சிறந்த நடிகருக்கான விருது ரஜினிக்கு வழங்கப்பட்டது. அந்த விருதைப் பெறும் விழாவில் உரையாற்றிய போதே ரஜினி மேற்கண்ட கதையைக் கூறினார்.

தமிழ்நாட்டில் தி.மு.க கூட்டணிக்காக ரஜினி பிரசாரத்தில் குதித்திருக்கிறார்.

# தீர்த்தத் திருவிழாவில் திடீர் பிரச்சனை

திருகோணமலையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற கோணேசர் கோயில் தீர்த்தத் திருவிழாவில் இராணுவத்தினர் நடந்துகொண்ட முறை குறித்து பல கண்டனங்கள் எழுந்துள்ளன.

பாதுகாப்புக் காரணம் காட்டி பாபநாசத் தீர்த்தக் கிணற்றுக்கு அடியார்களை அனுமதிக்க இராணுவத்தினர் மறுத்துவிட்டனர். பாபநாச தீர்த்தக் கிணறு உள்ள பகுதி தமது முகாமுக்கு சொந்தமானது என்று இராணுவத்தினர் நினைப்பதுதான் பிரச்சனைக்கு காரணமானது.

இதேவேளை கோணேஸ்வரர் கோயில் நிர்வாகத்தினரும் இராணுவத்தினரை அணுகி முன்கூட்டியே அனுமதி பெற தவறிவிட்டனர். முன்கூட்டியே அனுமதி கேட்டிருந்தால் பிரச்சனையை தவிர்த்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

முன்பெல்லாம் அவ்வாறு அனுமதி கேட்கப்படவில்லையே. இம்முறைதான் தமது அனுமதி தேவை என்று இராணுவத்தினர் புதிதாகக் கூறினார்கள். முன்னரே தெரிந்திருந்தால் நிர்வாகத்தினர் அனுமதி கேட்டிருப்பர் என்று கோவில் நிர்வாக வட்டாரத்தினர் கூறுகின்றனர்.

இதேவேளையில் பாபநாசத் தீர்த்தக் கிணற்றுக்கு பக்தர்களை அனுமதிக்குமாறு வாதிட்ட திருமலை நகர சபைத் தலைவர் சூரியமூர்த்திக்கும் இராணுவவீரர் ஒருவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. நகரசபைத் தலைவர் தாக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு குளுக்கோஸ் ஏற்றப்பட்டது. ஆனாலும் அது தொடர்பாக பொலிஸில் எவ்வித புகாரும் நகரசபைத் தலைவரால் செய்யப்படவில்லை.

# நகரசபைத் தலைவரை மக்கள் மடக்கினர்

திருக்கோணமலை நகரசபைக்கு உட்பட்ட காந்தி நகரில் திருமலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி அங்குள்ள மக்களால் தாக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

காந்திநகரில் வாசிகசாலை, பாலர் பாடசாலைக் கட்டிடம் போன்றவற்றை உள்ளடக்கிய கட்டிடத் தொகுதி ஒன்று சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டிருந்தது. ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி) அக் கட்டிடத் தொகுதியை தமது கட்சி நிதியில் உருவாக்கியிருந்தது.

18.04.1996 அன்று நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தியின் தலைமையில் லொறியில் சென்ற ஒரு குழுவினர் அக் கட்டிடத்தில் இருந்த தளபாடங்களை லொறியில் ஏற்றினார்கள்.

அதனையடுத்து காந்தி நகர கிராம மக்கள் அவர்களை சுற்றிவளைத்துக் கொண்டனர். நகரசபைத் தலைவரும் தாக்கப்பட்டார். தனது தவறுகளுக்கு நகரசபைத் தலவர் வருத்தம் தெரிவித்து கடிதம் ஒன்றை தன் கைப்பட எழுதிக் கொடுத்த பின்னரே அவரையும், அவரோடு சென்றவர்களையும் திரும்பிச் செல்ல மக்கள் அனுமதித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழகத்தில் தேர்தல் திருவிழா

ஏழுமலை

# கருணாநிதியின் கணக்கு
# ரஜினியின் மற்றொரு புதிர்

தமிழகத் தேர்தலில் பல சுவையான காட்சிகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான இந்திய காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுவைக்கத் தயார் என்று தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி கூறியிருந்தார். நரசிம்மராவ் நிலையான ஆட்சியை தந்தவர் என்றும் பாராட்டியிருந்தார்.

அப்படியிருந்தும் கூட்டணி ஏற்படவில்லை. பிரதமர் நரசிம்மராவுக்கு ஜெயலலிதாவுடன்தான் கூட்டணி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

பிரதமர் நரசிம்மராவின் இரண்டு மகன்களுக்கும் ஜெயலலிதாவோடு நெருக்கம். அடிக்கடி சென்னைவரும் நரசிம்மராவின் புத்திரர்களை நல்லவிதமாக கவனித்து அனுப்ப ஏற்பாடு செய்துவிடுவார் ஜெயலலிதா. அதனால்தான் நரசிம்மராவால் ஜெயலலிதாவை புறக்கணிக்க முடியவில்லை என்கிறது தி.மு.க. வட்டாரம்.

கூட்டணிக் கனவு பலிக்காமல் போனதால் பிரதமர் நரசிம்மராவ் ஊழல் பல செய்தவர். ஊழலும்,ஊழலும் தமிழ் நாட்டில் கைகோர்த்துக் கொண்டுள்ளன என்று வர்ணித்துள்ளார் கருணாநிதி.

"முன்னர் நரசிம்மராவைப் புகழ்ந்தீர்களே? காங்கிரசுடன் கூட்டுவைக்க தயார் என்றீர்களே?" என நிருபர்கள் கேட்டதற்கு ஒரே போடாக பதில் சொல்லியிருக்கிறார் கலைஞர்: "அ.தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணி ஏற்பட்டுவிடாமல் தாமதப் படுத்தவே அப் படிச் சொன்னேன். பிரதமர் நரசிம்மராவை நான் புகழ்ந்தது வெறும் வஞ்சகப் புகழ்ச்சி தான்" என்று சொல்லியிருக்கிறார் கலைஞர் கருணாநிதி.

கலைஞரின் விளக்கம், விழுந்தும் மீசையில் மண்படாத கதைதான்.

### ரஜினி தூது

இந்திரா காங்கிரசில் இருந்து பிரிந்த மூப்பனார் தலைமையில் உருவாகியுள்ள தமிழக மாநில காங்கிரசுக்கு முக்கிய இடம் கொடுக்க கலைஞர் கருணாநிதி முதலில் தயங்கினார்.

நாடாளுமன்றத் தொகுதியில் 10, சட்டசபைத் தொகுதியில் 20 இடங்கள் தரலாம் என்று கலைஞர் சொல்லிவிட்டார்.

அதன்பின்னர் விஷயம் அமெரிக்காவில் இருந்த ரஜினியின் காதுக்குப்போனது. ரஜினி போனில் கலைஞரோடு பேசினார்.

"நாடாளுமன்றத்தில் 20, சட்டசபையில் 40 இடங்கள் கொடுங்கள். இந்தக் கூட்டணிக்கு என் ஆதரவும் இருக்கும்." என்றார் ரஜினி. கலைஞர் புத்திசாலி. ரஜினியின் பெயரைப் பயன் படுத்தினால் கிடைக்கக் கூடிய லாபத்தை கணக்கிட்டுப் பார்த்தார். ரஜினி சொன்ன ஏற்பாட்டுக்கு உடன்பட்டுவிட்டார்.

அதனையடுத்துத்தான் ரஜினியின் ஆதரவு நமக்குண்டு. ரஜினிகாந்த் எனது நண்பர். நல்ல பண்பாளர். என்று கருணாநிதி தமது பிரசாரக் கூட்டங்களில் கூறிவருகிறார்.

"என் பெயரையோ, படங்களையோ அரசியலுக்கு பயன்படுத்த வேண்டாம்" என்று அறிக்கை வெளியிட்டுவிட்டு அமெரிக்கா சென்றவர் ரஜினி.

இப்போது அவரது முடிவு மாறிவிட்டது. ரஜினியின் பெயரை மட்டுமல்ல, ரஜினியின் படங்களையும் தி.மு.க.- தமிழக மாநில காங்கிரஸ் கூட்டணியினர் பயன் படுத்துகின்றனர்.

'அண்ணாமலை' படத்தில் பால்க்காரனாக சைக்கிளில் வருவார் ரஜினி. சைக்கிளோடு ரஜினி தோன்றும் படங்கள் தமிழகம் எங்கும் ஒட்டப்பட்டுள்ளன. தமிழக மாநில காங்கிரசின் சின்னம் சைக்கிள் என்பதால் அண்ணாமலை பட போஸ்டர்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தி.மு.க மேடைகளில் முன்பெல்லாம் கட்சிப்பாடல்கள்தான் ஒலிக்கும். ஆனால் இம்முறை ரஜினி படப்பாடல்களும் ஒலிக்கின்றன.

அண்ணா, கருணாநிதி படங்கள் மத்தியில் ரஜினிகாந்த் படமும் பிரசாரங்களில் பயன்படுத்தப்படுகிறது.

### வாக்குக் கேட்கும் எம்.ஜி.ஆர்

தி.மு.க.வுக்காக வாக்குக் கேட்கிறார் எம்.ஜி.ஆர் என்றால் ஆச்சரியப்படுவீர்கள் அல்லவா. கறுப்புக் கண்ணாடி, தொப்பி அணிந்து, எம்.ஜி.ஆர் போல வேடமிட்ட தி.மு.க.தொண்டர்கள் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆரை மலையாளி, தொப்பி, ஊமையன் என்றெல்லாம் முன்னர் கிண்டலடித்தவர்கள் தி.மு.க.வினர் என்பது குறிப்பிடத்தக்கது. அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பது இதுதான்.

வை.கோபால்சாமியின் ம.தி.மு.க.வும் எம்.ஜி.ஆர் பெயரைப் பயன்படுத்துகிறது.

எம்.ஜி.ஆரின் பெயரைச் சொல்லி வாக்குக் கேட்கும் உரிமை தமக்கு மட்டுமே இருப்பதாக சொல்கிறார்கள் அ.தி.மு.க. வினர்.

இதேவேளை சமீபத்தில் ஜெயலலிதாவோடு சேர்ந்தாரல்லவா திருநாவுக்கரசு. அவரது பெயரையே கிண்டலாக மாற்றி விட்டார்கள்.



-அண்ணாமலை படபோஸ்டர்-



திருநாவுக்கரசுக்கு அவரது எதிரிகள் சூட்டியுள்ள புதிய பட்டப்பெயர்; திருதாவுக்கரசு. கட்சி தாவியவர் என்று அர்த்தம்.

### ரஜினியின் தயக்கம்

ரஜினிகாந்த் நேரடியாக அரசியலில் குதிக்கத் தயங்கியதற்கு 'துக்ளக் சோ' போன்ற அனுபவசாலிகள் கூறிய புத்திமதிதான் காரணமாம்.

"ஜெயலலிதாவின் ஊழலுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று கூறும் தகுதி கருணாநிதிக்குக் கிடையாது. ஊழலுக்கு தாத்தாவே அவர்தான். ஆனால் ஜெயலலிதாவா, கருணாநிதியா என்று ஒப்பிட்டால் கருணாநிதி பரவாயில்லை. ஜெயலலிதாவை வீழ்த்த கலைஞரை பாவிக்கலாம். ஊழல் இல்லாதவர் என்று பாராட்ட முடியாது.

ரஜினி விசுவாசியாக நடிக்கும் ஆர்.எம்.வீரப்பனும் உத்தம புத்திரனல்ல. அறநிலையத்துறை அமைச்சராக இருந்த போது, திருச்செந்தூர் முருகன் கோயிலில் இருந்த தங்கவேல் காணாமல் போனது. எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் நடந்தது அது. வீரப்பனுக்கு எதிராக அப்போது பாதயாத்திரை நடத்தியது தி.மு.க. "திருடிய வேலை திருப்பிக்கொடு" என்றது தி.மு.க.

இம்முறை ஆர்.எம்.வீரப்பன் தனது ஆதரவை கலைஞருக்கு வழங்கியுள்ளார். 'வரவேண்டிய இடத்துக்கு வந்துவிட்டார் வீரப்பன்" என்று கலைஞரும் வரவேற்றுள்ளார்.

இவ்வாறானவர்களை நம்பி அரசியலில் ஈடுபட வேண்டாம். உங்கள் இமேஜ் கெட்டுவிடும். தனிக் கட்சி தொடங்கினால்தான் நல்லது. இத் தேர்தலில் தற்போது இருப்பவற்றில் நல்ல அணியாகப் பார்த்து உங்கள் ஆதரவை தெரிவியுங்கள். அதன் மூலம் உங்கள் சொல்லுக்கு எந்தளவு செல்வாக்கு உண்டு என்பதையும் நாடிபிடித்தறியலாம். பின்னர் தனிக் கட்சி தொடங்கலாம்" என்று ரஜினிக்கு பலத்த ஆலோசனை சொல்லப்பட்டதாம்.

அந்த யோசனைகள் சரி என்று பட்டதால்தான் அமெரிக்காவுக்குப் பறந்தார் ரஜினி.

ரஜினிக்கு மூப்பனார் மீது தனி மரியாதை இருக்கிறது. காங்கிரஸ் கட்சியில் இருந்தும்கூட பதவிக்கு ஆசைப்படாத மனிதர் மூப்பனார். எனவே மூப்பனார் ரஜினியை பிரசாரத்திற்கு அழைத்தால் ரஜினியால் அதனை தட்ட முடியாமல் போகலாம் என்கிறார்கள்.

அரசியலில் குதிப்பாரா இல்லையா என்பதற்கு புதிர் போட்ட ரஜினி, இப்போது தேர்தல் பிரசாரத்திற்கு வருவாரா மாட்டாரா என்பதிலும் புதிர் போட்டுக் கொண்டிருக்கிறார்.

BRIGHT ன் தபால் மூலம் கல்வித்திட்டம்
மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க
பெயர்: ......................
விலாசம்: ......................
BRIGHT TRAINING CENTRE
S-27, FIRST FLOOR, P.O. BOX. 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL: 434770

விளம்பரப் பகுதி

வெளிவந்துவிட்டது...
வெற்றிக்கனி ஆண்டு 5
இதழ் 7, இதழ் 8
கல்வி மஞ்சரி O/L
EFFECTIVE ENGLISH WITH GRAMMAR 1 & 2
BRIGHT BOOK CENTRE
S-27,First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770

ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்
ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 11வரை
உங்கள் வசதிக்கேற்ப ஒழுங்குகள் செய்து தரப்படும்.
தொடர்பு கொள்க:—
23, மகேஸ்வரி வீதி, கொழும்பு—06.
தொலைபேசி: 581539

பரபரப்புடன் விற்பனையாகின்றது
WILLS WORLD CUP 1996
நினைவுகள்
96 வில்ஸ்கிண்ண முழு விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன
84 பக்கநூல்
விலை 65/-
பிரதிகளைப் பெற மணியோடர் அனுப்பவேண்டிய முகவரி
P.M.Puniyameen. 14, Udatalawinna, 1212.
Poobalasingham Book Depot
340, Sea Street, Colombo-11 Tel: 422321

நாடுவிட்டு நாடு சென்று தொழில் நாடுவோரின் நம்பிக்கை மிக்க முகவர் நிலையமான
TRANS GULF (PVT) LTD.
வழங்கும்
வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்
சவூதி அரேபியாவில்
ஜித்தா, தாயிப், மக்கா, மதீனா, ரியாத், தமாம் போன்ற நகரப் பகுதிகளில் பாதுகாப்பான இடங்களில் உடனடி வேலைவாய்ப்புகள் உண்டு.
* முஸ்லிம் பணிப்பெண்கள்
* முஸ்லிம் அல்லாத பணிப்பெண்கள்
* வீட்டுச் சாரதிகள் (முஸ்லிம்/முஸ்லிம் அல்லாதவர்)
* சாரதி/பணிப்பெண் சோடி (Couples) (முஸ்லிம்/முஸ்லிம் அல்லாதவர்)
இலவசம்
• உணவு, தங்குமிடம் • இலங்கை அரசாங்க கட்டணம்
• வைத்திய வசதி • கொழும்பில் மருத்துவக் கட்டணம்
• சவூதி போக, வர விமான டிக்கட் • கொழும்பில் விமான நிலையக் கட்டணம்
முஸ்லிம் பணிப்பெண்களுக்கு செல்லுமுன் 3 மாத சம்பளம் முற்பணம்
இவற்றுடன்
* கொழும்பிலிருந்து சவூதியில் வேலை செய்யுமிடத்துக்கு நேரடி விமானப்பயணம். (முன்பு போல் பஹ்ரைன் போகத்தேவையில்லை.)
* சவூதியில் வேலை செய்யும் வீட்டின் விலாசம், டெலிபோன் நம்பர், போவதற்கு முன் இங்கேயே கொடுக்கப்படும். நிம்மதியான பயணத்துக்கு இவைகள் உறுதுணைகளாகலாம்.
டுபாய், அபுதாபி, பஹ்ரைன், ஒமான், கட்டார், ஜோர்தான், லெபனான், குவைட், சிங்கப்பூர்
முதலான நாடுகளில்
* முஸ்லிம் பணிப்பெண்கள்
* முஸ்லிம் அல்லாத பணிப்பெண்கள்
* கல்ப்/குவைட் லைசன்ஸ் சாரதிகள்
* பாஸ்போர்ட் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
* பாஸ்போர்ட் இல்லாதவர்களுக்கு பாஸ்போர்ட் எடுப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
* நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாதவர்கள் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.
தயவு செய்து தொடர்புகொள்ளவும்:
TGL
ட்ரான்ஸ் கல்ப் (பிரைவெட்) லிமிடட்
இல. 65, முதலாம் மாடி, ஹொஸ்பிடல் வீதி, கோட்டை, கொழும்பு 1.
(ஹில்டன் ஹோட்டலுக்கு அருகாமையில்)
போன்: 541076, 329258, 335624
சப் ஏஜன்ட்களுக்கு விசேட சலுகைகள் உண்டு.
அரச அங்கீகார இலக்கம். 742
AL No. 742 / Advt / 02 / 96

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S. மணி
மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030

பேனா நண்பர்
110 புகைப்படங்களுடன் 300 நண்பர்களின் விபரங்களடங்கிய, அகில உலக பேனா நண்பர் சஞ்சிகையின் 14ம் இதழ் தற்போது விற்பனையாகின்றது.
விலை: ரூபா 50/=
வெளிநாடு: 100/=
(தபால் செலவுடன்)
Y.L MOHAMED NAYIEM
25, KIRIGALA ROAD,
MAWANELLA-6185
SRI LANKA.

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை
முதற்தர பாதணி விநியோக ஸ்தாபனமொன்றிற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை. பிணை (SECURITY) அவசியம். மிகவும் வசீகரமான தரகுகளும் சலுகைகளும் வழங்கப்படும்.
உடன் விண்ணப்பிக்கவும்:—
சிட்டி ஷூ கம்பனி (பிரைவேட்) லிமிட்டட்,
129, காலி வீதி, பள்ளி-முல்லை,
பாணந்துறை.

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHIATRIST)
அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.
இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.
தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.
வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம்.
மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.
ஏப்ரல் 20 முதல் 28 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 மே 4, 5, 6 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஓட்டமாவடியிலும், மே 11,12,13 கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR.P.ARUMUGAM No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# துறைமுகத்தில் தவறிய குறி

எக்ஸ்ரே ரிப்போர்ட்

தலைநகர்வரை கடற்புலிகளின் படகுகள் வந்து செல்வது குறித்து ஏற்கனவே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் வெளியிட்டிருந்தோம்.

12.04.96 அன்று கொழும்பு துறைமுகத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் எக்ஸ்ரே ரிப்போர்ட் தகவலை உறுதிப்படுத்தி விட்டது.

கொழும்புக்கு வரும் கடல்வழிப்பாதை நன்கு பழக்கப்பட்ட நிலையில்தான் துணிச்சலான கடல்வழித்தாக்குதலுக்கு கடற்புலிகள் திட்டமிட்டனர்.

கொழும்பிலுள்ள முகத்துவாரம் கடற்கரைவரை கடற்புலிகளின் படகுகள் முன்னரே வந்து சென்றுள்ளன.

எந்தவொரு தாக்குதலுக்கும், தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்பாக நோட்டமிட்டு நிலவரம் அறியும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுண்டு.

எனவே–12.04.96 தாக்குதலுக்கு முன்பாக, கொழும்பு துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் கடற்புலிப் படகுகள் வந்து நோட்டமிடும் வேலையைச் செய்திருக்க வேண்டும்.

மீன்பிடிப்பவர்கள் போல மீன்பிடிப் படகுகளில் வந்தும் தூரத்தில் நின்று நோட்டமிட்டிருக்கிறார்கள்.

சித்திரைப் புதுவருடத்திற்கு முன்பு தான் தாக்குதல் நடத்தப்படவேண்டும் என்பது முன்கூட்டியே செய்த முடிவு.

யாழ்ப்பாணத்தில் படையினர் நிலை கொண்டிருக்கும் போது தலைநகரில் புதுவருட கொண்டாட்டங்கள் களை கட்டமுடியாது என்பதை சிங்கள மக்களுக்கும் உணர்த்துவதே புலிகளது நோக்கம்.

மற்றொரு நோக்கமும் இருந்தது. மூன்றாம் கட்ட ஈழப்போர் கடந்த ஆண்டு ஏப்ரல் 19 இல்தான் ஆரம்பித்தது.

திருமலை துறைமுகத்தில் கடற்கரும்புலிகள் நீரடி நீச்சல் மூலம் ஊடுருவி கடற்படைக்கப்பல்களை தகர்த்தனர். மூன்றாம் கட்ட ஈழப்போர் கடற்புலி தாக்குதல் மூலமே ஆரம்பித்தது.

எனவே மூன்றாம் கட்ட ஈழப்போரின் ஒருவருட பூர்த்தியையும் கடற்புலிகளது பாரிய தாக்குதலுடன் நினைவுகூரவே புலிகள் விரும்பினார்கள்.

தமிழ் ஈழத்தின் தலைநகர் என்று சொல்லப்படும் திருமலை துறைமுகத்தில் ஆரம்பித்த யுத்தம், இலங்கையின் (புலிகளின் கருத்துப்படி சிறிலங்காவின்) தலைநகரில் உள்ள துறைமுகத்தில் வந்து நிற்கிறது. இது ஓராண்டில் ஏற்பட்ட வளர்ச்சி என்பதை நிரூபிக்கவே புலிகள் முற்பட்டனர்.

ஆனால் காகம் இருக்க பனம்பழம் விழுந்ததுபோல ஒரு சம்பவம் நடந்தது. கடற்புலிகளது தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர் கொழும்பு துறைமுகத்தில் ஆயுதக் கப்பல் ஒன்றும் தரித்து நின்றது.

அக்கப்பலில் இஸ்ரேலில் இருந்து வாங்கப்பட்ட குண்டுவீச்சு விமானங்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. கடற்புலிகளது தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னரே, 11.04.96 அன்று இரவு கப்பலில் இருந்து விமானங்கள் இறக்கப்பட்டுவிட்டன.

அக் கப்பல் வந்து நிற்கும் செய்தி அறிந்தே கடற்புலிகள் தாக்க வந்திருக்கலாம் என்று கூறப்படுவது பொருத்தமாக இல்லை.

ஏனெனில், அவ்வாறான ஒரு கப்பலை குறிவைத்து புலிகள் வந்திருந்தால் முதல் இலக்காக அக்கப்பல்தான் இருந்திருக்க வேண்டும்.

ஆனால், நீரடி நீச்சல் மூலம் முதலில் முன்னேறிய இரண்டு கடற்கரும்புலிகளும் துறைமுகத்திற்குள் பிரவேசிக்கும் நோக்கத்தோடு நெருங்கியிருக்கிறார்கள்.

அவ்வாறு நெருங்கியதை குறிப்பிட்ட இடத்தை சமீபித்துவிட்டோமோ என்று அறிய நீருக்குமேலே தலையை உயர்த்திப் பார்த்திருக்கிறார்கள்.

அச்சமயத்தில் துறைமுகத்தில் நின்ற தொழிலாளர்கள் அவர்களைக் கண்டு விட்டார்கள்.

உடனே இரண்டு கடற்கரும்புலிகளும் கடலில் தவறிவிழுந்து கரைசேர முயல்பவர்களைப் போல, தங்களைக் காப்பாற்றுமாறு குரல் கொடுத்திருக்கிறார்கள்.

அதனை நம்பாத தொழிலாளர்கள் கடற்படையினரிடம் ஓடோடிச்சென்று தகவல் சொல்ல, காவலுக்கு நின்ற கடற்படையினர் ஓடிவந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள்.

தாம் மாட்டிக்கொள்ளப்போகிறோம் என்பதை உணர்ந்ததும் கடற்கரும்புலிகள் இருவரும் கழுத்தில் தாம் நின்ற இடத்திலேயே தம்மை வெடிக்கவைத்திருக்கிறார்கள். இது நடந்தது அதிகாலை 5.45 மணியளவில்.

கடற்புலிகளது தாக்குதல் திட்டப்படி முதலில் இரண்டு கடற்கரும்புலிகள் துறைமுகத்திற்குள் சென்று மனிதக் குண்டாக வெடிக்கவேண்டும். அதனைத் தொடர்ந்து துறைமுகம் கொந்தளிக்கும். காவலுக்கு நிற்கும் கடற்படையினரும் திசைதிருப்பப் போவார்கள்.

அந்த நேரத்தில் மேலும் நான்கு கடற்கரும்புலிகள் துறைமுகத்தில் தரித்து நிற்கும் எரிபொருள் கப்பல் உட்பட, கொள்கலன் மாற்றுக் கப்பல் போன்றவற்றை தகர்க்க வேண்டும்.

அதனையடுத்து கடற்புலிகளது படகு துறைமுகத்திற்குள் ஊடுருவும். அதில் இருக்கும் மூன்று கடற்புலிகள் ஆர்.பி.ஜி.ரக ஆயுதங்களால் துறைமுக கட்டிடங்களை நோக்கித் தாக்கிக்கொண்டு உள்ளே புகுந்தும் தாக்குவார்கள்.

கடற்புலிகளது திட்டம் அதுதான். மிக நுட்பமாக திட்டமிட்டுக் கொடுத்திருக்கிறார் கடற்புலிகளது தளபதி சூசை.

ஆனால், முதலில் சென்ற இரண்டு கரும்புலிகளது தவறால் எதிர்பாராத சம்பவம் நடந்துவிட்டது.

அந்த கடற்புலிகளும் வெடித்தவுடன், ஏனைய இரண்டு கரும்புலிகளும் கடல் நடுவே நின்று தடுமாறியிருக்கின்றனர்.

அதே சமயம் கடற்புலிகளது படகில் இருந்து துறைமுகத்தை நோக்கி ஆர்.பி.ஜி. தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆனால் கடற்புலிகளது படகால் துறைமுகத்தை நெருங்க முடியவில்லை. உஷாராகி விட்ட கடற்படையினர் தாக்குதலை ஆரம்பித்து விட்டமையால் அதனை உடைத்து உட்புக முடியவில்லை.

கடற்புலிகள் தமது படகிலிருந்து ஏவிய ஆர்.பி.ஜி. ரொக்கட்டுக்கள் கப்பல்கள் சிலவற்றில் பட்டு சேதப்படுத்தின. அவர்களது தாக்குதல்களும், கடற்படையினரின் பதிற் தாக்குதலும் கொழும்பை அதிரவைத்துக் கொண்டிருந்தன.

அதேசமயம் கடற்படையினரின் தாக்குதலில் நீரடி நீச்சல் மூலம் துறைமுகம் நோக்கிவந்த மேலும் இரு கடற்கரும்புலிகளும் பலியானார்கள்.

தாக்குதல் எதிர்பார்த்தபடி நடக்க வில்லை என்பதால் கடற்புலிகளது படகு திரும்பிச் சென்றது. அதில் மூன்று கடற்புலி கள் இருந்தனர்.

மீன்பிடிப்பவர்கள் போலவே வர வேண்டும் என்பதால் கடற்புலிகள் அதிவேக பிளாஸ்ரிக் படகை பயன்படுத்தவில்லை. மரத்தால் செய்யப்பட்ட படகில்தான் வந்திருந்தனர்.

அதனால் சற்றுத் தாமதமான நிலையில் கடலில் தேடுதலை ஆரம்பித்தபோதும், அப்படகை துரத்திச்சென்று கடற்படையினரால் தாக்கக்கூடியதாக இருந்தது.

அப்படகில் இருந்த ஐந்து கடற்கரும் புலிகளும் படகோடு சேர்த்து பலியானார்கள்.

மொத்தம் 9 கரும்புலிகள் பலியானார்கள். அதில் ஆறுபேர் கடற்புலிகளது நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த கடற்கரும்புலிகள்.

இத்தாக்குதலை அடுத்து பல்வேறு ஊகங்கள், வதந்திகள் என்பன கிளம்பியிருந்தன.

கடற்கரும்புலிகளால் கப்பல்கள் சில தகர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதப் பட்டது.

ஆனால், அவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தால் மூடிமறைப்பது சுலபமானதல்ல.

துறைமுகத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் மூலம் எப்படியாவது செய்தி வெளியே கசியவே செய்திருக்கும்.

தென்னிலங்கையின் ஆங்கில, சிங்கள பத்திரிகைகள், குறிப்பாக எதிர்க்கட்சிக்கு சார்பான பத்திரிகைகள் கப்பல் ஏதாவது தகர்க்கப்பட்டிருந்தால் அதனை வெளியிடத் தயக்கம் காட்டியிருக்கப் போவதில்லை.

யுத்தத்தில் அரசாங்கத்தின் வெற்றியை விட, புலிகளிடம் வாங்கும் அடியைத்தான் எதிர்க்கட்சி உள்ளூர விரும்புகிறது.

மத்திய வங்கி தாக்குதலில் எதிர்க்கட்சியும், அதற்கு சார்பான பத்திரிகைகளும் நடந்துகொண்ட முறையே அதற்கு உதாரணமாகும்.

கொழும்பு துறைமுகத்தில் புலிகள் தாம் நினைத்ததை முடித்திருந்தால், எதிர்க்கட்சி துள்ளிக் குதித்திருக்கும். "கையாலாகாத அரசாங்கத்தால் துறைமுகத்தைக் கூட பாதுகாக்க முடியவில்லை" என்று குற்றம் சாட்டியிருக்கும்.

துறைமுகத்தில் உள்ள தொழிலாளர்களில் பலர் ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தில் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள். எனவே– துறைமுகத்தில் நடந்தது என்ன என்ற விபரத்தை ஐ.தே.கட்சி சுலபமாக அறிந்திருக்கும்.



தாக்குதலின்பின் கடலில் தேடுகிறார்கள்

## துறைமுகவாயில்வரை கடற்கரும்புலிகள் வரமுடிந்ததே பெரிய விஷயம். காலநிலை சீராக இருந்திருந்தால் குறித்த நேரத்தில் நினைத்ததை முடித்திருப்பார்.

நாரதர்

இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். கொழும்பு துறைமுகத்தில் விமானங்களை ஏற்றிவந்த கப்பல் தரித்து நின்ற விடயம் இரகசியமானது.

ஆனால், செய்தி நிறுவனங்கள் அதனை மோப்பம் பிடித்து அறிந்து கொண்டன. அதனால்தான் அக் கப்பல் வந்த செய்தியறிந்து புலிகள் தாக்க வந்தார்களோ என்று செய்தி நிறுவனங்கள் சில சந்தேகம் வெளியிட்டன.

அதனை அறிய முடிந்த செய்தி நிறுவனங்களால், கப்பல் ஒன்று தகர்க்கப்பட்டதா இல்லையா என்பதை அறிவது கடினமான விஷயமல்ல.

தவிர, கப்பல் ஒன்று தகர்க்கப்பட்டால் ஒன்றில் அது தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கும். அல்லது மெல்ல மெல்ல மூழ்கிக் கொண்டிருக்கும். மூழ்குவதற்கு நீண்ட நேரம் பிடிக்கும் என்பதால் தகவலை மூடி மறைக்க முடியாது.

சம்பவம் நடந்த அன்றே பத்திரிகையாளர்கள் துறைமுகத்தை பார்வையிட அனுமதிக்கப்பட்டார்கள். துறைமுகத்தை அண்டிய கடல் பகுதியை அவர்கள் நன்கு கவனிக்கவும் முடிந்தது.

எனவே–கப்பல் எதுவும் முற்றாக தகர்க்கப்படவில்லை. புலிகளது குறி தவறிவிட்டது. குறி சரியாக இருந்திருந்தால் துறைமுகம் பாரிய அழிவுக்கு உட்பட்டிருக்கும் என்பது தான் உண்மை.

கொழும்பு துறைமுக தாக்குதல் தொடர்பாக புலிகள் வெளியிட்டுள்ள செய்தி என்ன?

13, 15ம் திகதிகளில் புலிகள் வெளியிட்ட மூன்று அறிக்கைகளும் முன்பின் முரணாக இருக்கின்றன.

13.04.96 இல் வெளியிடப்பட்ட புலிகளின் செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

"நேற்று அதிகாலை 1.30 மணிக்கு கடற்கரும்புலிகள் நடத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதலில் சிறீலங்கா கடற்படையினருக்குச் சொந்தமான மூன்று அதிவேக தாக்குதல் படகுகளும், மூன்று விநியோகக் கப்பல்களும் முற்றாகத் தகர்க்கப் பட்டுள்ளன. இவ் வெற்றிகரமான தாக்குதலை நடத்திய இரண்டு பெண் கடற்கரும்புலிகள் உட்பட ஒன்பது கடற்கரும்புலிகள் வீரச் சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

15.03.96 அன்று புலிகள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டது.

முகத்துவாரத்திலிருந்து நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த ஆறு கடற்கரும்புலிகள் புறப்பட்டுச் சென்றனர். நள்ளிரவு 12 மணிக்கு துறைமுக வாயிலை அடைந்த அவ்வணி முதலில் எரிபொருள் கப்பலுக்கும், 700 மீற்றர் தூரத்தில் தரித்து நின்ற கொள்கலன் கப்பலுக்கு நேரக் கணைப்புக் குண்டுகளைப் பொருத்தினர். பின்னர் துறைமுகத்தைவிட்டு வெளியேறிய மூன்று கடற்கரும்புலிகளும், 2700 மீற்றர் தொலைவில் நின்ற சிறீலங்கா கடற்படைக் கப்பல்கள் மூன்றை தம்முடன் கொண்டு சென்ற வெடிகுண்டுகளோடு வெடிக்கவைத்தனர். அதே நேரம் மூன்று சரக்குக் கப்பல்களும் வெடித்துச் சிதறின. என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

புலிகளது உரிமை கோரலில் உள்ளது படி மொத்தம் ஆறு கப்பல்கள் தகர்க்கப் பட்டுள்ளன. எரிபொருள் கப்பலும் அதில் ஒன்று எனக்கூறியுள்ளனர்.

எரிபொருள் கப்பல் சற்றுத் தாக்கப்பட்டிருந்தாலே பற்றி எரிந்திருக்கும். ஏனைய கப்பல்களையும் பாதித்திருக்கும். தவிர மூடி மறைக்கவும் முடியாது. கிட்டத்தட்ட கொலன்னாவ எரிபொருள் குதத் தாக்குதல் போன்ற விளைவுகள் ஏற்பட்டிருக்கும்.

துறைமுகத்தில் முதலாவது வெடிச் சத்தம் 5.45 மணிக்குத்தான் கேட்டது. அதன் அதிர்வு நகரின் பல பகுதிகளில் உள்ள மக்களுக்கு கேட்டது.

ஆனால் புலிகள் அதிகாலை 1.30 மணிக்கு மொத்தம் ஆறு கப்பல்கள் வெடித்துச் சிதறியதாக தெரிவிக்கின்றனர். ஆறு கப்பல்கள் வெடித்துச் சிதறி யிருந்தால் அதனால் ஏற்படும் சத்தம் கொழும்பு நகரரையே 1.30 மணிக்கு உலுக்கி எடுத்திருக்கும்.

முகத்துவாரத்தில் இருந்து புறப்பட்டதாக புலிகள் கூறுவதை தந்திரோபாயமான கூற்றாக எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால், உண்மையில் மன்னார் கற்பிட்டியில் இருந்துதான் கடற்கரும்புலிகளை ஏற்றிவந்த படகு புறப்பட்டிருக்க வேண்டும்.

அதனால்தான் அதிகாலை இருளோடு இருளாக துறைமுகப் பகுதியை நெருங்கும் திட்டம் தவறியது. அவர்கள் வந்தது விசைப்படகாக இருந்திருந்தால் குறிப்பிட்ட நேரதில் குறித்த இடத்திற்கு வந்து சேர்ந்திருப்பர்.

மரப்படகு என்பதால் குறைந்த வேகத்தில் தான் வரமுடிந்திருக்கிறது. கடல்நிலை காரணமாக தாமதம் ஏற்பட்டிருக்கலாம். அதனால் அதிகாலை ஒரு மணிக்கு முன் வரவேண்டியவர்கள் அதி காலை 5 மணிக்குத்தான் துறைமுகத்தை அண்டிய கடல் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

நன்றாக விடியத் தொடங்கிய பொழுது என்பதால்தான் கடற்கரும்புலிகளை தொழிலாளர்கள் சிலர் காணக்கூடியதாக இருந்தது.

புலிகள் திட்டமிட்டபடி பொழுது புலர முன்னர் வந்து சேர முடிந்திருந்தால் அத் தொழிலாளர்கள் தூங்கிக் கொண்டிருந்திருப்பர்.

ஏப்ரல்–19.1995 இல் திருமலை துறைமுகத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் நள்ளிரவையொட்டியே நடத்தப்பட்டது.

இவ்வாறான தாக்குதல்களுக்கு பொழுது விடிய முன்னர் நேரம் குறிப்பது தான் வழக்கம். அதுதான் சுலபம்.

எனவே– முகத்துவராத்தில் இருந்து புறப்பட்டிருந்தால் குறித்த நேரத்தில் வரமுடியாமல் இருந்திருக்காது.

துறைமுகத்தாக்குதலில் புலிகளது குறி தவறியதற்கு இரண்டு காரணங்கள் பிரதானம்.

**ஒன்று: குறித்த நேரம் தவறி விடிந்த பின்னர் தாக்குதலை ஆரம்பித்தது.**

**இரண்டு: கடற்கரும்புலிகள் இருவர் தொழிலாளர்களது கண்ணில்பட்டது.**

தமது தரப்பில் லெப்டினன்ட் கேர்ணல் தரத்தில் இருந்த முக்கிய தளபதி உட்பட 9 கடற்புலிகளை இழந்தமையால் மிகைப்படுத்திய உரிமை கோரலை புலிகள் வெளியிடவேண்டியதாயிற்று.

மிகைப்படுத்திய உரிமை கோரலை புலிகள் வெளியிட்டது இதுவே முதல் முறையாகும்.

வடக்கிலும் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ள நிலையில் தலைநகரில் நடத்திய பாரிய தாக்குதல் தோல்வியில் முடிந்தது என்று சொல்வது புலிகளுக்கு சங்கடமான விஷயம்தான்.

இதேவேளை அத் தாக்குதலை முறியடித்துவிட்டதாக அரசாங்கம் துள்ளிக் குதிப்பதில் நியாயம் இருப்பதாக தெரியவில்லை.

தலைநகர்வரை புலிகளது படகுகள் வந்து செல்கின்றன என்று கடற்படைக்குத் தெரியும். அவ்வாறு வந்து செல்லும் கடற்புலிகள் துறைமுகத்திற்குள்ளும் வரமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

பொருளாதார இலக்குகள் மீது புலிகள் குறிவைத்துவிட்டார்கள் என்பது ரகசியமல்ல. அதனால் துறைமுகத்திற்கு எந்நேரமும் ஆபத்து என்பது எதிர்பார்க்கப்பட வேண்டியதுதான்.

அப்படியிருந்தும் துறைமுக வாயில் வரை கடற்கரும்புலிகள் வந்திருக்கிறார்கள் என்பதே பெரிய விஷயம்.

கடல் காலநிலை சரியாக இருந்தும், குறித்த நேரத்தில் வந்து சேர்ந்து கடற்புலிகள் தமது தாக்குதலை தொடுத்திருந்தால் துறைமுக நிலவரம் என்னவாகியிருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

தாக்குதலுக்காக வந்த ஒன்பது கடற்கரும்புலிகளில் எவரும் திரும்பிச் செல்லும் உத்தேசத்தோடு வரவில்லை.

அதனால்தான் மரப்படகில் வந்தனர். திரும்பிச் செல்லும் நோக்கமிருந்தால் விசைப்படகில்தான் வந்திருப்பர். தவிர மரப்படகில் வெடிமருந்தும் நிரப்பப்பட்டிருந்தது. அப்படகு தாக்கப்பட்டபோது வெடித்துச் சிதறிய சத்தம் பயங்கரமாக் கேட்டது.

கடற்புலிகளது முக்கிய தளபதி ஒருவரே கடற்கரும்புலியாக அனுப்பப்பட்டது இதுவே முதல் முறையாகும். அதன்மூலம் எந்தளவு பாரிய தாக்குதலுக்கு திட்டமிடப்பட்டது என்பதை ஊகிக்க முடியும்.

தாக்குதல் தோல்வியில் முடிந்திருந்தாலும், தலைநகரில் எங்கு வேண்டுமானாலும் தம்மால் தாக்கமுடியும் என்பதை புலிகள் நிரூபித்துள்ளனர் என்பதை மறுக்க இயலாது.

அதுமட்டுமல்ல, கொழும்புத் துறைமுகத்திற்கு இருக்கக்கூடிய ஆபத்து விலகி விட்டது என்றும் முடிவு செய்ய இயலாது.

முயற்சி செய்து கொண்டிருப்பது, அந்த முயற்சி தோல்வியில் முடிந்தாலும் தளராமல் முயற்சியைத் தொடர்வது என்பது பிரபாகரனின் இயல்பு. பிரபாவின் தனித்துவமும் அதுதான்.

எனவே–தலைநகர துறைமுகம் புலிகளின் குறியில் இருந்துகொண்டிருப்பதாகவே அர்த்தம்.

## அதிரடி அய்யாத்துரை



முன்பெல்லாம் பட்டாசு வாங்குவதென்றால் சத்தம் பலமாக இருக்க வேணும் எண்டுதான் கேட்டு வாங்குவது வழக்கம். இம்முறை தலைநகரில் புதுவருசக் கொண்டாட்டத்திற்கு பட்டாசு வாங்கும்போது சத்தம் பெரிசாக இல்லாத பட்டாசு இருக்குதோ எண்டு கேட்கவேண்டிய சூழ்நிலை. அதனால் பல கடைக்காரருக்கு குஷி. பழைய ஸ்ரொக்கெல்லாம் எடுத்து வித்துப்போட்டினம். வெடிக்காவிட்டாலும் போய் கேட்க முடியாதல்லோ. அதுதான் சத்தமில்லாத பட்டாசு என்று சொல்லியிருப்பினம். மறு பேச்சுக்கு இடமில்லை.

சுவிஸில் ரெண்டு எழுத்தாரை கைது செய்யக் காரணம் அங்குள்ள பத்திரிகைகள்தானாம். பொலிசார் என்ன செய்கிறார்கள். இலங்கைத் தமிழர்கள் தொல்லை அதிகமாகிறது எண்டு எழுதிப் போட்டினமாம். பொலிசாருக்கு ரோசம் வந்திட்டுது. ரெண்டு எழுத்து பொறுப்பாளர் உட்பட பலரை கைது செய்து போட்டினமாம். அது மட்டுமோ, சுவிஸில் உள்ள இலங்கைத் தமிழர்களிடம் போய், "உங்களிடம் ரெண்டு எழுத்தார் பணம் கேட்டவையோ?" எண்டும் பொலிசார் விசாரிக்கினமாம். சுவிஸ் கடுமை காட்டத் தொடங்கியிருக்கு.

துறைமுக விடயத்திலை முன்கூட்டியே தகவல் கிடைச்சத்தான் ரெடியாக இருந்தவையாம். அதுதான் வானொலி சொன்ன செய்தி. முன்கூட்டியே தெரிந்தும் உள்ளே வரும்வரை என்ன செய்து கொண்டிருந்தவையாம். நடுக்கடலில் வைத்தே மடக்கியிருக்கலாம் அல்லோ என்டு நான் கேட்டால் அது நியாயம்தானே! ரெண்டு எழுத்தாரைக் குழப்பச் சொல்லப்பட்ட செய்தியோ அது?!

யாழ் குடாநாட்டில் வானம் கறுக்கவில்லை. பேய் மழை கொட்டுதாம். அது என்ன மழையோ?! வானம் பொழிகிறது. பூமி அழுகிறது. "அமைச்சரே! வானம் மும்மாரி பொழிகிறதா?" 'அரசே உமது புண்ணியத்தால் தினமும் பொழிகிறது." என்டு வசனம் எழுத ஆசை.

தலைநகரில் முஸ்லிம் காங்கிரஸ்-தமிழ் கட்சிகள் சந்திப்பு நடந்தது. கலந்து கொண்டவர்கள் அனைவருமே செந்தமிழில் கூட்டம் பேசி வாக்குக் கேட்கும் அரசியல் வாதிகள். ஆனால் கலந்துரையாடலில் தூய ஆங்கிலத்தில்தான் உரையாடினார்களாம். மொழி உரிமைக்காக களம் பல கண்ட கூட்டான கட்சித் தலைவர்கள்கூட மறந்தும் தமிழில் உரையாடவில்லையாம். சிவமான தலைவரால் இதனை மறுக்க முடியுமோ? இனப்பிரச்சனைக்கு தீர்வு கண்டு தமிழ் மக்களை வாழவைக்கத் தலைவர்கள் ஆங்கிலத்தில் திங்கிங். வாழ்க தமிழ்!

ஐநூறு, ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் செல்லாமல் போகலாம் எண்ட செய்தி வடக்கில் பரவியதாம். உடனடியாக தங்கள் கையிருப்பை கொண்டுபோய் வங்கியில் போட்டனராம் பலர். இன்னொரு விஷயம் தெரியுமோ? ரெண்டு எழுத்தாரும் தங்கள் கையிருப்பை அரச வங்கியில் போட்டதாகத் தகவல். எல்லாம் ஒரு முன்னெச்சரிக்கைதான்.

திருவானமலையின் நகரத் தலைவரை பச்சை உடையினர் தாக்கியது நிச்சயமாகக் கண்டிக்கப்படவேண்டிய செய்தி. ஆனாலும் வெளியே வராத ஒரு சமாச்சாரத்தையும் சொல்லத்தான் வேண்டும். நகரத் தலைவருக்கும் பச்சை உடையினருக்கும் இடையே முதலில் ஏற்பட்டது வாய்த்தர்க்கம். ஒரு கட்டத்தில் உணர்ச்சிவசப்பட்ட நகரத்தலைவர், "எங்கே அடி பார்ப்போம்." என்றாராம். உடனே எட்டி அடித்தாராம் பச்சை உடைக்காரர். ஒரே அடியில் கீழே விழுந்துவிட்டாராம் தலைவர். சம்பவம் நடப்பதற்கு முதல்நாள்தான் ஒரு தகராறில் ஊர்மக்கள் சிலர் அவரை அடித்தனர். மறுநாளும் அடி. என்ன காலமோ?!

மலையுள்ள பகுதியின் தனித்துவத்தலைவரின் அணியினர் வேலை நிறுத்த முடிவு செய்தது ஒரு பக்கமிருக்கட்டும், தலைவரின் பேரன் பிரதம அம்மையாரின் நலனுக்காக தலைநகரில் விசேட பூஜை செய்தது தெரியுமோ? அதுமட்டுமல்ல பல ஆயிரம் செலவில் தேநீர் விருந்தும் கொடுக்கப்பட்டதாம். அரசியல் என்றால் இப்படிப் பலதும் பத்துமாகத்தான் இருக்குமாக்கும்.

கவிஞர் வைரமுத்து 'தாயின் மணிக்கொடி' படத்திற்காக எழுதியுள்ள பாடல்களை கேட்க முடிந்தது. அதில் பிடித்த வரிகளை உங்களோடு பகிரலாம்தானே.

"நீ காற்று
நான் மரம்
என்ன சொன்னாலும் தலையாட்டுவேன்.

நீ மழை
நான் பூமி
எங்கு விழுந்தாலும் ஏந்திக் கொள்வேன்.

நீ இரவு
நான் விண்மீன்!
நீ இருக்கும்வரைதான்
நானிருப்பேன்!"



படிப்பகம்

www.padippakam.com

# 75 அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது



## இரவோடு இரவாக காணாமல்போன மாணவன்

### இளவயதில மரணம்

இயக்கங்களில் வயது குறைந்தவர்களும் 1983க்கு பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் சிறு வயதினரும் போராட்டத்தில் இணைந்துகொள்வதை தமிழ் இயக்கங்களும் முன்னுதாரணமாகக் காட்டின.

சிறு வயதினரை இயக்கத்தில் இணைத்துக் கொள்வதை ஊக்குவிக்கும் பிரசாரங்களும் இயக்கங்களால் மேற்கொள்ளப்பட்டன.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இருதயநேசன் 86 இல் பலியானார். இராணுவத்தினரோடு ஏற்பட்ட நேரடி மோதலில்தான் அவர் பலியானார்.

இருதயநேசனுக்கு இயக்கத்தில் சேரும் போது 12 வயது. மன்னாரில் உள்ள அரிப்பு என்ற இடத்தில்தான் இருதயநேசனின் சொந்த ஊர்.

பதினைந்து வயதாக முன்னரே இருதயநேசன் பலியாகிவிட்டார்.

அவரது இறுதிச் சடங்கு மன்னாரில் நடைபெற்றது. இருதயநேசனுக்கு புலிகள் விடுத்த அஞ்சலி அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"இருதயநேசன் இயக்கத் தோழர்களுள் இளமையானவனாக விளங்கினான். தாய்நாட்டின் விடுதலையை தன் ஆத்ம தாகமாக நெஞ்சில் ஏற்றி ஆர்வத்துடன் செயல்பட்டான்.

இளவயது காரணமாக சிறீலங்கா இராணுவத்துடன் சண்டையிடச் செல்ல முடியவில்லையே என்று கவலை கொள்வான். அவன் விரும்பிய சந்தர்ப்பம் கிடைத்தது.

புதியதொரு தலைமுறைக்கு அறைகூவலாக அவனது மரணம் அமைந்தது."

மிக இளம் வயதில் பலியான முதல் போராளி இருதயநேசன்தான்.

### புளொட் மீது தடை

1986 நவம்பரில் புலிகள் அமைப்பினர் புளொட் அமைப்பை தடைசெய்யும் முடிவை எடுத்தனர்.

உட்பிரச்சனைகள் காரணமாக புளொட் அமைப்பு தனது பலத்தை ஒன்று திரட்டி செயற்பட முடியாத நிலையில் இருந்தது.

புளொட் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற தீப்பொறி குழுவினர் புளொட் அமைப்புக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அதேநேரத்தில் தமிழ்நாட்டில் தங்கியிருந்தார் உமாமகேஸ்வரன். அங்கும் உட்பிரச்சனைகள் தீவிரமடைந்திருந்தன.

இந்நிலையில் வடக்கு-கிழக்கில் புளொட் அமைப்பினரின் செயற்பாடுகள் மந்தநிலையிலேயே இருந்தன. ஆயுதங்கள் தமிழ்நாட்டில் இருந்தமையால் களத்தில் போதியளவு ஆயுதங்கள் இருக்கவில்லை.

அப்போது யாழ்ப்பாணத்தில் பொறுப்பாக இருந்தவர் மெண்டிஸ். அவர் உடுவிலைச் சேர்ந்தவர். இராணுவ நடவடிக்கைகளில் திறமையுடையவர். எனினும் இயக்கப் பிரச்சனைகள் காரணமாக மெண்டிஸ் தனது திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு போதியளவு கிடைக்கவில்லை.

புளொட் அமைப்பை நாம் தடை செய்யப்போகிறோம் என்று கிட்டு தகவல் அனுப்பினார்.

ஆயுதங்களையும், இயக்க உடமைகளையும் 24 மணிநேரத்தில் தம்மிடம் ஒப்படைக்குமாறும், பொறுப்பாளர்களை சரணடையுமாறும் கிட்டு மெண்டிசுக்கு தகவல் அனுப்பியிருந்தார்.

ஆயுதங்களையும், வானொலி தொடர்பு சாதனங்களையும் புலிகளிடம் ஒப்படைக்க மெண்டிஸ் விரும்பவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்போடு தொடர்பு கொண்டார். ஆயுதங்களையும், வானொலி தொடர்பு சாதனங்களையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பிடம் கொடுத்தார்.

### விசாரணை

அந்த விடயம் எப்படியோ புலிகளுக்குத் தெரிந்துவிட்டது. மெண்டிசைத் தேடத் தொடங்கினார்கள்.

தனது சகோதரி வீட்டில் தலைமறைவாக இருந்தார் மெண்டிஸ்.

புலிகள் இயக்கத்தில் கிட்டுவின் மெய்க்காப்பாளர்களில் ஒருவராக இருந்தவர் சிவபரன். அவரும் மெண்டிசும் சிறு வயதில் இருந்தே நண்பர்கள்.

மெண்டிசின் சகோதரி வீடு சிவபரனுக்குத் தெரியும். புலிகள் இயக்க உறுப்பினர்களோடு அங்கு சென்றார் சிவபரன்.

அவர் வருவதைக் கண்டதும் தப்பிஓட முற்பட்டார் மெண்டிஸ். அப்போது மெண்டிசின் சகோதரி சொன்னார், "ஏன் ஓடப்பார்க்கிறாய். உன் சிநேகிதன்தானே வந்திருக்கிறான்."

மெண்டிசை அழைத்துச் செல்லும் போது சிவபரன் சொன்னார், "அக்கா ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். மெண்டிசை விசாரித்து விட்டு அனுப்பிவிடுவோம்."

யாழ்ப்பாணம் வைமன் வீதியில் உள்ள ஒரு வீட்டில் வைத்து மெண்டிஸ் விசாரிக்கப்பட்டார்.

"ஆயுதங்கள் எங்கே? ஏனைய முக்கியஸ்தர்கள் எங்கே?" என்று கேட்டனர். [illegible] வாய் திறக்கவில்லை.

அடி விழுந்தது. அவரது கை விரல்களில் நகங்கள் பிடுங்கப்பட்டன.

"ஆயுதங்களை ஒப்படைத்தால் விடுதலை செய்து விடுவோம். இல்லாவிட்டால் மண்டையில்தான் போடுவோம்" என்று கிட்டு சொல்லிவிட்டார்.



குண்டு பாய்ந்து பலியானநிலையில் இருதயநேசன்

## இளவயதில் முதலாவது கள மரணம்

ஏற்கெனவே ரெலோ இயக்கத்தை புலிகள் தடைசெய்தபோதும், தமிழ்நாட்டில் அந்த இயக்க முக்கியஸ்தர்கள் சிலர் இருந்தமையாலும், புலிகளிடம் மாட்டாமல் ஏனைய இயக்கங்களின் உதவியுடன் பலர் தப்பிச் சென்றதாலும் ரெலோ இயக்கம் அழியாமல் இருந்தது.

எனவே-புளொட் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் அனைவரையும் தப்பவிடக்கூடாது என்று புலிகள் திட்டமிட்டிருந்தனர்.

மெண்டிஸ் ஆயுதங்களை ஒப்படைத்திருந்தால்கூட அவரைப் புலிகள் விடுதலை செய்திருப்பார்களா என்பது சந்தேகம்தான்.

நீண்டநாட்கள் புலிகளின் சிறையில் மெண்டிஸ் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

சிவபரனை தேடிப்போய் மெண்டிசின் சகோதரி விசாரித்தார். "என் தம்பியை எப்போது வீட்டுக்கு அனுப்பிவைப்பீர்கள்?"

சிவபரன் சொன்னார் "விரைவில் அனுப்பிவைத்து விடுவோம்." சகோதரிக்கு ஓரளவு நிம்மதி.

மெண்டிஸை இனிமேலும் வைத்திருப்பதால் பிரயோசனம் இல்லை என்ற நிலையில் அவருக்கு மரண தண்டனை விதித்தனர் புலிகள்.

"விரைவில் அனுப்பிவைக்கிறோம்" என்று சிவபரன் சொன்னதின் அர்த்தம் பின்னர்தான் மெண்டிசின் சகோதரிக்குப் புரிந்தது.

### காணவில்லை

யாழ் பல்கலைக் கழகத்தில் ராக்கிங் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடக்கூடாது என்று புலிகள் அமைப்பினர் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து தமது முடிவை அறிவித்திருந்தனர்.

அப்படியிருந்தும் சில மாணவர்கள் ராக்கிங் செய்வதில் ஈடுபட்டனர். அந்த மாணவர்களுக்கும் புலிகளுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன.

04.11.86 அன்று இரவு விஜிதரன் என்னும் மாணவர் விடுதியில் தங்கியிருந்தார். ஆயுதம் தாங்கிய சிலர் வந்து அவரை அழைத்துச் சென்றனர்.

அழைத்துச் சென்றவர்கள் புலிகள். புலிகளது முகாம் ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்ட விஜிதரனை அங்கு வரவேற்றவர் கிட்டு.

வரவேற்பு என்றால் அப்படியொரு வரவேற்பு. விஜிதரன் புரட்டி எடுக்கப்பட்டார்.

மறுநாள் காலையில் பல்கலைக்கழகத்தில் பரபரப்பு. விஜிதரனை கடத்தியது யார்,

புலிகள் அமைப்பிடமும், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ் அமைப்புக்களிடமும் சென்று பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் விசாரித்தனர்.

புலிகள் அமைப்பினரும் தமக்குத் தெரியாது என்று கைவிரித்து விட்டனர்.

புலிகள்தான் விஜிதரனைக் கடத்திச் சென்றார்கள் என்பது பல்கலைக்கழக மாணவர்களுக்கு தெரிந்திருந்தது.

நேரடியாக புலிகளை குற்றம் சாட்டினால் விஜிதரனின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதால் பொதுப் போராட்டம் நடத்த முடிவு செய்தனர்.

விஜிதரனை விடுதலை செய். விஜிதரன் எங்கே? இயக்கங்களே பதில் சொல்லுங்கள்? என்று யாழ்ப்பாணமெங்கும் சுவரொட்டிகள் போடப்பட்டன.

### மாணவர் போராட்டம்

தமது கோரிக்கைகள் பலனற்றுப் போனதால் பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

யாழ் பல்கலைக் கழக மாணவரான விமலேஸ்வரன்தான் மாணவர் போராட்டத்தில் முன்னணியில் நின்றார்.

விமலேஸ்வரன் புளொட் இயக்கத்தில் இருந்தவர். பின்னர் அதிலிருந்து ஒதுங்கியிருந்தவர்.

விமலேஸ்வரன் புளொட் இயக்கத் தூண்டுதல்காரணமாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுகிறார். தமக்கெதிராக செயற்படுகிறார் என்று புலிகள் குற்றம் சாட்டினார்கள்.

உண்மையில் பல்கலைக்கழக மாணவர்களது போராட்டத்திற்கு முழு ஆதரவு கொடுத்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புத்தான்.

உண்ணாவிரதப் போராட்டத்தோடு நிற்காமல், பாதயாத்திரையையும் மேற்கொண்டனர் பல்கலைக்கழக மாணவர்கள்.

பாதயாத்திரை வந்த மாணவர்கள்மீது பொதுமக்கள் ஆத்திரம் கொண்டு தாக்குவது போல ஒரு சம்பவத்தை உருவாக்கினார்கள் புலிகள்.

பொதுமக்கள் என்ற போர்வையில் பாதயாத்திரையை குழப்ப முற்பட்டவர்கள் புலிகள் அமைப்பினரே என்பதை இனம் காண்பது கஷ்டமாக இருக்கவில்லை.

விஜிதரனை புலிகள்தான் கடத்தினார்கள் என்பதும் பொதுமக்கள் மத்தியிலும் தெரிய வரத் தொடங்கியது.

விஜிதரன் மட்டக்களப்பை சேர்ந்தவர். அவரது தந்தையார் அருணகிரிநாதனும், தாயாரும் தமது மகனை கடத்திய செய்தியறிந்து யாழ்ப்பாணம் வந்தனர்.

அவர்களை புலிகள் இயக்க முகாமுக்கு அனுப்பிவைத்தனர் மாணவர்கள்.

தாம் விஜிதரனை கடத்தவில்லை. ஆனால், இப்படியெல்லாம் போராட்டம் நடத்தினால் விஜிதரனை கடத்தியவர்கள் விடுதலை செய்ய மாட்டார்கள். அவரை விடுவித்தால் தமது இயக்கப் பெயர் கெட்டுவிடும் என்று யோசிப்பார்கள். போராட்டம் நிறுத்தப்பட்டால் விஜிதரன் ஒரு வேளை விடுதலையாகக்கூடும் என்று தாம் நினைப்பதாக புலிகள் தரப்பிலிருந்து கூறப்பட்டது.

'போராட்டம் நிறுத்தப்பட்டால் விஜிதரனை விடுதலை செய்வோம்' என்பதை புலிகள் மறைமுகமாகத் தெரிவிப்பதாக மாணவர்களில் ஒரு பகுதியினர் நினைத்தனர்.

### அச்சுறுத்தல்கள்

அதே சமயம் விஜிதரனை விடுதலை செய்யுமாறு நடைபெற்ற போராட்டத்தில் முன்னணியில் நின்ற மாணவர்களுக்கு மறைமுக அச்சுறுத்தல்கள் விடப்பட்டன.

கவிஞர் சேரன், விமலேஸ்வரன் போன்ற பலர் பின்னர் கவனிக்கப்படுவார்கள் என்று அவர்கள் காதுகளுக்கு எட்டக்கூடிய வகையில் சிலரிடம் சொல்லியிருந்தனர் புலிகள்.

விஜிதரனின் பெற்றோருக்கும், வேறு சிலருக்கும் விஜிதரன் வேறொரு நாட்டில் வைத்து விடுதலை செய்யப்படுவார் என்று மறைமுகமாக உணர்த்தினார் கிட்டு.

இத்தனையும் நடந்து கொண்டிருந்தபோது விஜிதரன் என்ன செய்து கொண்டிருந்தார்.

கடத்திச் செல்லப்பட்ட அன்றே, அன்று இரவே விஜிதரன் கொல்லப்பட்டுவிட்டார்.

அதனை அறியாமல் விஜிதரனின் பெற்றோர் ஊர் திரும்பினார்கள்.

### புலிகளுக்கு சார்பு

தற்போது புலிகளை கடுமையாக சாடி வருபவர் இந்து ராம் என்றழைக்கப்படும் இந்தியாவின் பிரபல பத்திரிகையாளர்.

முன்னர் அவர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அனுதாபியாக இருந்தார். ஈ.பி.ஆர்.எல்.எஃப். உட்பிரச்சனை ஏற்பட்டபின்னர் அவர் புலிகளுக்கு சார்பானவராக மாறினார்.

புரொண்ட் லைன் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த 'ராம்' பிரபாகரனுக்கு அடுத்தபடியாக கிட்டுமீது பிரியம் கொண்டிருந்தார்.

புரொண்ட் லைன் இதழில் கிட்டுவின் பேட்டியை சிறப்பாக வெளியிட்டார்.

கிட்டு தொடர்பாக ராம் கொடுத்த விவரணம் இது:

"தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட தளபதி சாமான்ய உயரத்திலும் சிறிது குள்ளமானவர். கண்ணாடி அணிந்துள்ள அவரது தலையில் முடி கொட்டியதால் அகன்ற நெற்றியுடையவர். அவரது முகம் எவரையும் கவரக் கூடியது. 29 வயதுடைய அவரே சிறீலங்கா அரசினால் இன்றுவரை தேடப்படும் முக்கியமான தீவிரவாத தலைவர். சிறீலங்கா முழுவதும் யாரைப் பார்த்தாலும் கிட்டுவைப் பற்றியே பேசப்படுகிறது."

அத்தோடு கிட்டுவின் பேட்டியையும் வெளியிட்டிருந்தது 'புரொண்ட் லைன்'. அதில் ஒரு பகுதி இது.

**கே:-** உங்களுக்கு 'கிட்டு' என்ற பெயர் எப்படிக் கிடைத்தது?

**பதில்-** நான் இயக்கத்தில் சேர்ந்தபோது எனது இயக்கம் வைத்த வெங்கிட்டு என்ற பெயர் சுருக்கமாகி கிட்டுவாக மாறிவிட்டது.

**கே:-** எப்போது இயக்கத்தில் சேர்ந்தீர்கள்?

**பதில்:-** 1978 இல்! நான் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவன். 1950 தொடக்கம் வல்வெட்டித்துறை மக்கள் அரசின் அடக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றனர். கள்ளக் கடத்தலையும், கள்ளக் குடியேற்றத்தையும் தடுப்பதாகக் கூறிக் கொண்டு எமது மக்கள் துன்புறுத்தப்பட்டனர். இந்த ஒடுக்குமுறைக்கு என்ன செய்யலாம் என்ற எண்ணத்துடன் தான் வளர்ந்தேன்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ மக்கள் அனைவருமே அரச பயங்கரவாதத்தினால் இன்னல்படத் தொடங்கினார்கள். ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடும் உணர்வோடு வளர்ந்த நான் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தேன்.

### வல்வெட்டித்துறை

**கே:-** சில பிரிவினர் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வல்வெட்டித்துறையை சேர்ந்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக கருத்து நிலவுகிறதே?

**பதில்:-** ஆம். சிலர் அவ்வாறு கூறுகிறார்கள். அதற்கு மேலாகவும் சென்று எமது இயக்கத்தில் குறிப்பிட்ட சாதியினரே ஆதிக்கம் செலுத்துவதாகக்கூடக் கூறுகிறார்கள். அத தவறான அபிப்பிராயம். ஆனால் என்ன நடந்தது என்பதை நீங்கள் உணரவேண்டும்.

திரு.பிரபாகரன் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தபோது அவருடன் இணைந்தவர்கள் யார்? அவரது நண்பர்கள். அவருடன் படித்த பாடசாலை மாணவர்கள். அவரது உறவினர்கள். அயலவர்கள். ஆகவே இயல்பாகவே வல்வெட்டித்துறையிலேயே இயக்கம் ஆரம்பமானது.

நாங்கள் படிப்படியாக வளர்ந்தோம். காலம் செல்ல செல்ல தமிழீழத்தில் இருந்து பலரும் எம்மோடு இணைந்தனர்.

எமது இயக்கத்தில் மூத்தோருக்கே (சீனியர்) முதலிடம் என்ற அடிப்படையில் தளபதிகளை நியமனம் செய்கிறோம்.

ஆரம்பத்தில் இணைந்த முதல் முகாமைச் சேர்ந்தவர்களையே தலைவர்களாக நியமிப்பது என்ற கொள்கையை பின்பற்றி வருவதால், முதல் அணியில் உள்ள வல்வெட்டித்துறை வாலிபர்கள் பொறுப்பில் இருக்கின்றனர். அதே சமயம் ஏனைய பிரதேசங்களை சேர்ந்தவர்களும் தளபதிகளாக உள்ளனர்.

விரைவில் சீனியோரிட்டி, தகுதி போன்றவற்றின் அடிப்படையில் ஏனையோரும் பொறுப்புக்கு வருவர். அதன் பின்னர் இந்த வல்வெட்டித்துறை மாயை மறைந்துவிடும். ஆனால் சாதி அடிப்படையில் எமது இயக்கம் இயங்குவதாகக் கூறுவது சுத்தப் பொய்.

(தொடர்ந்து வரும்.)



வாரமலர் தினமுரசு
எப்.28—மே.04,1996

படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது – இராஜதந்திரி

# எல்.ரி.ரி.ஈ யின் குறியில் பொருளாதார இலக்குகள்!

இத்தடவை சித்திரைப் புத்தாண்டு, கொழும்புத்துறைமுகத்தில் ஏற்பட்ட களேபரத்துடன் ஆரம்பமாகியிருந்தது.

கொழும்புத்துறைமுகம் துகள், துகள்களாகச் சிதைந்ததோ என்று எண்ணுமளவுக்கு சிலமணிநேரம், துறைமுகச் சுற்றாடலில் குண்டுச்சத்தங்களும், வெடி ஓசைகளும் கேட்ட வண்ணமிருந்தன.

இறுதியாக சம்பவதினம் காலை எட்டரை மணியளவில் கப்பல்துறை அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் தொலைக்காட்சியில் தோன்றி கொழும்புத் துறைமுகம் மீதான எல்.ரி.ரி.ஈ.யினரின் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டது என்ற தகவலைத்தந்தார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலும் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் களை கட்டியிருந்தவேளையிலேயே திருகோணமலைத் துறைமுகத்தில் இரு கடற்படைப்பீரங்கிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

அந்த மூழ்கடிப்புகளுடனேயே எல்.ரி.ரி.ஈ.யினருக்கும், சந்திரிகா அரசுக்குமிடையே நிலவிய தேன் நிலவும் திடுதிப்பென இருண்டு அமாவாசையானது.

இலங்கை உலக வரைபடத்தில் பல நுற்றாண்டு காலமாகவே திரை கடலோடுவோரின் சுவர்க்கபுரியாக இருந்து வந்துள்ளது.

போர்த்துக்கேயர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர், அராபியர்கள் என்று சர்வதேச கீர்த்தி பெற்ற கடலோடிகள் பலரும் மேற்கையும், கிழக்கையும் இணைக்கும் ஒரு 'ஜலசந்தி'யாகவே இலங்கையைக் கருதியிருந்தனர்.

காலித்துறைமுகம், திருகோணமலைத்துறைமுகம், கொழும்புத்துறைமுகம், காங்கேசன்துறை துறைமுகம் என்பவை வெறுமனே வர்த்தக நோக்கங் கொண்டவர்களின் இறங்கு துறைகளாக மட்டும் விளங்கவில்லை; காலத்துக்குக்காலம் இலங்கையில் இடம் பெற்ற அந்நிய ஊடுருவல்கள், ஆக்கிரமிப்புகளுக்கான நுழைவாசல்களாகவும் இத்துறைமுகங்கள் இருந்து வந்துள்ளன.

பாய்மரக் கலங்களில் ஆரம்பமான கடல் வாணிபம், இன்று இராட்சத கொள்கலன் கப்பல்கள்வரை பிரமாண்டமான முறையில் முன்னேறியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

பாய்மரக்கப்பல்களில் மூடை, மூடைகளாக வந்திறங்கிய பண்டங்கள், சரக்குகளை, வேலையாட்கள் மூலமாக முதுகில் சுமக்கவைத்து கரை சேர்த்த காலம் மலையேறிப்போய், இராட்சத பாரந்தூக்கிகள் மூலமாக பல்லாயிரம் தொன்கள் எடை கொண்ட கொள்கலன்கள் விரைந்து தரை இறக்கப்படுகின்றன.

கொழும்புத்துறை முகத்தில்கூட 'கடந்தமாதம் 'ஜயா கொள்கலன் இறங்கு துறை' சம்பிரதாயபூர்வமாக பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் திறந்துவைக்கப்பட்டது.

ஜப்பானிய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டதே 'ஜயா கொள்கலன் இறங்குதுறை.' இந்த இறங்கு துறையின் ஆரம்பம் கொழும்புத்துறைமுக வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகவே இருக்கின்றது.

ஏனெனில் ஜயா கொள்கலன் இறங்கு துறையில் பொருத்தப்பட்டுள்ள பாரந்தூக்கிகள் மிக



நவீனமானவையாகும். சில மணிநேரத்தில் பல்வேறு கப்பல்களில் இருந்தும் கொள்கலன்களை ஏற்றி இறக்கக்கூடிய வசதிகளை இக் கொள்கலன் இறங்கு துறை கொண்டுள்ளது.

எனவே 'ஜயா கொள்கலன் இறங்கு துறை'யின் அங்குரார்ப்பணத்துடன் எதிர்காலத்தில் நிறையவே கப்பல்களை எதிர்பார்த்திருந்த வேளையிலேயே எல்.ரி.ரி.ஈ.யினரது கடற்புலிகள் கொழும்புத்துறைமுகத்துக்குள் ஊடுருவியிருந்தனர்.

புலிகளின் ஊடுருவல் கடற்படையினரால் முறியடிக்கப்பட்டிருந்தது. ஆனால் எல்.ரி.ரி.ஈ.யினர் திட்டமிட்டவாறே அவர்களது தாக்குதல் நிறைவேறியிருக்குமானால்

கொழும்புத்துறைமுகம் நோக்கிவரும் கப்பல்கள் தமது திசையை மாற்றியிருக்கும்.

இந்நிலையில் துறைமுக வருவாய் மட்டுமல்ல; இலங்கையருக்குத் தேவையான அத்தியாவசிய பண்டங்களின் இறக்குமதிகூட பெருமளவில் தடைப்பட்டிருக்கும்.

சந்திரிகா அரசுடனான உறவுகளை முறித்துக்கொண்ட பின்னர் எல்.ரி.ரி.ஈ.யினர் மேற்கொண்டுவரும் தாக்குதல்களை அவதானிக்கையில், இலங்கையின் பிரதான பொருளாதார இலக்குகள் குறிவைக்கப்பட்டுள்ளதையே காணமுடிகின்றது.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய கார்த்தரிப்பிடத்தில் குண்டு வெடித்திருந்தது. இதனையடுத்து கொலன்னாவ, ஒரு கொடவத்த எண்ணெய்க்குதங்கள் தீப்பிழம்பாக்கப்பட்டிருந்தன.

இவற்றைத் தொடர்ந்து இலங்கைப் பொருளாதாரத்தின் சிரசாக இருக்கும் மத்திய வங்கிக் கட்டிடம் தகர்க்கப்பட்டிருந்தது.

அடுத்து கொழும்புத் துறைமுகமும் புலிகளால் குறிவைக்கப்பட்டது.

எனவே வடக்கு-கிழக்கில் ஆயுதப்படையினருக்கு கடல், தரை, ஆகாயமார்க்கமாக அழுத்தங்களை ஏற்படுத்திவரும் எல்.ரி.ரி.ஈ.யினர், தென்னிலங்கையில் தமது இலக்குகளையும், அரசியல், பொருளாதார ரீதியாக அழுத்தங்களைக் கொடுக்கும் விதத்திலேயே தெரிவு செய்துவருகின்றனர்.

இந்நிலையில், இராணுவ மையங்கள் மட்டுமல்ல; பொருளாதார முக்கியத்துவமுள்ள எந்தவொரு கேந்திரப் பகுதியும் தாக்குதலுக்குள்ளாகும் அபாயத்தையே எதிர் நோக்கியிருக்கின்றது.

இந்த அபாயத்தைக் குறிப்பதாகவே தலைநகரில் உள்ள நெடிதுயர்ந்த கட்டிடங்கள், செயலகங்கள் முன்பாக மண்மூடைகளும் சாரை, சாரையாக அடுக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

தலைநகரில் இருந்து அரசியல் நடத்துவோர் தற்பெருமை, குடும்பகௌரவம் பேசி பிறந்தநாள் கொண்டாட்டங்களையும், கிரிக்கெட் பந்தயங்களையும், நினைவு தினங்களையும் நடத்தலாம்.

ஆனால், ஒட்டு மொத்தத்தில் முழு இலங்கையரதும், அரசியல், சமூக, பொருளாதார நிலவரங்கள் என்றுமில்லாதவாறு அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதையே உணரமுடிகின்றது.

**தாயார் சிறிமாவுக்கு அன்று அரசியலில் ஏற்பட்ட களங்கத்தை முற்றிலுமாகக் களைந்துவிட வேண்டுமென்பதில் ஜனாதிபதி சந்திரிகா முனைப்பாக இருந்தார்**

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்தவாரம் தமது 80 வது பிறந்த தினத்தைத் கொண்டாடியிருந்தார்.

தாயார் சிறிமாவுக்கு ஜனாதிபதியான மகள் பிறந்த நாள் பரிசொன்றையும் வழங்கியிருந்தார்.

சுமார் பத்து வருடங்களுக்குமுன்னர் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன சிறிமாவோவின் குடியியல் உரிமைகளை பறித்து அவரை அரசியல் ரீதியாக நடைப்பிணமாக்கிவிட்டிருந்தார்.

எனவே தாயார் சிறிமாவுக்கு அன்று அரசியலில் ஏற்பட்ட களங்கத்தை முற்றிலுமாகக் களைந்துவிட வேண்டுமென்பதில் ஜனாதிபதி சந்திரிகா முனைப்பாக இருந்தார்.

பிரதமர் சிறிமாவுக்கு எதிராக ஐ.தே.க. ஆட்சியில் வரப்பட்ட குடியியல் உரிமை ரத்து நடவடிக்கை வலிதற்றது என்று குறிப்பிட்டு பிரேரணையொன்றை தனது அரசியலமைப்பு, நீதி விவகார அமைச்சர் காமினி லக்ஷ்மன் பீரிஸ் மூலமாக பாராளுமன்றத்தில் ஜனாதிபதி நிறைவேற்றியிருந்தார். அதுதான் தாயாருக்கு ஜனாதிபதி வழங்கிய பிறந்தநாள் பரிசு.

இப்பிரேரணை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதில் ஜனாதிபதி காட்டிய அக்கறை தீவிரமானது.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்ததைக்கூட எவ்வகையிலும் பொருட்படுத்தாது தாயார் மீதான அப்பிரேரணையை ஜனாதிபதி சந்திரிகா வெற்றிகரமாக நிறைவேற்றினார்.

எதிரணியில் இருந்தவர்கள் எப்படித்தான் தலைகீழாக நின்றிருந்தாலும், ஜனாதிபதி தான் நினைத்ததை நிறைவேற்றியிருப்பார் என்பதனையே அப்பிரேரணைச் சமாச்சாரம் புலப்படுத்தியிருந்தது.

எனவே தாயார் மீதான களங்கத்தை அகற்றும் பிரேரணையை நிறைவேற்றுவதில் காட்டிய சிரத்தையையும், தீவிரத்தையும் இனப்பிரச்னைத்தீர்வு விடயத்தில் காட்டுவதில் மட்டும் ஜனாதிபதியும், அவரது தரப்பினரும் ஏன் பின்நிற்கிறார்கள்? என்பதே புரியாத புதிராக இருக்கின்றது.

பிரதமர் சிறிமா குறித்த பிரேரணையைக் கொண்டுவந்த அரசியலமைப்பு, நீதி, விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்களே இனப்பிரச்னைத் தீர்வுக்கான தீர்வுயோசனைகளையும் தயாரித்துள்ளார்.

இருந்தபோதிலும் இனப்பிரச்னைத் தீர்வுக்கான அணுகுமுறைகள் மந்த கதியிலேயே இருக்கின்றன.

சந்திரிகா அரசு பதவிக்கு வந்ததும் எல்.ரி.ரி.ஈ.யினருடனான பேச்சுக்கள் ஆரம்பமாகின. ஆனால் நாட் செல்லச் செல்ல அப்பேச்சுக்கள் காலதாமதமாகி தொய்வு நிலையை எட்டியது.

எவ்விதத்திலும் ஆரோக்கியமாக எதுவும் பேசப்படவில்லை. பூர்வாங்கக் கட்டத்தில் புனரமைப்புப் பணிகள் பற்றியே பேசப்பட்டன.

'சுவர் இருந்தால் மட்டுமே சித்திரம் வரையலாம்' என்பதை எல்.ரி.ரி.ஈ.யினருடன் பேச்சுக்களை ஆரம்பித்தபோது சந்திரிகா ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ளவில்லை.

சமாதானத்தை ஏற்படுத்திய பின்னரே புரைமைப்பும், புனர்வாழ்வும் சாத்தியமாகும் என்பதனைப் புரிந்து கொள்ள ஜனாதிபதி சந்திரிகா தரப்பினர் தவறியிருந்தனர்.

ஆனால் எல்.ரி.ரி.ஈ.யினருடனான பேச்சுவார்த்தைகள் உரிய உத்வேகத்தை எவ்விதத்திலும் அடைந்திருக்கவில்லை என்பதனை ஆட்சியாளர்கள் நன்கறிந்து கொண்டபோதிலும், எல்.ரி.ரி.ஈ.யினரே பேச்சுக்களை முறித்துக் கொண்டார்கள். அவர்களுடன் போரிடுவதைவிட வேறு வழியில்லை என்று ஆட்சியாளர்கள் இப்போது கூப்பாடு போட்டிருக்கக் காணப்படுகின்றனர்.

எல்.ரி.ரி.ஈ.யின் பேச்சுக்களை முறித்திருக்கலாம்; போரையும் தொடுத்திருக்கலாம், ஆனால் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் ஓர் அரசியல் தீர்வு பற்றியே இடையறாது வலியுறுத்திவரக் காணப்படுகின்றன.

இருந்தபோதிலும் தற்போது ஆட்சியாளர் வெளியிட்டுவரும் கருத்துக் கண்ணோட்டங்கள் எல்.ரி.ரி.ஈ. தவிர்ந்த ஏனைய தமிழ்க்கட்சிகள்கூட தீர்வுக்கு ஒத்துழைப்பதாக இல்லை என்ற தோரணையிலேயே அமைந்துள்ளன.

அரசியல் அணுகு முறைகள் ஆமை வேகத்தில் இருக்கும் அதேவேளை இராணுவ முஸ்தீபுகள் குதிரை வேகத்தில் இருக்கின்றன.

'ஒப்பரேஷன் சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கையை முன்னின்று நடத்திய மூன்று முக்கிய பிரிகேடியர்கள், மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்:

இதுதவிர இராணுவ உயர்மட்டத்திலும் தேவைக்கேற்ற விதத்தில் மாற்றங்கள் விரிவானமுறையில் கொண்டு வரப்படவிருப்பது பற்றிப் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

ஆயுதங்கள், விமானங்கள், கப்பல்கள் என்பவற்றையும் இராணுவத் தேவைகளுக்காக வாங்குவதில் ஆர்வங்காட்டப்படுவதை அறியமுடிகின்றது.

ஆனால் அரசியல் தீர்வு என்ற விடயம்மட்டும் உரிய அணுகு முறைகளின்றி முடவனின் நடைபோன்று இருக்கின்றது.

நாளுக்குநாள் இலங்கையில் அதிகரித்துவரும் அச்சுறுத்தல்களை தவிர்ப்பதற்கு எல்.ரி.ரி.ஈ.யினருடனான பேச்சுக்கள் இன்றியமையாதிருக்கின்றதென்பதனை சமாதான விரும்பிகள் அனைவருமே நன்குணர்ந்துள்ளனர்.

அச்சுறுத்தல்களைத் தவிர்க்க மட்டுமல்ல அரசியல் தீர்வுக்குக்கூட எல்.ரி.ரி.ஈ.யினருடனான பேச்சுக்களே அவசியமானவையாகும்.

எல்.ரி.ரி.ஈ.யினருடனான பேச்சுக்களுக்குத்தான் முன்வராவிட்டாலும், அவர்களது அரசியல் நிலைப்பாடுகளைத்தானும் உரிய விதத்தில் ஆட்சியாளர்கள் அறிய முன்வரவேண்டும்.

ஏனெனில் இன்று இலங்கை வேண்டிநிற்பது ஓர் அரைகுறைத்தீர்வல்ல. நிரந்தரத்தீர்வொன்றே இன்றியமையாததாகும்.

எனவே இத்தகைய நிரந்தரத் தீர்வுக்கு இதுவரை காலமும் ஏற்பட்ட விழுப்புண்களை மேலும் ஆழமாக்கிவிடாது, சுமுகமான கெடுபிடிகளற்ற சூழ்நிலைகளை உருவாக்க முன்வரவேண்டும். ●

## சபாஷ்-சுவையான தேர்தல்

# தமிழக தேர்தல் களத்தில் காணப்படும் சுவையான காட்சிகளின் தொகுப்பு

- தமிழக மாநில காங்கிரஸ் கட்சிக்கு சைக்கிள் சின்னம். சின்னம் புதியது என்பதால் அதனை அறிமுகப்படுத்த பல வழிகளைக் கையாளுகின்றனர். வாக்குச் சேகரிக்க வீடு வீடாக செல்லும் வேட்பாளர்களுக்கு முன்பாக தொண்டர்கள் சைக்கிளை தலைக்குமேல் தூக்கிப் பிடித்தபடி செல்கின்றனர். சில பகுதிகளில் சைக்கிளை தெருவின் குறுக்காக தூக்கிக் கட்டித் தொங்கவிட்டுள்ளனர்.

- மறுமலர்ச்சி தி.மு.க.வின் சின்னம் குடை. அதனால் அக்கட்சி வேட்பாளர்களின் கார்களில் குடையை விரித்துக் கட்டியிருக்கிறார்கள். வெய்யிலில் வாக்குக் கேட்கச்செல்லும் ம.தி.மு.க வேட்பாளர்கள் குடையைப் பிடித்தபடி ஹாயாகச் செல்கின்றனர். ஏனைய கட்சிகளின் வேட்பாளர்கள் நிலைதான் பரிதாபம். குடை பிடித்தபடி சென்றால் ம.தி.மு.க.வுக்கு இலவசமாக பிரசாரம் செய்வதாகி விடுமல்லவா. அதனால் கடும் மழையில் கூட சில வேட்பாளர்கள் குடையைப் புறக்கணிக்கிறார்களாம். அடகஷ்ட காலமே.

- அ.தி.மு.க. அமைச்சர்கள் பலர் தமது தொகுதிகளுக்குள் நுழையவே முடியவில்லை. கற்களும், செருப்புக்களும் அவர்களை பதம்பார்த்துக் கொண்டிருக்கின்றன. மூத்த அரசியல்வாதியும், அமைச்சருமான நாவலர் நெடுஞ்செழியன் தேனி தொகுதியில் போட்டியிடுகிறார். அங்கு அவர் பிரசாரம் செய்ய வீதியில் இறங்க முடியாத நிலை. அவர் வாயைத்திறக்க முன்னரே வார் அறுந்த செருப்புக்கள் பறந்து வருகின்றன. தேனியில் அவர்மீது எதிர்ப்புக்கள் தேனீயாகக் கொட்டுகின்றன.

- கலைஞர் கருணாநிதி செல்லும் இடங்களில் ரஜினியின் பெயரை அவர் சொல்லும்போது கரகோசம் வானைப் பிளக்கிறது. அவ்வளவு ஏன், தி.மு.க. பொதுக்குழுவில் கலைஞர் உரையாற்றும்போது. "ரஜினி நமக்கு ஆதரவளிப்பார்" என்று சொன்னதும், பொதுக்குழு உறுப்பினர்களே கரகோசம் செய்தனர். கலைஞர் ஆச்சரியப் பட்டுப் போனார். மூன்றெழுத்தில் மூச்சிருக்கும் என்றார் எம்.ஜி.ஆர். ரஜினியும் மூன்றெழுத்து! மூன்றெழுத்தின் செல்வாக்கை நம்பியிருக்கிறது தி.மு.க.- தமிழக மாநில காங்கிரஸ் கூட்டணியின் தலையெழுத்து. அ.தி.மு.க. கூட்டணியும் எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்தை நம்பித்தான் தேர்தலைச் சந்திக்கிறது.

- ரஜினி பெயரை தி.மு.க. கூட்டணி பயன்படுத்துவதை முறியடிக்க ஒரு திட்டம் போட்டிருக்கிறது அ.தி.மு.க. எம்.ஜி.ஆர்- ஜெயலலிதா இணைந்து நடித்த படக்காட்சிகளையும், அ.தி.மு.க. ஆட்சிக் காலச் சாதனைகளையும் இணைத்து வீடியோ பிரசார கசட்டுக்கள் தயாராகி உள்ளன. 20 ஆயிரம் கசட்டுக்கள் ரெடி.

- தென் சென்னைத் தொகுதியில் போட்டியிடும் நடிகை ரேவதிக்கு ஆதரவாக ரஞ்சிதா, ரோகிணி போன்ற நடிகைகள் பிரசாரம் செய்கின்றனர். "இளைய வயதினர் அரசியலுக்கு வரவேண்டும் என்றார் ரஜினி. அதனால்தான் அரசியலுக்கு வந்தேன்" என்கிறார் ரேவதி. ரஜினியை அவரும் விடவில்லை.

- தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி, ம.தி.மு.க. தலைவர் வை.கோபால்சாமி கலந்துகொள்ளும் கூட்டங்களில் ஆண்கள் குறிப்பாக இளைஞர்கள் அதிகளவில் காணப்படுகின்றனர். முதல்வர் ஜெயலலிதா கலந்து கொள்ளும் கூட்டங்களில் பெண்கள் கூட்டம் அதிகளவில் இருக்கிறது. தாய்க்குலத்தின் ஆதரவை அம்மணி இன்னமும் இழந்துவிடவில்லை.

- தமிழக பத்திரிகை உலகம் முற்று முழுதாக ஜெயலலிதாவுக்கு எதிராகத் திரும்பியிருக்கிறது. அதனால் பத்திரிகைக் கணிப்புக்கள், வெளியிடும் செய்திகள் யாவும் ஜெயலலிதாவின் வெற்றி வாய்ப்பை உடைப்பவையாக அமைந்துள்ளன. அகம்பாவத்தால் பத்திரிகையாளர்களது முகம் பார்க்க மறுத்த பலனை அம்மணி அனுபவிக்கிறார். பத்திரிகைகளின் பலம், தி.மு.க. குடும்ப நிறுவனமான சன் ரி.வி போன்றவை மூலமாக தி.மு.க. கூட்டணி பிரசார பலத்தில் முன்னணியில் இருக்கிறது.

- தமிழக முதல்வர் ஜெயலலிதா இரண்டு முக்கிய எதிரிகளை சந்திக்கிறார். ஒருவர் கருணாநிதி. இன்னொருவர் ரஜினிகாந்த். சமாளிப்பது கஷ்டம் தானோ?!



படிப்பகம்

www.padippakam.com

# உலகைக் கலக்கிய மனித வேட்டை

**சிரிய நாட்டு அதிபரின் விருப்பத்திற்காக லெபனானில் இருந்த ஃபிரான்ஸ் தூதரை சுட்டுக்கொன்றான் கார்லோஸ். சிரியா தவிர பல்வேறு நாடுகள் கார்லோஸை தமது தேவைகளுக்கு உபயோகப்படுத்த ஆரம்பித்தன.**

**மது-மாது-பணம்**

**மூன்றுக்காகவும் முழு உலகமும் கதி கலங்கும் செயல்களில் ஈடுபட்டான் கார்லோஸ்.**

**பாலஸ்தீன விடுதலைக்குப் போராட புறப்பட்ட கார்லோஸ் பயங்கரவாதியாக மாறிக்கொண்டிருந்தான்.**

**கார்லோஸ்.**

**அமெரிக்க அதிபர்கூட அந்தப் பெயரைக் கேட்டால் நடுங்கிய காலம் இருந்தது.**



கார்லோஸ்

## 7

லெபனானில் வைத்து ஃபிரான்ஸ் தூதர் லுயிஸ் டெலமோரை கொலை செய்துவிட்டு வெற்றிச் செய்தியோடு சிரியா சென்றான் கார்லோஸ்.

அங்கு கார்லோஸுக்கு விமரிசையான கவனிப்புக் காத்திருந்தது.

ஒருவாரம் அங்கு தங்கியிருந்தான். சிரிய அதிபர் ஒரு பெருந்தொகைப் பணத்தை கார்லோஸுக்கு கொடுத்தார்.

கார்லோஸ் சிரியாவில் தங்கியிருந்த காலத்தில், அமெரிக்க பத்திரிகைகளில் வெளியான செய்தி ஒன்று கார்லோஸைக் கூட ஆச்சரியப்படுத்தியது.

**அமெரிக்க ஜனாதிபதி ரீகனுக்கு ஆபத்து.**

**வெள்ளை மாளிகை நோக்கி கார்லோஸ் வருகிறான்.**

என்று அமெரிக்க பத்திரிகைகள் தடித்த எழுத்தில் தலைப்புச் செய்தி வெளியிட்டன.

உண்மையில் கார்லோஸுக்கு அப்படி ஒரு எண்ணமே இருக்கவில்லை. ஜனாதிபதி ரீகனை கொலை செய்வதற்காக கார்லோஸ் உதவியை யாரும் நாடிச் செல்லவும் இல்லை.

அமெரிக்க உளவுநிறுவனமான சி.ஐ.ஏ. பரப்பிவிட்ட வதந்தி அது. அந்த வதந்தியை சி.ஐ.ஏ. எதற்காக கிளப்பிவிட்டது என்பது இன்றுவரை தெரியவில்லை.

அந்த வதந்தியின் பின்னர் ஜனாதிபதி ரீகனின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன.

செய்திகள் அறிந்து கார்லோஸ் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

தன்னைப்பற்றி அபாண்டமான செய்திகள் வருகிறதே என்று ஒருநாள்கூட கார்லோஸ் கவலைப்பட்டது கிடையாது.

'தன்னைப் பற்றிய அச்சம் உலகம் முழுவதும் பரவ வேண்டும். கார்லோஸ் என்றால் உலகமே நடுங்க வேண்டும்.' என்பது கார்லோஸின் ஆசை.

அதனால் தன்னைப்பற்றிய பயங்கரமான எண்ணங்களை உருவாக்கும் வதந்திகளைக்கூட கார்லோஸ் ரசித்தான். விரும்பினான்.

இன்னொரு வகையில் அப்படிப்பட்ட செய்திகள் கார்லோஸுக்கு விளம்பரம் போலவும் பயன்பட்டன.

கார்லோஸை வைத்து தமது அரசியல் எதிரிகளை வேட்டையாடவும், பயமுறுத்தவும் பல நாடுகளின் தலைவர்கள் கார்லோஸின் நட்பை நாடினார்கள்.

ரூமேனியா நாட்டின் அதிபராக அப்போது இருந்தவர் நிக்கொலி சியோசெங்கியூ.

1980 இல் கார்லோஸின் தொடர்பு அவருக்கு கிடைத்தது.

ரூமேனியாவுக்கு சென்றான் கார்லோஸ். தட புடலான விருந்துபசாரம் கொடுத்தார் அதிபர்.

கார்லோஸின் பலவீனத்தை அறிந்து ரூமேனிய அழகி ஸ்டெல்லாவை கார்லோஸுக்கு அறிமுகப்படுத்தினார்.

ஸ்டெல்லா அபாரமான செழிப்போடு. அந்த செழிப்பையெல்லாம் பிரகடனப்படுத்தும் உடையோடு கார்லோஸைப் பார்த்து புன்னகைத்தாள்.

"கார்லோஸ்! ரூமேனியாவில் நீ தங்கியிருக்கும் காலத்தில் ஸ்டெல்லா நல்ல துணையாக இருப்பாள்" என்று கண்ணடித்தார் அதிபர்.

"துணையாகவா, தொல்லையாகவா?" என்று ஸ்டெல்லாவையே பார்த்தபடி அதிபரிடம் கேட்டான் கார்லோஸ்.

## பொதியில் வந்த மரணம்

"ரூமேனியாவில் இது குளிர்காலம். ஆகவே சூடான விஷயங்கள் எதுவும் தொல்லையாக இருக்காது" என்றாள் ஸ்டெல்லா. கார்லோஸ் அவளை இடையில் கைவைத்து அணைத்துக்கொண்டான். மென்மையாக இருந்தாள். மெல்லக் கிள்ளினான். "இங்கே வேண்டாமே. எனக்கு மூட் வந்துவிட்டால் உங்கள் பாடு அவஸ்தையாகிவிடும்" என்று சொல்லிக்கொண்டே, கார்லோஸின் பின்புறத்தில் கிள்ளினாள்.

விருந்துபசாரம் முடிந்தபின் கார்லோஸும் ஸ்டெல்லாவும் கார்லோஸுக்கு தரப்பட்ட விடுதியில் ஒன்றாகவே தங்கினார்கள்.

"ரூமேனியாவில் நீ மட்டும்தான் அழகாக இருக்கிறாய். என் அபிப்பிராயம் சரியாகத்தான் இருக்கிறதா என்று தெரியவில்லை."

"எப்படி தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்?"

"விடிவதற்கு முன்னர் விடை தெரியும்" என்றான். "இப்படி வா" என்றான். வந்தாள். "இதெல்லாம் எதற்கு?" என்று கேட்டு, அவள் சட்டைப் பொத்தானில் கைவைத்தான். "சரியான குளிர்" என்றாள். "அதற்குத்தான் நானிருக்கிறேனே!" என்றபடி தீவிரமானான்.

மறுநாள் கார்லோஸை ரூமேனியா அதிபர் தன் பிரத்தியேக அலுவலகத்தில், தனியாகச் சந்தித்தார்.

"எங்கள் உபசரிப்பு எப்படி?"

"பிரமாதம். குறிப்பாக ஸ்டெல்லா!"

"மார்க்ஸ் எத்தனை?"

"நூற்றுக்கு நூறு!"

அதிபர் சிரித்தார். சட்டென்று சிரிப்பை நிறுத்திவிட்டு, கார்லோஸை உற்று நோக்கினார்.

"உன் உதவி எனக்குத் தேவை."

"காரணமில்லாமல் அழைத்திருக்க மாட்டீர்கள் என்று தெரியும். அழைப்பை ஏற்றபோதே உதவத் தயார் என்றுதான் அர்த்தம். சொல்லுங்கள் என்ன உதவி?"

"எனக்கு எதிரிகள் அதிகம்!"

"அரசியலில் இது சகஜம். தவிர, அதிபராகவும் இருக்கிறீர்கள்."

"அரசியல்ரீதியாக என்னை அவர்கள் புரட்டி புரட்டி எடுக்கட்டும். நான் கவலைப் படவில்லை. என் தனிப்பட்ட வாழ்க்கையை தெருவுக்கு இழுக்கிறார்கள். என் மனைவியைக்கூட கிண்டல் பண்ணுகிறார்கள்." அதிபரின் முகம் சிவந்திருந்தது. நெற்றி நரம்பு புடைத்திருந்தது.

"ஜெர்மன் மூனிச் நகரில் ஒரு வானொலி நிலையம் இருக்கிறது. 'ரேடியோ ஃபிரீ யூரோப்' என்று பெயர். செய்திச் சுதந்திரமாம். மண்ணாங்கட்டி. பாஸ்ரர்ட். நான் யாரோடு படுத்தேன், யாரையெல்லாம்... சே.. நாய்கள்! யாரோடு விளையாடுகிறார்கள் அவர்கள். புகட்ட வேண்டும். பாடம் புகட்ட வேண்டும்." மேசையில் ஓங்கிக் குத்தினார்.

"ஐஸீ, ஜேர்மனில் உள்ள ரேடியோவுக்கு உங்களைப் பற்றி.."

"யார் தகவல் கொடுக்கிறார்கள் என்கிறாய்? ரூமேனியர்கள்தான். அமெரிக்க சி.ஐ.ஏ.தான் அந்த ரேடியோவுக்கு பின்னால் இருக்கிறது."

"ஓ.கே. ரேடியோ ஃபிரீ யூரோப்பின் குரல்வளையை சீவ வேண்டும். அவ்வளவுதானே!"

அதிபரின் முகம் சட்டென்று மலர்ந்தது. நாற்காலியில் இருந்து முன்நோக்கி நகர்ந்து, மேசையை நோக்கிக் குனிந்தார். மேசைமீதிருந்த கார்லோஸின் கைகளை தன் கைகளால் பற்றிக்கொண்டார்;

"அதுதான், அதேதான்! செய்வாயா? எனக்காக, என் கௌரவத்திற்காக, பிளீஸ் கார்லோஸ்!" ஒரு நாட்டின் அதிபர் தன் முன்பாக கெஞ்சுவதைப் பார்க்க கார்லோஸுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. கார்லோஸுக்கு கர்வமாக இருந்தது.

"செய்கிறேன்! கார்லோஸை நம்பியவர்கள் கைவிடப்படார்! காரியம் முடியும்! சரி, இதில் எனக்கு என்ன கிடைக்கும்!"

"டொலர்கள், ஸ்டெல்லாக்கள்!"

ரூமேனியா அதிபர் சொன்ன தொகை கார்லோஸுக்குப் போதுமானதாக இருந்தது. முதலில் ஒரு குறிப்பிட்ட தொகையை வாங்கிக் கொண்டான்.

ரூமேனியாவில் இருந்து ஸ்பெயின் நாட்டுக்குச் சென்றான் கார்லோஸ்.

✦✦✦

அவர் நடுத்தரவயதில் இருந்தார். அவரது மனைவி இளமையாக இருந்தாள். இருவரும் தமக்குக் கிடைத்த தனிமையை உபயோகப்படுத்திக் கொண்டிருந்தனர்.

அவர் ரேடியோ ஃபிரீ யூரோப்பில் முக்கிய அதிகாரி. மனைவியோடு செலவிட நேரம் கிடைப்பது அரிது. இன்று அதிசயமாக ஓய்வு கிடைத்தது. ஓய்வை உபயோகமாக்கும் அவசரத்தில் இளம் மனைவியை ஆராய்ந்து கொண்டிருக்க, அழைப்பு மணி அழுத்தப்பட்டது. அலுத்துக்கொண்டு எழுந்துபோய் கதவு திறந்தார்.



தருவது ரசிகன்

தபால் பொதி ஒன்று அவர் பெயருக்கு வந்திருந்தது. பார்சல்! 'யார் அனுப்பியிருப்பார்கள்.' பார்சலின் மேல் இடது மூலையில் ஸ்பெயின் முகவரி இருந்தது.

மனைவி ஓடிவந்து பின்புறமாக அவரை அணைத்து கழுத்தைக் கட்டிக்கொண்டு, தோள் வழியாக எட்டிப்பார்த்தாள். "பார்சலைப் பிரியுங்கள். என்ன வரப் போகிறது. அநேகமாக புத்தகங்களாக இருக்கலாம்." என்றாள்.

"ஏன், எல்லாமே டொலர்களாக இருந்தால் என்ன செய்வாய்?" சிரித்தபடியே பார்சலைப் பிரித்தார்.

ட..மா..ல்!

பயங்கர சத்தத்தோடு பார்சல் வெடித்தது. சிதறியது.

அவரும், மனைவியும் துண்டு துண்டாக சிதைந்து போனார்கள்.

தகவலறிந்து பொலிஸ் புறப்பட்டபோது, மேலும் இரண்டு இடங்களில் ஜெர்மன் மூனிச் நகரில் தபாலில் வந்த பார்சல் குண்டுகள் வெடித்த செய்தியும் கிடைத்தது.

ரேடியோ ஃபிரீ யூரோப் அறிவிப்பாளர்கள் இருவர் குடும்பத்தோடு பலியானார்கள். மொத்தம் மூன்றுபேரை இழந்தது ரேடியோ ஃபிரீ யூரோப்.

மூன்று பார்சல்களும் ஸ்பெயின் நாட்டில் இருந்து, மிக நேர்த்தியாக தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்தன.

தயாரித்ததும், அனுப்பியதும் வேறு யாருமல்ல, கார்லோஸ்தான்!

ஸ்பெயினில் இருந்த கார்லோஸுக்கு வேறொரு பெயரில் போன் செய்து பாராட்டினார் ரூமேனியா அதிபர்.

"மிக்க மகிழ்ச்சி! ஆனாலும்..." என்று இழுத்தார்.

"புரிகிறது! இது முதல் கட்டம்தான்!" என்றான் கார்லோஸ்.

"அப்படியானால்..?"

"அடுத்த கட்டம் அபாரமாயிருக்கும்!"

"குட்! இப்போது என்ன செய்கிறாய்?"

"ஆப்பிள் ஒன்றை சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறேன்."

அதிபர் மறுமுனையில் உரத்துச் சிரித்துவிட்டு, "ஸீயூ, குட் பை!" - -

ஸ்பெயினில் இருந்து கிழக்கு ஜேர்மனுக்கு சென்றான் கார்லோஸ். அங்கிருந்துதான் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு திட்டமிட தீர்மானித்தான்.

அதே நேரம் கார்லோஸ்மீது கடும் கோபத்திலிருந்தது கே.ஜி.பி. (சோவியத் உளவுப் பிரிவு) அந்த கோபத்தால் கார்லோஸுக்கு கிழக்கு ஜேர்மனில் ஆபத்தும் காத்திருந்தது.

(தொடர்ந்து வரும்.)

# டோக்கியோவில் மயக்கும் மர்லின்

ஹொலிவுட் பட உலகில் கொடி கட்டிப் பறந்த கவர்ச்சி நாயகி மர்லின் மன்றோ. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கென்னடியும், அவரது சகோதரரும் மர்லினின் மயக்கும் புன்னகை முன் மண்டியிட்டிருந்தனர்.

அந்த அழகுத் தேவதை திடீரென்று ஒருநாள் செத்துப்போனார். தூக்க மாத்திரைகளை அதிகமாக உட்கொண்டு தற்கொலையானதாக தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் அவரது மரணத்தில் மர்மம் தொடர்கிறது.

அதெல்லாம் ஒருபுறம் இருக்க, மர்லின் மறைந்து 34 வருடமாகியும், அவரது புகழ் மறையவில்லை. மர்லின் என்றால் இப்போதும் மயக்கம்தான்.

சமீபத்தில் ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் உலக சினிமாப் படவிழாவில் மர்லின்மன்றோவுக்கு பலத்த மரியாதை.

'செவன் இயர் இட்ச்' படத்தில் மர்லின் நடந்துவருவார். பாவாடை காற்றில் படபடத்து எழுந்து பறக்கும். ரசிகர்கள் விழிகள் விரியும் நேரத்தில் பாவாடையை அமுக்கிப் பிடித்துவிடுவார் மர்லின். அட்டகாசமான கவர்ச்சியான போஸ் என்று அந்தக்காலத்தில் பேசப்பட்ட காட்சி அது. தற்போது தமிழ் படங்களில்கூட அக்காட்சியை தழுவி பாவாடை பறப்புக் காட்சிகள் வந்துவிட்டன. ஆனாலும் மர்லின் தோன்றிய அந்தக் காட்சியின் தத்ரூபம்போல் இனிமேல் அமையாது.

பறக்கும் பாவாடையை மர்லின் அமுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் படத்தை பிரமாண்டமான ஓவியமாக வரைந்து, பெ..ரி..ய்ய்ய போத்தல் ஒன்றுக்குள் அந்த ஓவியத்தை வைத்து டோக்கியோவில் அசத்தியிருக்கிறார்கள். சினிமா படவிழா முடிந்தபோதும் மர்லின் ஓவியம் அப்படியே இருக்கிறது.



டோக்கியோ மக்கள் மனதை ஓவியமாக இருந்தபடியே தினசரி கொள்ளையடிக்கிறார் மர்லின்.

# கொடுத்தது 1 1/2 கோடி

குத்துச் சண்டை உலகில் கொடி கட்டிப் பறந்தவர் முகமது அலி. அவருக்கு இப்போது 55 வயது. உலக ஹெவி வெயிட் சாம்பியன் பட்டத்தை மூன்று முறை பெற்ற பெருமைக்குரியவர்.



அமெரிக்காவில் உள்ள மியாமி நகரில் வசித்து வருகிறார் முகமது அலி. முன்பு ஒரு தடவை 'பார்க்கின்சன் நோய்' எனப்படும் நரம்பு மண்டல கோளாறில் சிக்கி படாதபாடுபட்டார். அதன்பின்னர் சமூக சேவைகளில் ஈடுபாடு காட்டத் தொடங்கினார்.

சமீபத்தில் முகமது அலி செய்துள்ள உதவியால் பயன் அடைந்திருப்பவர்கள் கியூபா நாட்டவர்கள்தான். கியூபாவில் உள்ள மருத்துமனை ஒன்றுக்கு ஏராளமான மருந்துவகைகளை வாங்கிக் கொடுத்தார் முகமது அலி. அவற்றை கியூபாவில் உள்ள சகல மருத்துவ மனைகளுக்கும் பகிர்ந்து கொடுத்துள்ளது கியூபா அரசு.

மருந்துகள் வாங்கிக் கொடுத்ததில் முகமது அலி செலவிட்ட தொகை ஒன்றரைக் கோடி ரூபாய். குத்துச்சண்டை மூலம் சம்பாதித்த பணத்தை பொத்தி வைக்காமல் பொதுநலத்திற்கு பயன் படுத்துகிறார் முகமது அலி.

# லெபனான் அழகி

லெபனான் நாட்டில் நடைபெற்ற அழகிப் போட்டியில் இரண்டாவது இடத்தில் வந்தவர் நிக்கோல் பலான். அண்மையில் இந்த அழகியை அள்ளிக்கொண்டுபோய் சிறையில் போட்டுவிட்டார்கள்.

ஏன் தெரியுமோ? அழகியாக இரண்டாவது இடம் கிடைத்ததை வைத்து நிர்வாணப் படங்களில் நடித்திருக்கிறார். அவரை நிர்வாணமாக நடிக்க வைத்து படமெடுத்தவர் யார் தெரியுமோ? அழகியின் காதலாதான்!

லெபனான் அரசாங்கம் விசாரணை நடத்திவருகிறது. குற்றம் நிரூபிக்கப்பட்டால் அழகி கம்பி எண்ணுவார். அழகி பட்டமும் பறிக்கப்படும்.

அழகிப் போட்டிகளில் தெரிவாகும் அழகிகள் தொடர்பாக முரசு முன்னர் வெளியிட்ட தகவல்களை படித்தவர்களுக்கு லெபனான் அழகியின் செயல் ஆச்சரியமாக இருக்காதல்லவா?



# யார் இவர் தெரியுமா?



படத்தில் இருக்கும் இந்தப் பெண் யார் என்று தெரிகிறதா? நன்றாக உற்றுப் பாருங்கள். இவர் ஒரு சர்வதேசப் பிரபலம். பெரிய இடத்து மருமகள். இப்போதாவது கண்டுபிடித்துவிட்டீர்களா?

கண்டுபிடிக்கத் திணறியவர்களுக்கு நாமே உதவுகிறோம். இவர்தான் டயானா. 25 வருடங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. இப்போது பார்த்தால் அடையாளம் தெரியாதமாதிரி இருப்பதால் இப் படத்தை பொக்கிசமாக பாதுகாத்து வைத்திருக்கிறார் இளவரசி டயானா.

# மம்மியாகிறார் மடோனா

பொப் இசை பாடகி மடோனா என்றாலே அதிரடியான கிசு கிசு சர்ச்சைகள் தான் நினைவுக்கு வரும்.

'எனக்கு ஒரு குழந்தை வேண்டும். தகுதியான ஆண் மகனைத் தேடுகிறேன்.' என்று அதிரடி அறிக்கை விடுத்தவர் மடோனா.



பலவிதமான போஸ்களில் நிர்வாணமாக தோன்றி 'ஆல்பம்' ஒன்றையும் வெளியிட்டவர். பல நாடுகளில் அந்த புத்தகத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையில்லாத நாடுகளில் சூடாக விற்பனையானது.

மடோனா பற்றிய லேட்டஸ்ட் செய்தியாதெனில், மடோனா தற்போது நான்கு மாத கர்ப்பமாக இருக்கிறார். மடோனாவுக்கு இப்போது 37 வயது. அவரது கர்ப்பத்துக்கு காரணமானவர் கார்லோஸ் லியோன் (முரசில் வரும் கார்லோஸ் அல்ல) அவரது வயது 29. லியோனும் மடோனாவும் கடந்த ஒருவருடமாக படு நெருக்கமாக பழகிக் கொண்டிருக்கிறார்கள். மடோனா தேடிய ஆண் மகன் அவர் தான்.

இத் தகவல்களை லண்டனில் இருந்து வெளியாகும் 'சன்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

பாவையர் அணிவகுப்பு விழிகளை விரியவைக்கிறதல்லவா? ஜப்பான் நாட்டின் தலைநகரான டோக்கியோவில் ஆடையலங்காரக்காட்சியில் இவர்களைக் கண்டவர்களும் கிறங்கித்தான் போனார்களாம். வரிக்குதிரை வடிவ ஆடைகளோடு, அதே போல வர்ணம் தீட்டப்பட்ட மோட்டார் சைக்கிள் சகிதம் பவனிவந்து முதல் பரிசை தட்டிச் சென்றார்கள். குதிரைகள் கண்டால் தமக்கு போட்டி என்று நினைத்திருக்குமோ?! குதிரைகளுக்கு சவால்தான்.

## சவால் குதிரைகள்



## ஒரே அமுக்கு



பாம்பென்றால் படையும் நடுங்கும். ஆனால் தமிழ்நாட்டில் அயனாவரம் என்னு மிடத்தில் 11 அடி நீளமான மலைப்பாம்பை ஒரே அமுக்காக அமுக்கிவிட்டார்கள். அது பற்றிய விபரம் இதோ:

தமிழ்நாட்டில் அயனாவரம் என்னும் இடத்தில் இருக்கிறது தில்பன் எலக்ரிக்கல் கம்பனி. அக் கம்பனி அருகே ஒரு நாயின் மரண ஓலம் கேட்டது. கம்பனி ஊழியர் ஒருவர் ஓடிச்சென்று என்னவென்று பார்த்தார். அங்கே அவர் கண்ட காட்சி புல்லரிக்கவைத்தது.

நாயை பாதி விழுங்கிய நிலையில் மலைப்பாம்பு ஒன்று காணப்பட்டது. ஊழியர் பதறி அடித்துக்கொண்டு தான் கண்ட காட்சியை கம்பனி முழுக்கச் சொல்லிவிட்டார்.

அனைவரும் ஓடிவந்து திரண்டனர். கூட்டத்தைக் கண்டதும் மலைப்பாம்பு கம்பனியின் அறை ஒன்றுக்குள் புகுந்துவிட்டது. உடனே வனவிலங்கு துறையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் வந்து மலைப்பாம்பை உயிரோடு பிடித்துச் சென்றனர். படையை நடுங்க வைக்கும் பாம்பை பிடித்த மகிழ்ச்சியில் மலைப்பாம்போடு நின்று புகைப்படத்திற்கு போஸ் கொடுத்தனர்.

பொதுவாகவே இந்த மாதிரியான பெரிய மலைப்பாம்பு அடர்ந்த காடுகளில் தான் இருக்கும். அது எப்படி வெளியே வந்தது என்பது புதிராக இருக்கிறது. பிடிக்கப்பட்ட பாம்பின் பூர்வீகம் மலேசியா. மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கோங்கு மரத்தடிகளுடன் இப்பாம்பும் வந்து சேர்ந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மலேசியா மலைப்பாம்புகளது தோலில் அடர்ந்த மஞ்சள் புள்ளிகள் காணப்படும். பிடிபட்ட பாம்பிலும் அவ்வாறு காணப்படுகின்றன.

இப்பாம்பு அக் கம்பனிக்குள் நீண்டகாலம் பதுங்கி இருந்திருக்கிறது. அறை ஒன்றில் காணப்பட்ட உரிந்த தோல் அதனை உறுதிப்படுத்துகிறது. அதனை அறிந்ததும் கம்பனி ஊழியர்கள் "தாம் தப்பியது தம்பிரான் புண்ணியம்" என்கிறார்கள்.

## தகவல் பெட்டி




## புதுமையான கண்டனம்

இதெல்லாம் என்ன மிருகங்கள் என்று யோசிக்க வேண்டாம். பிரிட்டனின் மாட்டிறைச்சி பயங்கரநோய் பரப்புகிறது என்று அந்த நாட்டு மாட்டிறைச்சிக்கு உலகம் முழுவதும் தடை விதிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனில் உள்ள சைவ உணவுப் பிரியர்கள் மாட்டிறைச்சி விற்பனைக்கு எதிராக மாடுகள் போல வேசமணிந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அக் காட்சிதான் இது.

கலைஞர் கருணாநிதி திரையுலகில் தன் சொந்த தமிழால், துள்ளு நயத்தால் சாதனை பல படைத்தவர். அவரது திரையுலகப் பொன்விழாவை முன்னிட்டு தமிழ் திரையுலகத்தினர் ஒரு சாதனை படைத்தனர். எழுத்து வேந்தருக்கு 50 அடி உயரத்தில் வெள்ளியால் செய்து தங்க முலாம் பூசப்பட்ட பேனாவை பரிசளித்தனர். பேனாவின் நிப்பு சுத்தத் தங்கம். பொருத்தமான பரிசு. திரையுலகில் இருந்து ஆட்சிக்கட்டிலுக்கு சென்றவர் கலைஞர். இப்போது திரையுலகம் எழுதுகோல் கொடுத்துவிட்டது.

அடுத்தது என்ன? திருவாளர் பொதுஜனம் செங்கோலைக் கொடுக்கக் கூடும்! ? ? ? ? ? ? ?

## இன்று எழுதுகோல் நாளை செங்கோல்?



## குச்சி குச்சி டவரம்மா

ஃபிரான்சில் இரும்பினால் கட்டப்பட்ட ஈஃபில் டவர் உலக அதிசயங்களில் ஒன்று. தமிழ்நாட்டில் உள்ள மித்ரன் என்பவரும் ஃபிரான்சுக்காரர்களுக்கு சவாலாக ஈபிள் டவர் கட்டியிருக்கிறார்.

படத்தில் இருப்பவர் மித்ரன். அவர் அருகே இருப்பதுதான் ஈபிள் டவர்.

எப்படி உருவாக்கியிருக்கிறார் தெரியுமா? தீக்குச்சிகளால்!

லேசுப்பட்ட வேலையல்ல, மொத்தமாக 30 ஆயிரம் தீக்குச்சிகளை உபயோகித்து 100 மில்லி மீட்டர் உயரமுள்ள டவரை தத்ரூபமாக வடிவமைத்தார். ஈபிள் டவரின் நூறாவது நாள் கொண்டாட்டத்தின்போது ஃபிரான்ஸ் ஜனாதிபதிக்கு இதனைப் பரிசளித்தார். ஜனாதிபதி வியந்து பாராட்டினாராம். மித்ரன் ஃபிரான்சில் பணியாற்றுபவர்.



## சுவரில் முளைத்த தலைகள்

ஆர்ஜெண்டினா நாட்டில் சிறைகளில் கைதிகளின் ராச்சியம் தான். சிறையில் இருந்து தப்புவது, உள்ளே கலவரம் செய்வது என்பவை சகஜம். அங்குள்ள சிறைச்சாலை ஒன்றில் ஜன்னல் சுவரை உடைத்து தலையை வெளியே நீட்டி தமது உறவினர்களுடன் பேசினார்கள் கைதிகள். சமீபத்தில் நடந்த சம்பவம் இது. காலம் மாறிப் போச்.





படிப்பகம்

www.padippakam.com

# சினிவிசிட்

## முதல் குழந்தை

டிஸ்கோ சாந்தியின் தங்கையான நடிகை லலிதாகுமாரியும், பிரகாஷ்ராஜும் படு சந்தோசத்தில் இருக்கின்றனர். பெண் குழந்தை பிறந்துள்ளது. பூஜா என்று பெயர் வைத்துள்ளனர். குழந்தை பிறந்த நேரம் பிரகாஷ்ராஜுக்கு அதிஷ்டமாம். தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம் என்று பல மொழிப் படங்களிலும் வாய்ப்புக்கள் குவிகிறதாம்.

குழந்தை பிறந்தது திருப்பதி ஏழுமலையானின் செயல் என்கின்றனர் இருவரும்.

## திகில் படம்

இளையராஜாவின் மகன் கார்த்திக்ராஜா இசையமைக்கும் புதிய படம் ... திகில் காட்சிகள் நிறைந்த படம். கதாநாயகியாக ... நடிக்கிறார். கதாநாயகன் தேர்வு நடைபெற்று வருகிறது. கதை வசனம் பீட்டர் செல்வக்குமார். இயக்கம் பேபி.



மாதுரி டிக்ஷித்

## ஊஹா ஒகேஹா

நடிகை சிவரஞ்சனி தமிழில் வாய்ப்பு இல்லாததால் தெலுங்குப் படவுலகுக்கு சென்றார். அங்கு வி.சத்யநாராயணா என்னும் இயக்குநருக்கு சிவரஞ்சனியை பிடித்துவிட்டது. சிவரஞ்சனியும் இயக்குநருடன் பிசின்போல ஒட்டிக்கொண்டார். இயக்குநர் மனம் மகிழ்ந்து சிவரஞ்சனியை தட்டிக்கொடுத்தார். 'ஊஹா' என்று பெயரை மாற்றிக்கொண்ட சிவரஞ்சனி மளமளவென்று மார்க்கெட்டை உயர்த்திக்கொண்டார். தமிழில் சிவரஞ்சனி நடித்த படங்கள் கூட தெலுங்கில் மொழிமாற்றம் செய்யப்படும் அளவுக்கு சிவரஞ்சனியின் மார்க்கெட் சூடுபிடித்தது.

இயக்குநர் சத்யநாராயணாவின் பிடியில் இருந்து விடுபட்ட சிவரஞ்சனிக்கு தெலுங்கு நடிகர் ஸ்ரீகாந்த் மீது ஒரு இது. அதுதான் காதல். இருவருமே ராசியாகிவிட்டனர். இந்த வருட இறுதிக்குள் இருவருக்கும் திருமணம் நடக்கும் என்று தெரிகிறது. இரண்டுபேருக்கும் அவரவர் வீட்டில் பச்சைக் கொடியாம்!

## எங்கே போகிறார்?

நடிகை வினிதா அடிக்கடி ஆந்திராவின் தலைநகரான ஹைதராபாத்திற்கு பறந்து செல்கிறார். அங்கு ஏன் செல்கிறார் என்பது ஒரே மர்மமாக இருக்கிறதாம்.

"வினிதா தெலுங்குப் படவுலகில் படு பிஸி. அதனால்தான் அடிக்கடி செல்கிறார்." என்று வினிதாவின் வீட்டில் சொல்கிறார்கள். விசாரித்துப் பார்த்ததில் தெலுங்கில் வினிதா ஒரு படத்தில்கூட நடித்துக் கொண்டிருக்கவில்லை என்று தெரிய வந்துள்ளது.

அப்படியானால் வினிதா யாரைச் சந்திக்கப் போகிறார்? மோப்பம் பிடிக்கிறார்கள் நிருபர்கள். விடை விரைவில் தெரியும்.

## கிழவியாக நடிக்கும் கமல்

கமல்-மீனா ஜோடி நடித்துவரும் புதிய படம் அவ்வை சண்முகி.

படத்திற்குப் படம் வித்தியாசம் காட்டிவரும் கமல் 'அவ்வை சண்முகி' படத்தில் என்ன செய்கிறார் தெரியுமோ? 65 வயது கிழவியாக பல காட்சிகளில் தோன்றுகிறார். 'அவ்வை சண்முகி' என்பது அந்தப் பாத்திரத்தின் பெயர்தான்.

ஆங்கிலத்தில் 'மிஸஸ் டவுட் ஃபயர்' என்ற பெயரில் வெளியான படத்தை தெலுங்கில் மேடம் என்ற பெயரில் எடுத்தாங்கள். சிங்கீதம் சீனிவாசராவ் இயக்கியிருந்தார். அந்தப்படக் கதைதான் தமிழில் 'அவ்வை சண்முகி' படக் கதையும்.

விவாகரத்து செய்துவிட்டு தன் குழந்தைகளுடன் சென்றுவிடுவார் மனைவி. குழந்தைகளை பராமரிக்கும் ஆயாவாக வேடமிட்டு தன் மனைவியிடமே வேலைக்குச் செல்கிறார் கணவர். அது தான் கதை. பெண் வேடத்தில் நகைச்சுவை கலந்து அசத்தப் போகிறார் கமல்.

## இந்தியில் முஸ்தபா

தமிழில் நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது 'முஸ்தபா'. நெப்போலியனின் மார்க்கெட்டையும் உயர்த்திருக்கிறது.

இந்தியில் 'முஸ்தபா' படத்தை தயாரிக்கப்போகிறது ஒரு பிரபல படநிறுவனம். நெப்போலியன் நடித்த பாத்திரத்தில் பிரபல இந்தி நடிகர் ஒருவர் நடிப்பாராம். லட்சுமி நடித்த வேடத்தில் ஷபானா ஆஸ்மி நடிக்கிறார்.



ஜோதிமீனா

## பூலான் தேவி வெல்வாரா?

பூலான்தேவியின் கதை 'பண்டிட் குயின்' என்ற பெயரில் படுவசூலுடன் ஓடிக்கொண்டிருக்கிறது. 'செக்ஸ்' காட்சிகளுக்காக படம் ஓடுகிறது என்கிறார்கள். அந்தப் படத்தால் தனது கௌரவம் பாதிக்கப்படுவதாக பூலான்தேவி கவலைப் பட்டிருக்கிறார். இந்தியத் தேர்தலில் சமாஜ்வாடி கட்சி சார்பாக எம்.பி.தேர்தலில் போட்டியிடுகிறார் பூலான்தேவி.

'பண்டிட் குயின்' படத்தில் பூலான் தேவியின் கதையை அறிந்து கொண்ட இளைஞர் பட்டாளம் பூலானைப் பார்க்க திரள்கிறதாம். வெற்றி பெறுகிறாரோ இல்லையோ, இளம் தலைமுறையை கவர்கிறார். அதற்கு 'பண்டிட் குயின்' படமும் உதவியிருக்கிறது.

## அடித்தார் மொட்டை

குஞ்சுமோன் தயாரிக்கும் படங்களில் யாராவது ஒரு நடிகரை மொட்டை போட வைத்துவிடுவார். குஞ்சுமோன் தயாரிப்பில் உருவான 'சூரியன்' படத்தில் சரத்குமார் மொட்டை அடித்தார். 'ஜென்டில் மேனி'ல் சரண்ராஜ் மொட்டை அடித்தார். இப்போது குஞ்சுமோன் தயாரிக்கும் படங்களில் ஒன்றான 'சக்தி'யில் நிழல்கள் ரவி மொட்டை அடித்துக்கொண்டு நடிக்கிறார். அரிவாள்மீசை வைத்திருக்கும் குஞ்சு மோனுக்கும் மொட்டைக்கும் என்ன சம்பந்தம்?

## புதிய படம் 'இலங்கை'

தமிழ் திரைப்பட உலகில் பெயர் பஞ்சம் நிலவுவது தெரிந்த விஷயம். இப்போது புதிய படம் ஒன்றுக்கு 'இலங்கை' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

இளவரசி, தசரதன் போன்ற படங்களில் வில்லனாக நடித்த மில்டன் கதாநாயகனாக நடிக்கிறார்.

## பறந்து வந்து பாடினார்

பின்னணிப்பாடகர் ஜேசுதாஸ் தற்போது இலண்டனில் குடியேறியிருக்கிறார்.

'அந்த நாள்' என்னும் படத்தில் சவுர்ந்தர்யன் இசையில் ஒரு பாடலைப் பாடியுள்ளார் ஜேசுதாஸ்.

அப்பாடலுக்காக இலண்டனிலிருந்து சென்னை வந்தார் ஜேசுதாஸ். பாடல் பதிவு முடிந்ததும் பறந்துவிட்டார்.

## தாய்க்குலத்தின் யோசனை

முன்னாள் கவர்ச்சி நடிகை ஜோதிலட்சுமியின் மகளான ஜோதிமீனாதான் புதிய வரவுகளில் தூள் கிளப்புகிறார். 'எப்படியும் நடிக்கத் தயார்' என்ற அறிவிப்போடு களத்தில் இறங்கியிருக்கிறார்.

படவாய்ப்புக்களை பற்றிக்கொள்வது எப்படி, இயக்குநர்களை அனுசரித்துப் போவது எப்படி? போன்ற நுட்பங்களை அனுபவமுள்ள தாய்க்குலம் கற்றுக் கொடுத்திருக்கிறாராம்.

ஜோதிமீனா தனது தாய்க்குலத்தின் அசத்தலான ஆலோசனைகளோடு ஒரு கலக்குக் கலக்குவதால் ஏனைய கவர்ச்சி நடிகைகள் பாடு திண்டாட்டமாகி விட்டது. அதிகம் பாதிக்கப்பட்டிருப்பவர் விசித்ரா தான்.

## குஷ்புவின் ...

சினிமாக் காதல் வேறு; ...
விளக்கம் தருகிறார் குஷ்பு, வி...
"சினிமாவுல படத்துக்குப் பட...
பிடிச்சு ஆடுறோம், பாடுறோம். க...
சும்மா நடிப்புத்தான். இருந்தா...
உண்மையான உள்ளமுண்டு. ...
ஆனால் சிலர் நிஜமான கா...
நினைக்கிறாங்க. அதுதான் ...
வரை பெண்களை பயன்ப...
ஆண்கள் இப்பல்லாம் இந்த ச...
வர்றாங்க.
அதனால் காதல் என்ற பெ...
ஏமாற்றும் கயவர்களை தெரிந்து ...
அடையாளம் கண்டு பெண்க...
என்று சொல்லியிருக்கிறார் ...
கொண்டு அடித்திருக்கிறார்?

## முருகனைத் துரத்தியவள்

முருகன் ஒரு கார்மெக்கானிக். அவன் மீது காதல் கொள்கிறாள் பூக்காரி செண்பகம். முருகன் விருப்பமில்லாததுபோல நடந்து கொண்டான்.

மெக்கானிக் வேலைத்தளத்திற்கு வருகிறாள் செண்பகம். வேலையாள் கிங்காங் என்பவன் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறான். தண்ணீர் பைப்பில் ஏதோ கோளாறு. தண்ணீரை வேகமாக பீய்ச்சி அடிக்கிறது.

* பிரபு- சத்யராஜ் நடிக்கும் 'சிவசக்தி' படத்தை இயக்கி வ... வெங்கடேஷ் நடிக்கும் ஒரு படத்தையும், விஜயசாந்தி நடிக்கும்...
* 'அரவிந்தன்', 'பாரதி கண்ணம்மா', 'டாட்டா-பிர்லா' ஆகிய வெளிப்படங்களில் நடித்து வரும் பார்த்திபன், விரைவில் நட்சத்திர இயக்குநர் பி.வாசு இயக்கும் படமொன்றிலும் நடிக்கவுள்ளார்.
* 'அதர்மம்' படத்தைத் தயாரித்த ஜி.கே. ஃபிலிம்ஸ் நிறுவனம் அடுத்து 'நேதாஜி' என்ற படத்தைத் தயாரிக்... நடிக்கும் இப்படத்தை மூர்த்தி கிருஷ்ணா என்பவர் இய...
* கே. எஸ். ரவிக்குமாரிடம் உதவி இயக்குநராகப் பணி... வெற்றிக்குப் பின்னர் 'காதல் கோட்டை' என்ற படத்... முக்கிய வேடமொன்றில் கே.எஸ்.ரவிக்குமாரை நடிக்க...
* இந்தியில் தர்மேந்திராவுடன் இணைந்து 'குண்டாக்... விஜயசாந்தி. அடுத்து அமிதாப்பச்சன் நடிக்கும் பட... நடிக்கவிருக்கிறார்.
* படங்களின் பெயர்களைப் பதிவு செய்யும் பி... செய்யப்பட்டுள்ள படமொன்றில் பெயர் என்ன தெ...
* கே.டி குஞ்சுமோன் தயாரிக்க, கதிரின் இயக்கத்தில்... இந்தியில் 'லவ்வர்ஸ் பார்க்' என்ற பெயரில் மொ...
* தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் தயாரிக்கப்... போது இந்தி பேசவுள்ளது. இந்தியில் நாட்டாமை...
* அருண்பாண்டியனின் சகோதரர் துரைபாண்டிய... நடிக்கவிருந்த 'புலி பொறந்த மண்ணு' படம் ...
* கன்னடத்தில் கடந்த ஆண்டு வெளியாகி பெ... கதாநாயகியாக நடித்தவர் பிரேமா. இவர் வ... வுள்ளார்.

## மகேஸ்...

'கருத்தம்ம... கதாநாயகிகளி... வர் மகேஸ்வர்... தங்கை என்பது... தமிழில் பெரி... கிடைக்கவில்லை...
இப்போது ... படத்தில் பிரபு... கிறார். அதற்கு... படத்தில் நடித்... நாயகன் சக்கர... சக்கரவர்த்திக்... மலர்ந்து கனிந்... டும் கொட்டப்...



நெப்போலியன்-சுவாதி
படம்- சிவன்



படிப்பகம்

www.padippakam.com

## ...க்குள் வேட்டை

...துறை அதிகாரி. வெளிநாட்டில் இருந்து ...ம்பலை கண்டுபிடிக்கிறார். அதனால் ...ல்லன் கோஷ்டி விஜயகுமாரின் குடும் ...டுகிறது. அதிகாரியும், அவரது ஒரு ...யிர் தப்புகிறார்கள். 30 நாட்களுக்குள் ...ப் பிடிப்பேன் என்று சவால் விடுகிறார் ...டையே அவரைக் கடத்திச் செல்கிறது ... காட்டுக்குள்தான் தந்தையை மறைத்து ...கள் என்று தகவல் பெறுகிறாள்

...க தானே தனியாகப் புறப்படுகிறாள். ...லும் மகளுக்கு விலங்குகள் உதவி செய் ...ரின் உதவியோடு வில்லன் கோஷ்டியை ..., தந்தையை மீட்டுவருகிறாள். இதுதான் ...டத்தின் கதை.

அதிகாரியாக விஜயகுமாரும், மகளாக ...த்தனர். பிரகாஷ்ராஜ், ரேகா, சரத்பாபு, ஆகியோருடன் இந்திப்படவுலக வில்லன் ...ம் நடிக்கிறார். வித்தியாசமான ...கப் படங்களில் நடித்து சாதனை ...ன்குரோவர். ஏ.கோதண்டராமரெட்டி ...வேகமாக வளர்ந்து வருகிறது.

## பந்தயப் படங்கள்

சித்திரைப் புத்தாண்டில் மலையாளத்தில் வெளியாகியுள்ள மூன்று படங்களுக்குள் கடும் போட்டி.

மம்முட்டி நடித்துள்ள 'ஹிட்லர்', மோகன்லால், பிரபு, தபு நடித்துள்ள காலாபாணி, அரவிந்தசாமி, ஸ்ரீதேவி நடித்துள்ள தேவராகம் ஆகிய மூன்று படங்களும் போட்டி போடுகின்றன.

ஏழு விருதுகளைப் பெற்றுள்ள காலாபாணிதான் பந்தயத்தில் ஜெயிக்கும் என்கிறார்கள்.

'ஹிட்லர்' படத்தில் மம்முட்டிக்கு ஜோடி கிடையாது. ஷோபனா உட்பட 6 கதாநாயகிகள் இருக்கிறார்கள். 6 பேரும் மம்முட்டிக்கு சகோதரிகளாக நடித்துள்ளனர்.

## பின்னணி நடிகைகள்

நடிக்க வாய்ப்பில்லா விட்டாலும் வாயை வைத்து பிழைத்துக் கொள்கிறார்கள் பல நடிகைகள். தமிழ் பேசத் தெரிந்த குரல்வளமுள்ள நடிகைகளுக்கு அந்த அதிஷ்டம் கிடைத்துள்ளது.

பம்பாய் நடிகைகளுக்கு தமிழில் பின்னணிக் குரல் கொடுக்கும் நடிகைகளில் ரோகிணி, சரிதா, பானுப்பிரியா போன்றோர் முதலிடத்தில் உள்ளனர்.

இந்தியன் படத்தில் மனிஷாவுக்கு ரோகிணியும், ஊர்மிளாவுக்கு பானுப்பிரியாவும் பின்னணிக்குரல் கொடுத்துள்ளனர்.

## ரம்பா 30 இலட்சம்

பிரபு-சத்யராஜ் நடித்து வரும் சிவசக்தி படத்தில் ரம்பாவும் நடிக்கிறார். அவர்தான் பிரபுவின் ஜோடி. சிவசக்தி படத்தில் நடிக்க ரம்பா வாங்கிய சம்பளம் ஆறு இலட்சம்.

இப்போது புதிய படங்களில் ஒப்பந்தம் செய்யப் போனால் ரம்பா கேட்கும் சம்பளம் 20 இலட்சம்.

"நக்மாவுக்கு 25 இலட்சம் கொடுக்கப்படுகிறது. அவரை விட நான் எந்தவிதத்தில் குறைச்சல்?" என்று கேட்கிறாராம் ரம்பா. ஆராயப்படவேண்டிய விஷயம்தான்!

முகப்பில் நக்மா + நக்மா

படம்:-அரவிந்தன்



கமல்-மனிஷா கொய்ராலா
படம்-இந்தியன்



மனிஷா கொய்ராலா

## ...கோட்டையில்

...அஜித்குமார்-ஹீரா, தேவயானி ...கும் படம் 'காதல் கோட்டை.'

...தல்கட்ட படப்பிடிப்பு 25 நாட்கள் ...து முடிந்துள்ளது. பாடல் காட்சி ...க்காக மூன்று இலட்சம் ரூபாய் ...வில் அரங்கம் போட்டு படமாக்கினார்

...சிவப்பு லோலாக்கு குலுங்குது, குலுங்குது' பாடலுக்காகவே அந்தச் செலவு. ...0 நடனப் பெண்கள், 20 யானைகள், ...ட்டகங்கள், 20 குதிரைகள் சகிதம் ...குமார் பங்குபற்றினார்.

## ...யின் காதல்

...படத்தில் இரண்டு ...வராக அறிமுகமான ...டிகை ஸ்ரீதேவியின் ...புத் தகுதி. ஆனாலும் ...யில் வாய்ப்புக்கள்

...ாஞ்சாலங்குறிச்சி' ... தங்கையாக நடிக் ...ய தெலுங்கில் ஒரு ... அப்படத்தின் கதா ...தி. மகேஸ்வரிக்கும், ... இடையே காதல் ...டது. விரைவில் டும் ...ம் என்று தகவல்.

## மன்சூருக்கு 150 வயது

மன்சூர் அலிகானுக்கு 150 வயது வரை வாழ்ந்த மனிதனின் பாத்திரம் கிடைத்திருக்கிறது. படத்தின் பெயர் 'மாயாவி'.

மர்மக்கதையுள்ள படங்களை இயக்கியவரான ஜெயதேவி மாயாவி படத்தையும் இயக்குகிறார். திரைக்கதையும் அவர்தான்.

மன்சூர் அலிகான் கதாநாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக நடிப்பவர் பம்பாய் இறக்குமதி நடிகை. பெயர், ருசிதா.

இசை: தேவா. பாடல்கள்: வைரமுத்து.

## நக்மாவின் சாகசம்

நக்மாவுக்கு போட்டியாக வந்திருப்பவர் ரம்பா.

பம்பாய் இறக்குமதி நடிகைகள் மனிஷா, ஊர்மிளா, ஷில்பா ஷெட்டி போன்றவர்கள் இந்தியில் ஒரு காலும், தமிழில் ஒரு காலும் வைத்துக்கொண்டிருப்பவர்கள் என்பதால் அவர்களால் பிரச்சனையில்லை. ரம்பா தமிழிலும் கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பதால் நக்மாவுக்கு போட்டியாகிவிட்டார்.

போட்டி என்றால் சாதாரண போட்டியல்ல. ரம்பாவின் நடவடிக்கைகளை கண்காணிக்க தனியார் துப்பறியும் நிறுவனம் ஒன்றின் உதவியை நாடியிருக்கிறார் நக்மா.

பட வாய்ப்புக்களைப் பெறுவதற்கு ரம்பா எப்படியெல்லாம் தந்திரம் செய்கிறார் என்று அறியத்தான் அந்த ஏற்பாடு.

படப்பிடிப்பு முடிந்து வீடு திரும்பும் ரம்பா எங்கெங்கு செல்கிறார். யாரையெல்லாம் சந்திக்கிறார் ரம்பாவைத் தேடி யாரெல்லாம் வருகிறார்கள் என்று கண்டுபிடித்துச் சொல்வதுதான் துப்பறியும் நிறுவனத்தின்வேலை.

தகவல் கிடைத்ததும் நக்மா செயலில் இறங்குவார். ரம்பாவை சந்தித்த தயாரிப்பாளர்களை தொடர்பு கொள்வார். அழைப்பு விடுக்கப்படும். ரம்பாவைவிட கவனிப்பு பலமாக இருக்கும்.

நக்மாவின் இந்தத் தந்திரம் எப்படியோ கசிந்துவிட்டது. ரம்பா படுகோபத்தில் இருக்கிறார். நக்மாவை வீழ்த்திக் காட்டுகிறேன் என்று சவால் விட்டிருக்கிறார். சபாஷ் சரியான போட்டி.

## வருஷ முடிவில் திருமணம்

ராம்கிக்கும்-நிரோசாவுக்கும் இடையே நீண்டகாலக் காதல் இருப்பது தெரிந்த சங்கதிதானே.

அக்கா ராதிகாவுக்கு தங்கையின் காதல் விவகாரம் அடியோடு பிடிக்கவில்லை. அதனால் இடையிலே சில காலம் காதலர்கள் சந்திக்காமல் இருந்தனர்.

இப்போது திடீர் திருப்பம். ராம்கியை காதலிக்கலாம் என பச்சைக் கொடி காட்டிவிட்டார் ராதிகா. அதனால் நிரோசா குளிர்ந்து போய் விட்டார்.

இந்தவருட இறுதியில் ராம்கி-நிரோசா திருமணம் நடக்கப்போகிறதாம். பல புதிய படங்கள் கைவசம் இருப்பதால் திருமணத்தை தள்ளிப் போட்டிருக்கிறார் ராம்கி.

## ...ட்வைஸ்

...ாதல் வேறு என்று ...தில் ஒரு பகுதி இது: ...ல நடிகர்களை கட்டிப் ...க்கிறோம். அதெல்லாம் ...னிமாக்காரர்களுக்கும் ... உண்டு.

...யும் நடிப்பு மாதிரியே ... ஆசை நிறைவேறும் ...விட்டு கழட்டிவிடும் ...யத்தில் பெருகிகிட்டே

... சொல்லி பெண்களை ...டு. நல்ல மனிதர்களை ...ாதலிக்க வேண்டும்." ... யாரை நினைத்துக்

## நட்பாம்-காதலாம்

படங்களில் நடிக்க அதிக வாய்ப்புக்கள் கிடைக்காமையால், நடிகைகளுக்கு பின்னணிக்குரல் கொடுத்துவருகிறார் ரோகிணி. 'தொட்டாச்சிணுங்கி' படத்தை இயக்கியவர் அதியமான். ரோகிணியும் அதியமானும் நெருங்கிப் பழகுகிறார்கள். "காதல் என்று அர்த்தம் கொடுக்காதீர்கள். நல்ல நட்பு மட்டுமே." என்கிறார் அதியமான். ரோகிணி வாய் திறக்கவில்லை. இருவருக்கும் இடையில் நாளும் பொழுதும் நெருக்கம் அதிகமாகிவருவதாகச் சொல்கிறது கோடம்பாக்கம் வட்டாரம்.

## ரஞ்சிதா கவனிக்கிறார்

'தமிழச்சி' படத்தயாரிப்பாளர் புதிய படம் ஒன்றை தயாரிக்கிறார். தயாரிப்பாளருக்கு நெருக்கமாக இருக்கும் நடிகை ரஞ்சிதாதான் புதிய படத்தில் ஹீரோ யார் இயக்குநர் யார் என்பதையெல்லாம் தீர்மானிக்கிறாராம். தமிழச்சி படப்பிடிப்பின்போது ரஞ்சிதாவுக்கு புடவை வாங்கிக்கொடுத்தார் தயாரிப்பாளர். புடவையை வீசியெறிந்து ஆர்ப்பாட்டம் பண்ணினார் ரஞ்சிதா. பின்னர் எப்படியோ தயாரிப்பாளரும் நடிகையும் ராசியாகிவிட்டனர். அடிக்கிற கைதான் அணைக்கும்.

## எட்டு இலட்சம்

சுகன்யா மறுபடியும் ஒரு ரவுண்ட் வந்து கொண்டிருக்கிறார். இந்தியன் படம் வெளியான பின்னர் தனது மார்க்கெட் மேலும் உயரும் என்பது சுகன்யாவின் நம்பிக்கை. அதனால் தனது சம்பளத்தை கிடுகிடுவென்று உயர்த்திவிட்டார். எட்டு லட்சம் தந்தால்தான் நடிப்பேன் என்கிறார். சுகன்யாவை ஒப்பந்தம் செய்யச் சென்ற தயாரிப்பாளர்கள் பலர் சம்பளத் தொகையைக் கேட்டதும் தலை தெறிக்க ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

## 5 இலட்சம் நன்கொடை

கலைஞர் கருணாநிதிக்கு அவரது 50 வருட கால கலையுலக சேவையைப் பாராட்டி விழா எடுக்கப்பட்டது. விழாக் குழுத் தலைவர் விஜயகாந்த். விழாவுக்காக ரஜினி கொடுத்த நன்கொடை 5 இலட்சம்.

கலைஞருக்கு திரையுலகம் சார்பாக தங்கப்பேனா வழங்கப்பட்டது. அந்த பேனா முனையின் நிப்பை தங்கத்தில் செய்துகொடுத்தவர் பார்த்திபன்.

பிரபல பட அதிபர் ஒருவரும் விழாவுக்காக 2 இலட்சம் ரூபா கொடுத்தாராம்.

விழாவில் நேரில் கலந்துகொள்ளாவிட்டாலும், அமெரிக்காவிலிருந்து வாழ்த்து அனுப்பியிருந்தார் ரஜினி.

...ண்ணீரில் செண்பகம் நனைந்து முருகன்மீது விழுகிறாள். ... சந்தர்ப்பம் என்று முருகனை கட்டியணைத்துக் கொள் ...ருகன் காதல் வசப்பட்டு செண்பகத்தை கன்னத்தில் ...கிறான். செண்பகமோ முருகனின் உதட்டோடு தன் ... சேர்த்து முத்தமிடுகிறாள். அது போதாதா. கனவு பாடல் தொடர்கிறது. இக்காட்சி இடம்பெறும் படம் ...க்கானிக் முருகனாக நடித்தவர் நெப்போலியன். ...செண்பகமாக சுவாதி நடித்தார். வேலு பிரபாகரன் ...ல் 'சிவன்' வளர்ந்து வருகிறது.

...ரேஷ் கிருஷ்ணா, தெலுங்கில் ...டத்தையும் இயக்கி வருகிறார்.

## ...னி சினி

...ரத்குமார்-ரம்பா ஜோடியாக ...ார்.

...ய அகத்தியன் 'வான்மதி' பட...க்கி வருகிறார். இப்படத்தில் ...ுள்ளார்.

...ன்ற படத்தில் நடித்து வரும் ...ல் அமிதாப்பிற்கு ஜோடியாக

...ம்பரில் அண்மையில் பதிவு ... 'போலி சாமியார் கைது'.

...வரவுள்ள 'காதல் தேசம்' படம் ...ப்பட்டு வெளியாகவுள்ளது.

...வெற்றிபெற்ற 'நாட்டாமை' இப் ...டிக்கவிருக்கிறார் அனில் கபூர்.

...க. ராஜ்கிரண் கதாநாயகனாக ...து கைவிடப்பட்டுள்ளது.

...பெற்ற 'ஓம்' என்ற படத்தில் ... தமிழ்படம் ஒன்றில் நடிக்க



ஸ்ரீவித்யா-கனகா-பாரதி
கார்த்திக்
படம்-கட்டப்பஞ்சாயத்து

## இதயமே இதயமே

ஸ்ரீதேவியின் தங்கை மகேஸ்வரியும் சக்கரவர்த்தியும் இணைந்து நடித்து தெலுங்கில் வெற்றிபெற்ற படம் ஒன்று தமிழில் மொழிமாற்றப்படுகிறது. படத்திற்கு 'இதயமே, இதயமே' என்று தமிழில் பெயர் சூட்டியுள்ளனர்.

"என் காதலா உன் கைகளால் என் உணர்ச்சிகளை தூண்டாதே, என் உயிர்வரைக்கும் தீண்டாதே" என்று வைரமுத்து எழுதிய பாடலும் தமிழுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது. மே மாதம் திரைக்கு வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# அழகுக்கு அழகு

எல்லாப் பெண்களும் அழகாக இருக்கிறார்களா என்றால் இல்லை என்பதுதான் பதில். காரணம் என்ன? அழகாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படாத பெண்களே இல்லை எனலாம்.

ஒரு பெண்ணிற்கு நடை, உடை,



பாவனை எல்லாவற்றிலும் அழகும் நளினமும் அவசியம் தேவை. இதுதான் ஒரு பெண்ணின் வாழ்க்கையை முழுமையாக்குகிறது.

நான் கறுப்பாக இருக்கிறேனே....எனக்கு இது பொருத்தமாக இருக்குமா என்று நினைக்கக்கூடாது. பணம், காசு இல்லையே நகை, புடவை வாங்க என்று கவலைப்பட வேண்டாம். முதலில் நாம் அழகில்லை என்ற எண்ணத்தை விடுத்து, அழகானவர் என்ற எண்ணத்தை நாம் நம் மனதில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

வேலைக்குப் போகும் பெண்ணாக இருந்தாலும் சரி வேலைக்குப் போகாத பெண்ணாக இருந்தாலும் சரி குத்து விளக்கைப் போல பிரகாசிக்கத்தான் விரும்புவார்கள்.

நமக்கு எந்தச் சேலை பொருந்தும் எதைத் தேர்ந்து எடுக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு சேலை உடுத்த வேண்டும். நன்றாகத் துவைத்து, கசங்காமல் சேலை கட்டப் பழகிக் கொள்ள வேண்டும். சேலைக் கேற்ற மேட்சிங் பிளவுஸ் அணிய வேண்டும். சேலையினைக் கண்டபடி கட்டாமல் அழகாக மடிப்பு வைத்துக் கட்டி, முந்தானையை நீளமாகத் தொங்க விட்டுக் கொண்டு சேலையை பின் பண்ணிக் கொண்டால் கைதேர்ந்த நடிகையும் உங்களிடம் பிச்சை எடுக்க வேண்டும். சாதாரண பருத்திப் புடவையிலும் மின்னலாம்.

மணிக்கணக்கில் மேக்கப் அவசியமே இல்லை. மாசு மருவற்ற முகமாக இருந்தாலே அழகுதான். கை, கால், நகங்களை வெட்டி அழகாக வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல சோப்புப் போட்டுத் தேய்த்துக்குளித்து மேனி அழகைக் காப்பாற்றுங்கள்.


நிறைய நகைகள் போட்டால்தான் அழகு என்று நினைக்க வேண்டாம். கழுத்தில் ஒரு மெல்லிய சங்கிலி, காதுக்கு ஒரு தோடு, கையில் ஒரு வளையல், ஒரு மணிக்கூடு என்றாலே நீங்கள் அழகுராணிதான். கல்யாணத்திற்கு மற்றும் விசேஷங்களுக்குச் சென்றால் மட்டும் சிறிது அதிகமாக நகைகளைப் போட்டுக் கொள்ளுங்கள். அது கூடத் தேவையில்லைதான். ஆனால் நீங்கள் வாங்கி வைத்திருக்கும் நகைகளை என்ன செய்வது? விழாக்காலங்களில் பட்டுடனும் நகைகளுடனும் ஜொலித்துக் கொள்ளுங்கள். தலையில் பூ வைத்தால் இன்னும் உங்கள் அழகு மிளிரும். ஆனால் அதற்காகப் பூக்கடையையே தலையில் வைத்துக் கொள்ள வேண்டாம்.

பெண்களுக்கு அடுத்து முக்கியம் செருப்பு. தேவை என்றால் மட்டுமே ஹீல்ஸ் செருப்பு அணியுங்கள். தேவை இல்லை என்றால் சாதாரண செருப்பு போதுமே. இவை எல்லாவற்றையும் விட ஒரு பெண்ணின் அணுகுமுறையும் நாகரீகமாக அழகாக இருக்க வேண்டுமென்றால் மென்மையாக மெதுவாகப் பேச வேண்டும். உரக்கக் கத்திப் பேசக்கூடாது. அளவோடு பேச வேண்டும். கோபத்தை முடிந்த அளவிற்குக் குறைத்து புன்னகை முகத்துடன் காட்சியளியுங்கள். நடப்பது, நிற்பது, சாப்பிடுவது, அமர்வது எல்லாவற்றிலும் நளினம் இருக்க வேண்டும். எனவே கவலைப்படாமல் மன சந்தோசத்துடன் இருந்தாலே அழகு தானாக வந்து விடும்.

# குளிர் சாதனப்பெட்டி கெடாமலிருக்க

தொடர்ந்து 24 மணிநேரமும் ஃபிரிட்ஜ் இயங்கிக் கொண்டே இருப்பதால், மின்சாரம் அதிகம் செலவாகும். ஃபிரிட்ஜைக் கையாளும் போது சில முக்கிய விஷயங்களைக் கருத்திற் கொண்டு செயற்பட்டால் மின்சாரச் செலவை ஓரளவிற்குக் குறைக்கலாம்.

* குளிர்ந்த நீரைக் குடிப்பதற்காக குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அடிக்கடி ஃபிரிட்ஜைத் திறப்பார்கள். இதன் விளைவாக வெளியிலிருந்து வெதுவெதுப்பான காற்று உள்ளே புகுந்து, அந்தக் காற்றைக் குளிர வைக்க கொம்பிரேசரின் சுமையை அதிகரித்து விடும்.
* இதைத் தவிர்க்க குளிர்ந்த நீரை ஒரு பிளாஸ்க்கில் ஊற்றி வெளியில் வைத்துக் கொண்டு, தேவையான போது பருகிக் கொள்ளலாம். ஃபிரிட்ஜ் இயங்கத் தேவைப்படும் மின்சாரம் இதன்மூலம் கணிசமாகக் குறைக்கப்படும்.
* ஃபிரிட்ஜின் உள்ளே குறைந்த பொருட்களை வைப்பதன் மூலம், மின்சாரமும் குறையும் என்பது தவறான ஒரு கருத்து.



* ஃபிரிட்ஜின் பின்னாலுள்ள கொன்டென்சர் கொயில் சரியாக இயங்க வேண்டுமானால், அதை அடிக்கடி சுத்தப்படுத்த வேண்டும்.
* திரவப் பொருட்களை மூடிய பாத்திரங்களில் தான் வைக்க வேண்டும்.
* சூடான பொருட்களை நன்றாக ஆற வைத்த பிறகே ஃபிரிட்ஜினுள் வைக்க வேண்டும்.
* குளிர் காலங்களில் ஃபிரிட்ஜின் வெளிப்புறப் பகுதிகளில் நீர்த்திவலைகள் தோன்றி, அவற்றின் நிறம் மாறவும், துருப்பிடிக்கவும் செய்யக் கூடும். எனவே, வெளிப்பகுதிகளை அவ்வப்போது துணியால் துடைத்து விட வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுசுந்தினி

## உருளைக்கிழங்கு ரோஸ்ட்

**தேவையான பொருட்கள்:**

உருளைக்கிழங்கு- 1/4 கிலோ
மிளகாய் வற்றல்-3
சின்ன வெங்காயம்-100 கிராம்
கறுவா-2 துண்டு
பெருஞ்சீரகம்-1/2 தேக்கரண்டி
உப்பு-தேவையான அளவு
எண்ணெய்-தேவையான அளவு

**செய்முறை:**

உருளைக் கிழங்கைத் தோல் சீவி 1/2 அங்குல கனத்திற்கு வட்டமான துண்டுகளாக வெட்டவும். வெங்காயம், பெருஞ்சீரகம், மிளகாய் வற்றல், கறுவா, உப்பு போன்றவற்றைச் சேர்த்து அரைத்து எடுத்துக் கொள்ளவும். வெட்டி வைத்துள்ள உருளைக் கிழங்குகளை எண்ணெயில் பொரித்து எடுக்கவும். வேறொரு வாணலியில் எண்ணெய் ஊற்றிக் கொதித்ததும், அரைத்த மசாலாவைப் போட்டு பச்சை வாசனை போகும் வரை நன்றாக வதக்கிக் கொள்ளவும். அதன்பின் பொரித்து வைத்துள்ள உருளைக் கிழங்குகளைப் போட்டு ஒரு நிமிடம் கிளறி இறக்கவும். உருளைக்கிழங்கு ரோஸ்ட் ரெடி.

# சார்ஜாவில் அசத்தியவர்கள்

சார்ஜாவில் நடைபெற்ற (ஏப்ரல் 12-1996) பெப்சி கிண்ணப் போட்டியில் துடுப்பாட்டத்தில் அசத்தலாக விளையாடிய வீரர்கள்.



கேரி கேஸ்டன்

அமீர் சொகைல் (பாகிஸ்)-105 எதிர்இந்தியா.(ஏப்ரல் 12,96)
கலினன் (தெ. ஆ)-110 (ஆ.இ)- எதிர் பாகிஸ்தான். (ஏப்ரல்13,96)
கேரி கேஸ்டன் (தெ.ஆபி)-108- எதிர் இந்தியா (ஏப்ரல் 14, 96)
டெண்டுல்கர் (இந்தியா)-118-எதிர் பாகிஸ்தான் (ஏப்ரல் 15,96)
சித்து (இந்தியா)-101-எதிர் பாகிஸ்தான் (ஏப்ரல் 15,96)
கேரி கேஸ்டன் (தெ. ஆபி) 115 (ஆ.இ)- எதிர் இந்தியா (ஏப்ரல் 19,96)
சஞ்சய் மஞ்ரேக்கர் (இந்தியா)-59- எதிர் பாகிஸ்தான் (ஏப்ரல் 12,96)
சலீம் மாலிக் (பாகிஸ்தான்)-64- எதிர் தென்.ஆபிரிக்கா (ஏப்ரல் 13,96)
ஹட்சன் (தென்.ஆபி)-57-எதிர் பாகிஸ்தான் (ஏப்ரல் 13,96)
கேரி கேஸ்டன் (தெ.ஆபி)-64 எதிர் பாகிஸ்தான் (ஏப்ரல் 13,96)
குரோஞ்ச் (தென்.ஆபி)90- எதிர் இந்தியா (ஏப்ரல்14,096)
சஞ்சய் மஞ்ரேக்கர் (இந்) 53 எதிர் தெ.ஆபி (ஏப்ரல் 14,96)
அமீர் சொகைல் (பாகி) 78 எதிர் இந்தியா (ஏப்ரல் 15,96)
ரஷீத் லத்தீப் (பாகி) 50 எதிர் இந்தியா (ஏப்ரல் 15,96)
ஹட்சன் (தென்.ஆபி) 94 எதிர் பாகிஸ்தான் (ஏப்ரல் 16, 96)
விக்ரம் ரதோர் (இந்) 50 எதிர் தென். ஆபி (ஏப்ரல் 17,96)
கலினன் (தெ.ஆபி) 64 எதிர் இந்தியா (ஏப்ரல் 17,96)
குருக்ஸ் (தெ.ஆபி) 54 எதிர் இந்தியா (ஏப்ரல் 17,96)
சிம்கொக்ஸ் (தென்.ஆபி) 61 எதிர் இந்தியா (ஏப்ரல் 19,96)
டெண்டுல்கர் (இந்தியா) 57 எதிர் தென்.ஆ (ஏப்ரல் 19,96)

# உண்ணும்போது ஒழுங்கு தும்மும்போது கவனம்

கல்யாணப் பந்திகளிலோ, அல்லது வீட்டில் பலபேர் மத்தியிலோ, அல்லது கடைகளிலோ சாப்பிடும்போது நாகரீகமான முறை எப்படி இருக்க வேண்டும்? இதோ சில யோசனைகள்.

கை, கால்களை ஆட்டாமல் அடக்கமாக அமர்ந்துகொள்ளவேண்டும்.

அனைவருக்கும் சாப்பாடு பரிமாறப் பட்டவுடன் அல்லது தேவையான உணவை தருவித்த பின்னர் உணவு சூடாக இருந்தால் ஆறும்வரை பொறுமையாக இருந்து சாப்பிட ஆரம்பிக்கலாம். கல் அகப்பட்டால் நாசூக்காக எடுத்து இலையில் அல்லது பாத்திரத்தின் ஓரத்தில் வைத்துவிடுங்கள்.

தும்மல் வந்தால் கைக்குட்டையை வாயில் பொத்தி யார்மீதும் எச்சில் உணவு பட்டுவிடாமல் திரும்பி நாசூக்காகத் தும்மிவிட்டு அமைதியாக சாப்பிடுங்கள்.

சுபகாரியத்தில் இலையில் சாப்பிட்டால், சாப்பாடு முடிந்தவுடன் இலையை நம்மை நோக்கி உள்பக்கமாக மடிக்க வேண்டும். துயர நிகழ்ச்சியில் விருந்துண்டால் இலையை நமக்கு எதிர் திசை நோக்கி மடிக்கவேண்டும்.

**தவிர்க்க வேண்டியவை.**



- தலைவாராமல் பரட்டைத் தலையுடன் அமர்ந்து சாப்பிடுதல்.
- டைனிங் டேபிள் முன்பாக கை கால்களை ஆட்டியபடி இருத்தல். கூன் போட்டு அமருதல். கோணல் மாணலாக அமருதல்.
- அவசர அவசரமாக சாப்பிடுதல்.
- சாப்பாட்டை சக் சக் என்று சத்தம் வரும்விதமாக சாப்பிடுதல்.
- சாப்பிடும்போது அனாவசியமாகப் பேசுவது, உரத்துச் சிரிப்பது, சாப்பாட்டை கையில்வைத்து உருட்டுவது, நாக்கை நீட்டி சாப்பிடுவது.
- மற்றவர் சாப்பிடுவதை கவனிப்பது.
- இறைச்சி வகைகள் சாப்பிடும் போது கண்டபடி பல்லினால் இழுத்துச் சாப்பிடுவது.
- சாப்பிட்டு முடிந்ததும் அநாகரீகமாக ஏப்பம் விடுவது.
- சாப்பிட்டு முடிந்ததும் கையை நாக்கால் நக்குவது. விரல் சூப்புவது. விரலில் சொட்டச் சொட்ட எழுந்து நடப்பது.

# பாகிஸ்தான்-8-இந்தியா-4

1983ம் ஆண்டுமுதல் சார்ஜாவில் ஒருநாள் போட்டிகள் நடக்க ஆரம்பித்தன.

சார்ஜாவில் பாகிஸ்தான் அணி இது வரை 58 போட்டிகளில் பங்குபற்றியுள்ளது. 41 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது. 14 ஆண்டுகளில் சமீபத்தில் அமீர் சொகைல் அடித்த செஞ்சரியோடு மொத்தம் 10 செஞ்சரிகளை சார்ஜாவில் பாகிஸ்தான் எடுத்திருக்கிறது. மொத்தம் 8 தடவை பாகிஸ்தான் சாம்பியனாகியது.

சார்ஜாவில் இந்திய அணி 45 போட்டிகளில் விளையாடியது. அதில் 23 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது. நான்குமுறை இந்தியா சாம்பியன் ஆனது.

மேற்கிந்திய அணி சார்ஜாவில் 27 போட்டிகளில் விளையாடி 15 போட்டிகளில் வெற்றி பெற்றது.

ஏப்ரல் 14 இல் தென்னாபிரிக்க-இந்திய அணிகளுக்கும் இடையே நடைபெற்ற போட்டிதான் சார்ஜாவில் நடந்த நூறாவது போட்டியாகும்.

# நாலு ரன் அவுட்

இந்தியாவுக்கும், தென்னாபிரிக்காவுக்கும் இடையிலான இறுதிப் போட்டியில் இந்தியாவின் ஆட்டம் மோசமாக இருக்கவில்லை. ஆனாலும் அவசரப்பட்டு ஆடியதால் வெற்றி வாய்ப்பு நழுவியது. டெண்டுல்கர், அசாருதீன், அனில் கும்ளே, மஞ்ரேக்கர் ஆகியோர் ரன் அவுட்டாகியது பெரும் பாதகமானது. தென்னாபிரிக்காவின் பந்து வீச்சு, பந்து தடுப்பு இரண்டும் இறுதிப் போட்டியில் அபாரமாக இருந்தது. 25 முதல் 35 வரையான ஓவர்களில் இந்தியா ஒரு பவுண்டரிகூட அடிக்க முடியவில்லை. சார்ஜாவில் ஏனைய போட்டிகளில் நன்கு விளையாடிய ஜடேஜா இறுதிப்போட்டியில் 2 ரன்களுடன் அவுட்டானார்.

# ஆட்டநாயகன்

பெப்சி கிண்ண சார்ஜா போட்டிகளில் தொடர் ஆட்ட நாயகனாக கேரி கேஸ்டன் தெரிவு செய்யப்பட்டார். இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனும் அவர்தான். பெப்சி கிண்ணப் போட்டியில் இரண்டு சதங்களை அவர் அடித்திருந்தார்.. சர்வதேச ஒருநாள் போட்டிகளில் சார்ஜா போட்டியில் சேர்த்த 2 சதங்கள் உட்பட மொத்தம் 5 சதம் போட்டுள்ளார். பெப்சி கிண்ணப் போட்டியில் கேஸ்டன் 5 ஆட்டங்களில் 356 ரன் குவித்தார்.

சார்ஜா போட்டியில் தென்னாபிரிக்கா பங்கு பற்றியது இதுவே முதல் முறையாகும். எந்தவொரு போட்டியிலும் தோல்விகாணாமல் முன்னேறி பெப்சி கிண்ணத்தைக் கைப்பற்றியது தென்னாபிரிக்கா.

# இந்தியா வெல்ல வேண்டுமானால்! டெண்டுல்கர் ஆடவேண்டும்!

சார்ஜாவில் மூன்று அணிகள் மோதிய போதும் உண்மையான போட்டி இந்தியாவுக்கும்-பாகிஸ்தானுக்கும்தான். இந்த இரண்டு அணிகளும் தமக்குள் பலப்பரீட்சை செய்வதில் காட்டிய தீவிரத்தை பெப்சி கிண்ணத்தை கைப்பற்றுவதில் காட்டவில்லை. இரண்டு அணிகளையும் ஓரம் கட்டிவிட்டு கிண்ணத்தோடு சென்றுவிட்டது தென்னாபிரிக்கா.

சார்ஜாவில் சமீபத்திய பெப்சி கிண்ண போட்டிகள் ஆரம்பமாக முன்னர் பாகிஸ்தான்-இந்திய அணிகளின் கருத்துக்கள் எப்படியிருந்தன?

இந்திய அணி மனேஜர் சந்தீப்பாட்டில் இப்படிச் சொல்லியிருந்தார்.

"தற்போதைய ஒருநாள் போட்டிகளின் புதிய விதிமுறைகளின்படி ஆரம்ப ஓவர்களில் அதிக ரன்களை எடுப்பதில் கவனம் செலுத்துவோம். இப்போட்டிகள் எளிதானதாக



இருக்காது. இருப்பினும் நாங்கள் வெற்றி பெறுவோம்."

பாகிஸ்தான் அணியின் மனேஜர் இந்திகாப் ஆலம் பின்வருமாறு சொல்லியிருந்தார்.

"டெண்டுல்கர் மட்டுமே, எங்களுக்கு முக்கிய இலக்கு. அவரை வீழ்த்திவிட்டால் அதன்பின்னர் வெற்றியை எங்களை நோக்கித் திருப்பிக் கொள்வது எளிதானது."

பாகிஸ்தான் அணி மனேஜர் சொன்னது உண்மைதான். சார்ஜாவில் இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதல் சுற்றுப் போட்டியில் ஒரு ரன்னோடு அவுட்டானார் டெண்டுல்கர். ஜாவித் வீசிய பந்தை அடித்து சயீத் அன்வரிடம் காட்ச் கொடுத்தார்.

பாகிஸ்தானுடனான இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அபாரமாக ஆடினார் டெண்டுல்கர். இந்தியா வென்றது.

116 பந்துகளை சந்தித்து 118 ரன் குவித்தார் டெண்டுல்கர். அதில் 2 சிக்சர்களும், 7 பவுண்டரிகளும் அடக்கம். வாக்கார் யூனுஸ் வீசிய பந்தை அடித்து அமீர் சொகைலிடம் காட்ச் கொடுத்து அவுட்டானார்.

இந்தியாவை முதல் சுற்றுப் போட்டியில் 38 ரன்களால் பாகிஸ்தான் வெற்றி கொண்டது.

இரண்டாவது சுற்றுப் போட்டியில் பாகிஸ்தான் அணியை 28 ரன்களால் இந்தியா வென்றது.

# தினமுரசு-அம்மன் ஜுவல்லஸ் இணைந்து நடத்திய தங்கமாலை பரிசுப் போட்டி

முதல் பரிசாக நெக்லஸ் பெற்ற அதிஷ்டசாலியின் பெயர் விபரமும், ஆறுதல் பரிசுகள் பெறும் 50 அதிஷ்ட சாலிகளில் முப்பதுபேரின் விபரமும் முன்னரே வெளியாகியுள்ளன. ஏனையோரில் பத்து அதிஷ்டசாலிகள் இவர்கள்-

1. திருமதி. சாந்தி தங்கராஜா, கல்பிட்டி வீதி, ஏத்தாலை.
2. செல்வி. எம்.எஸ். பௌஸியா, 415/2, தெஹிஸ்தலாவ, பலாங்கொட.
3. செல்வி. நிம்மி, 'சாந்தி இல்லம்' நாவுள்ள, தெமோதர.
4. செல்வி. சனூஜா இன்சாப் 131, குருந்தல, கடுகன்னாவை.
5. திருமதி. எஸ். கருணாகரன், 32, அம்மன் கோவில் வீதி, வைரப்புளியங்குளம், வவுனியா.
6. திருமதி. எம்.எச்.என். மின்ரியா நீலாம்டீன், பொத்துமுல்லகே வத்த, கொடாப்பிட்டிய, அக்குரஸ்ஸ.
7. ரி. உதயராணி, 'ஐராவரி வாசா' 6ம் கட்டை, மிராஹவத்தை, பண்டாரவளை.
8. எம். சமீரா பர்வின், 600பி, 3ம் குறுக்குத் தெரு, நிந்தவூர்-02.
9. மஞ்சுளா லினஸ், 75/டி, சென்.மேரீஸ் லேன், கொழும்பு-15.
10. எம்.டபிள்யு. சித்தி வஹிதா, அல்லை நகர், தோப்பூர்-15.

# இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## திருக்கோணமலை வாசகிக்கு அதிஷ்டம்

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | செல்வி. சி.உஷாந்தினி<br>330, நீதிமன்ற வீதி, திருக்கோணமலை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

## மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** K

பெயர்:...........................

முகவரி:...........................

...........................

கையொப்பம்:...........................

உண்மை—நேர்மை—வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 04-05-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

## சந்தைக்கு வராத சங்கீதக் குயில்கள்

எங்கிருக்கிறாய்
என் ராஜகுமாரா
எங்கே இருக்கிறாய்?

உனக்குத் தெரியுமா
என் இதயப் பூவை
சம்மட்டி கொண்டு
தாக்கி தாக்கியே
பாறையாக்கி
விட்டார்கள்!

இப்போது
என்
வாழ்க்கைப் புத்தகம்
நட்ட நடு வீதியில்.
போவோர் வருவோர்
எல்லோரும்
விமர்சகர்களே!

உன்னை
எதிர்பார்த்து
வாடி நிற்கவில்லை
இந்தச் செடி
தென்றலை வரவேற்று
காத்திருக்கும்
புதுமலர் போல்
பூத்து தான் நின்றது.

இப்போது கேள்விகளும்
சமுதாயப்
பார்வைகளுமே
என்னை
வாட வைத்து
வலம் வந்து
கும்மியடிக்கிறது.

எங்கிருக்கிறாய்
என் ராஜகுமாரா?

இந்த தேசத்தின்
யுத்தப் புயலில்
அகப்பட்டு சருகாக
அகதி முகாமிலா...
அல்லது
அயல் நாட்டில்
அடிமையாகவா...
எங்கே இருக்கிறாய்?

என் முகவரியை
இவர்கள்
மாற்றும் முன்பே
உன் முகத்திரையைக்
கிழித்து விடு!

அகலிகையை
கல்லாக்கிய
கௌதமனே
நீயாவது
உடனே வா!

என்
ராமன் வரும் வரை
இந்த
உடல் கூட்டினுள்
உயிர் இருக்க
வேண்டுமெனில்
என்னைக்
கல்லாக்கிவிடு!

எங்கே இருக்கிறாய்
என் ராஜகுமாரா?

சீதனச் சந்தையில்
நீயும் ஒரு பொருளாக
விலைக்கு வாங்கப்பட்டு
விட்டாயா?
இல்லை உன்
பேரம் இன்னும்
முடியவில்லையா?

எங்கிருக்கிறாய்
என் ராஜகுமாரா?

இந்தச்
சீதை உன்னிடம்
மாளிகையா கேட்டாள்?
மனதிலொரு
இடம்தானே கேட்டாள்?!
அதை உயிர் பிரிய
முன்பே
தந்து விடக் கூடாதா??

**சூர்யா-மட்டக்களப்பு.**

## காட்சி

காற்று
பனி நீரில்
முகம் கழுவி
மர இலையில்
முகம் துடைத்து
கொண்டது.

மணிக்கூட்டு முள்
சிறுகுழந்தையாக
தத்தி தவழ்ந்து
12ஐ தாண்டி
புது வாழ்க்கை
தொடங்கிற்று

பூக்கள்
"பனிப் பஞ்சில்"
படுத்தெழும்பி
இதழ்போர்வை
விலக்கி
சோம்பல் முறிதத்து.

சூரியன்
தன் கதிர்களை
நீட்டி
உடற்பயிற்சி செய்ய
வானம்
சுத்தமாயிற்று!

இதெல்லாம் நடந்தது
நட்சத்திர பூச்சூழ்ந்த
வானக் கட்டிலில்
நிலவு மகள்-சூரியனை
புணர்ந்து பிரிந்து
உறங்கும் போதுதான்.

என்றெல்லாம்
கவியெழுத
"எம்மால்"
முடியும்தான்

ஆனாலும்...

ஷெல் வீழ்ந்து
என் குடும்பம்
சிதறி வெடிக்கையில்:
மூளைத் துணுக்குகள்
முகத்தில் ஒட்டியபின்
எப்படி எழுதவரும்?

சுபா வரன், கண்டி.

## ஹைக்கூ

சொர்க்கத்திற்கு
திரைச்சீலை
அவளின் தாவணி!
••
மயிர் தீண்டி
முள்ளு வலியில்
காதலியால் நான்!
••
கண்ணீர் சிந்தியே
கட்டுடல் கரைந்தது
எரியும் மெழுகுவர்த்தி!

மீராவோடை எஸ்.நஸீம்.

## தேன் கிண்ணம்

## யுத்த பூமியில்

மேக தேசங்களில்
குளித்துவிட்டு
நிலா காயும்
வான வீதியில்.
**
மழை
விட்டு விட்டு
அழும்!
**
அந்த நிசப்த இரவில்...
என் இதய அடிப்புக்கள் மட்டும்
காதுவரை கேட்கும்.
**
பக்கத்து வீட்டு
வேப்ப மரத்தில்
பக்கில் கத்தும்.
**
நான் பயந்து போவேன்...
'யார் மௌத்தாகி போவாங்களோ..?'
**
என் பாட்டன்
'மௌத்தானதும்'
பக்கில் கத்தித்தானாம்!
**
அடுத்த வீட்டுக்காரி
இரும்பை சூடாக்குவாள்...
பக்கில் பறந்து விடுமாம்.
**
ஆனாலும்
அது கத்திக் கொண்டிருக்கும்!
**
பக்கத்து வீட்டுக்காரி-
வயலுக்குப் போன
கணவனை எண்ணி
பதட்டப்பட்டுக் கொள்வாள்.
**
என் மூச்சுக் காற்றின்
கூட்டில்
கூதல் நிரோதிக்கப்படும்.
**
தொடர்ந்தும்
பக்கில் கத்தும்...
நான் தூங்கி விடுவேன்.
**
அடுத்த விடியலில்..
சேவலை எழுப்பிவிடும்
சூரியன்!
சேவல் கூவும்.
**
பக்கத்து வீட்டுக்காரியின்
ஓலம்
அந்த விடியலின் பூபாளமாகும்.
**
வரம்பில் கிடக்கும்
அவன் உடம்பில்
'ரவை' துளைத்த ஓட்டைக்குள்
காகம் சொண்டை நுழைக்கும்.
**
ரவை சென்ற துளையால்
இதயம், நரம்பு, குடல்..
காகம் சுவை தீர்க்கும்.
**
மானுடத்தின் பெறுமானம்
தேய்ந்து போய்..!
**
இது அவன் மனைவி:
'ஐயோ.. சுருக்காய் அடக்குங்கள்
மையத்தை!'
**
நான் மீண்டும் மீண்டும்
அர்த்தமற்ற வாழ்க்கைக்குள்
நிர்ப்பந்திக்கப்படுவேன்...!

சிபி.எம்.ஐ.எம்-நகீம்.,
பொத்துவில்-2.

************************************************

## கண்ணீரில் ஊறிய கனவுகள்

அந்த வசந்த காலத்தின்
கிண் கிணி யொலி
எனது கண்ணீர்த் தாரைகளின்
துளித் துளியோசையில்
தேய்ந்து போனது!
-o-
உன்னை நிரந்தரமாக
நான் இழந்து துடித்த
அந்த இரவின்
அதி உயர் பயங்கரத்தை
எப்படி எடுத்துச் சொல்வேன்!

இதயத்தில்
நீயில்லா வெற்றிடம்
பயங்கரப்
பாழ் வெளியாக
விரிந்து சென்றது!
-o-
இதயம் விம்மித் துடிக்க
இருட்டு ஓடிவந்து
எனைப் போர்த்த
இரு கங்கைகள்
விழி வழியே குதித்தோட

மரணித்துக் கொண்டிருக்கும்
மோகன நினைவுகள்
மீண்டும் ஒரு முறை
சிலிர்த்து எழாதா என
ஏங்கி ஏமாறுகிறேன்!
-o-
காதலுக்காகப்
பட்ட துயரங்களைப்
பூரிப்புடன் தாங்கித்
தோல்வியைத்
தழுவிக் கொள்ளுமாறு

-o-
பூமியே பிளந்து
பாதாளங்களில் நான்
வீழ்ந்து கொண்டிருந்தால்கூட
அப்படி நடுங்கியிருக்கமாட்டேன்:
நிச்சயமாகவே,
உனது துரோகத்தால்
ஏழு நரகங்களாலும்-நான்
குழப்பட்டுத் துடித்தேன்!
-o-

வந்த பாதை முடிந்தது;
உன் காதல் தொலைந்தது!
-o-
எல்லையில்லாத
பெரும் வேதனையின்
பூர்வீகத்தை-உன்
காதலின் எச்சமாகப்
பெற்றுத் தந்துவிட்டுப்
பேசாமல் போய்விட்டாய்!
-o-

விதி என் செவிகளில்
முணு முணுத்தது;
கண்ணீரில் ஊறிய
கனவுகள் - என்
காலடியில் மிதிபட்டன!
-o-

செல்வி.பஹீமா ஜஹான்,
தெமடகொல்ல,மெல்சிரிபுர.

## சிவப்பு நிலாச் சித்திரங்கள்

உன்
புன்னகை
வயதுக்கு
வந்த போது
என் வாலிபமும்
வழி
தவறிவிட்டது...!
*

உன்
மின்னல் பார்வையிலும்
மின்சாரப்
புன்னகையிலும் நான்
மிச்சமில்லாமல்
தொலைந்து போனேன்....!
*

கட்டுக்கடங்காத
கவலைகளை
கண்ணீரில்
புதைத்துக் கொண்டு
உன்
புன்னகையில்தான்
நான்-வாழ்க்கையை
புதுப்பித்துக் கொள்கிறேன்.....
*

உன்
மௌன-
பாஷையின்
மொழி பெயர்ப்பில்
மொத்த நேசங்களும்
என்னுள்
முகாந்திரங்கள் இட்டு
தனியாய்
அழுகின்றன...!
*

ஷகீ......
நீ-இல்லாத
இந்த
ஜீவிதத்தில்
என்
ஜனனக் கனவுகளிலும்
மரணம் முளைக்கின்றது...!
*

என்றாலும்...
உன்
புன்னகையின்
புதிய-
பரிணாமத்தில்
நான்
கவிதை-பூக்கிறேன்!

-அ.சுதாசேகர், பொத்துவில்-03

## "தேயாத நிலா-தித்திக்கும் பலா"


தந்தை பெரியாருடன் கலைஞர்

கலைஞர் கருணாநிதியின் அரசியலோடு மாறுபாடு இருப்பவர்களும், அவரது தமிழ் ஆற்றலோடு, தமிழில் அவர் படைத்த இலக்கிய சாதனைகளோடு மாறுபடவே மாட்டார்கள்.

டி. ராஜேந்தர் கலைஞர் பற்றி எழுதியுள்ள கவிதை ஒன்றில், கலைஞர், தேயாத நிலா தித்திக்கும் பலா என்று குறிப்பிட்டிருப்பதோடு கலைஞரது எழுத்தின் சுவையறிந்தவர்கள் உடன்பட்டேயாக வேண்டும்.


அண்ணாவுடன் ஆலோசனை

திரையுலகில் கலைஞர் கருணாநிதியின் 50 ஆண்டு கால சேவையைப் பாராட்டி தமிழ் திரையுலகம் சார்பாக பொன்விழா எடுக்கப் பட்டது.

50 அடி உயரமான தங்கத்தாலும். வெள்ளியாலும் செய்யப்பட்ட பேனா ஒன்றும், சிறிய தங்கப் பேனா ஒன்றும் கலைஞருக்கு கௌரவப் பரிசாக வழங்கப்பட்டது.

தமிழ் திரையுலகில் கலைஞரின் சாதனைப்பட்டியல் இது:

சொந்தமாக தயாரித்த படங்கள்- 26, கதை. திரைக்கதை, வசனம் எழுதிய படங்கள் 20, திரைக்கதை வசனம் மட்டும் எழுதிய படங்கள் 33, கதை, திரைக்கதை எழுதிய படங்கள் 3, பாடல்கள் எழுதிய படங்கள்-18, (காகித ஓடம் கடல் அலை மீது போவது போல.... என்ற பாடலும் கலைஞர் எழுதியதுதான்) கதை எழுதிய படங்கள்-2.

மேகலா பிக்சர்ஸ், பூம்புகார் பிக்சர்ஸ், பூம்புகார் புரொடக்ஷன்ஸ், கலை எழில் கம்பைன்ஸ் போன்ற பட நிறுவனங்கள் கலைஞருக்கு சொந்தமானவை.

எம்.ஜி.ஆர், கண்ணதாசன் போன்றவர்களை திராவிட அரசியல் பாதையில் இழுத்துவிட்டவர் கலைஞர்தான்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு பணம், பராசக்தி ஆகிய படங்களில் கதாநாயகன் வாய்ப்புக் கிடைக்கச் செய்த வரும் கலைஞர் கருணாநிதிதான்.

சிவாஜி கணேசன் தற்போது ஜெயலலிதாவின் சம்பந்தியாகிவிட்டதால், கலைஞரது திரையுலகப் பொன்விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை.


எம்.ஜி.ஆரின் மரியாதை-நட்புக்கு மாலை

## இந்த வாரம் உங்கள் பலன்

( 28.04.96 முதல் 04.05.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், புதன், செவ்வாய். |
| மிதுனம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |

சந்திரன்- சிம்மம்,கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள்வரவு, காரியானுகூலம். | மு.ப. 9 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட பயணம், மனக் கலக்கம். | காலை 7 மணி |
| புதன்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | விண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |
| சனி- | தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- | வீண்துயர் நீங்கும், முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| வியாழன்- | ஆடம்பரச் செலவு, கடன்படல். | பகல் 12 மணி |
| வெள்ளி- | தொழில் விருத்தி, உறவினர் பகை. | காலை 10 மணி |
| சனி- | முயற்சி மேன்மை, பணவரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், பெரியோர் நட்பு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | வீண் முயற்சி, இனசன நன்மை. | பி.ப. 1 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, பண இலாபம். | காலை 6 மணி |
| வியாழன்- | பயனுள்ள செயல், கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | மனத்துயர், பணச் செலவு. | காலை 7 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, தேகசுக நன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- | பயனுள்ள செயல், கௌரவ நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகாயம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வியாழன்- | வெளியிட பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | அந்நியர் பகை, பணவரவு தடை. | காலை 6 மணி |
| சனி- | பொருள் இழப்பு, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | பெரியோர் பகை, மனக்கலக்கம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- | தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| புதன்- | இனசன விரோதம், மனப்பயம் | காலை 7 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| சனி- | தொழில் கேடு, பணவிரயம். | மு.ப. 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், முயற்சி தடை. | காலை 7 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நிலை, பணவரவு. | காலை 7 மணி |
| புதன்- | துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, புதிய நட்பு. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | மனப் பயம், செலவு அதிகம். | பகல் 12 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | உயர்ந்தநிலை, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| புதன் - | வீண்குறை கேட்டல், மனக்கலக்கம். | காலை 7 மணி |
| வியாழன்- | துயர்நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | காலை 7 மணி |
| சனி- | அந்நியர் உதவி, பணச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | உயர்ந்த எண்ணம், கடன் படல். | காலை 7 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| புதன்- | குடும்பசுகம் பாதிப்பு, இனசனவிரோதம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- | வீண்குறை கேட்டல், மனக்கலக்கம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| சனி- | வெளியிடவாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, மனக்குறை நீங்கும்: | பி.ப. 1 மணி |
| புதன்- | தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- | வெளியிட பயணம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| சனி- | பயனுள்ள செயல், புதிய முயற்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, தொழில் மந்தம். | பகல் 12 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- | காரியசித்தி, கௌரவம் மேன்மை. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, பணச் செலவு. | காலை 7 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- | துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | மனக் கலக்கம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| புதன்- | பொருள் விரயம், பயமிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 7 மணி |
| சனி- | வீண்குறை கேட்டல், மனப்பயம். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், செலவு அதிகம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | மனக் கலக்கம், அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, கடன்படல். | பி.ப. 2 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| வியாழன்- | வெளியிட பயணம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தொழில் விருத்தி, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| சனி- | பெரியோர் உதவி, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |


அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

www.padippakam.com





## வேண்டாம் தம்பி

பொய்யும் புரட்டும் வேண்டாம் தம்பி
பொல்லாச் சினமும் வேண்டாம் உனக்கு
மெய்யில் நோயும் வேண்டாம் அறிவில்
மெலிந்து வாழவும் வேண்டாம்!

களவு செய்ய வேண்டாம் தம்பி
கல்வி கல்லா வாழ்வும் வேண்டாம்!
பிளவு செய்ய வேண்டாம் நமக்குள்
பிரிவினை என்பதும் வேண்டாம்!

தீமைகள் செய்திட வேண்டாம் தம்பி
தீண்டாமை என்பதும் வேண்டாம் இங்கு
ஊமையாய் வாழவும் வேண்டாம் உனது
உரிமைகள் இழக்கவும் வேண்டாம்!

கொடுமைகள் செய்திட வேண்டாம் தம்பி
கொலைகளும் உனக்கு வேண்டாம் தீரா
நெடும்பகை மனதினில் வேண்டாம் தீயோர்
நேசமும் உனக்கிங்கு வேண்டாம்!

புரட்சிபாலன், திருகோணமலை.

வண்டி இழுக்கும் நல்ல குதிரை-நெல்லு
வயலில் உழுது வரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை, ஆடு-
இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!
-சுப்பிரமணிய பாரதியார்.

**பாப்பா முரசு சிறுகதை**

# எறும்புகளின் துணிச்சல்

பொல்லாத பாம்பு ஒன்று காட்டில் இருந்தது. தனக்கு நிகர் இந்தக் காட்டில் வேறு எதுவும் இல்லை என்று அது மமதை கொண்டிருந்தது. தன் இஷ்டத்திற்கு அது காடுகளில் சுற்றித் திரிந்து கண்ணில் அகப்படும் உயிரினங்களைப் பிடித்துச் சாப்பிட்டது.

ஒருமுறை எறும்புப் புற்றுக்குள் புகுந்து, அங்கிருந்த எறும்புகளின் முட்டைகளை வேட்டையாடத் தொடங்கியது பாம்பு.

எறும்புகள் இரைதேடச் சென்ற சமயம் பார்த்து, புற்றுக்குள் பாம்பு புகுந்து விடும். ஒரு முட்டையைக்கூட மிச்சம் வைக்காது அத்தனை முட்டைகளையும் உள்ளிழுத்துச் செய்து விடும். பிறகு ஏதும் அறியாதது போல் வெளியே போய்விடும்.

இரை தேடச் சென்ற எறும்புகள் புற்றுக்கு வந்து, தங்கள் முட்டைகளைக் காணாது திகைக்கும். வேதனைப்படும் கண்ணீர் விடும்.

இப்படிப் பலகாலம் நடந்து வந்தது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த எறும்புகள் தங்கள் முட்டைகள் எவ்வாறு காணாமல் போகின்றன என்பதை அறிய விரும்பின.

ஒரு நாள் அவை அனைத்தும் புற்றை விட்டு வெளியேறி உணவு தேடச் செல்வது போல் சென்று, ஒளிந்திருந்து புற்றை நோட்டமிட்டன. சிறிது நேரத்தில் அந்தப் பிரதேசத்தையே கலக்கும் அந்தப் பாம்பு, தங்கள் புற்றுக்குள் நுழைவதைப் பார்த்தன. என்ன செய்வது என்று தெரியாமல் ஒவ்வொன்றும் சிலை போல் நின்றன.

பாம்பு வழக்கம் போல் எறும்பு முட்டைகளை வேட்டையாடி விட்டு நாக்கைச் சுழற்றியபடி புற்றை விட்டு வெளியே வந்தது. சற்று நேரம் நின்று அங்குமிங்கும் பார்த்துவிட்டு பிறகு வேறு திசையில் சென்றது.



"இந்தப் பாவிதான் இவ்வளவு காலம் நம் முட்டைகளைத் தின்று வந்திருக்கிறான். சிறிது கூட ஈவிரக்கமே இல்லாத பாவி இவன். இவனை அழிக்காவிட்டால் நம் இனம் நம்மோடு அழிந்து விடும்!" என்று ஆவேசமாகக் கூறியது ஒரு எறும்பு.

"இவ்வளவு பெரிய ராட்சசனை நாம் எப்படி அழிப்பது? பேசாமல் வேறு ஒரு இடத்திற்குச் சென்று புதிய புற்று ஒன்றைக் கட்டிக் கொள்ளவோம்!" என்று யோசனை கூறியது மற்றொரு எறும்பு.

"அது கோழைத்தனம். தவிர, அப்படியே கட்டினாலும் இவன் விட்டு வைப்பான் என்பது என்ன நிச்சயம். அது சரியாக வராது. நம் முட்டைகளை அழிக்கும் இவனை நாம் அழித்தே ஆக வேண்டும். அதற்கு மட்டும் யோசனை கூறுங்கள்!" என்றது முதல் எறும்பு.

நூற்றுக்கணக்கான எறும்புகளும் ஒன்று கூடி ஆலோசனை செய்தன.

ஒரு முதிய எறும்பு தன் தொண்டையைச் செருமியபடி,

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நம்மில் இளம் வயதும், வீரியமும் கொண்ட பத்துப் பதினைந்து எறும்புகள், நாளை புற்றின் உள்ளே பக்கச் சுவர்களில் ஒட்டிக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் அனைவரும் புற்றின் உள்ளே மண்ணைத் தோண்டி அதற்குள் பதுங்கிக் கொள்ள வேண்டும். பாம்பு வந்து முட்டைகளைத் தின்னத் தொடங்கிய சமயத்தில், மேலே ஒட்டிக் கொண்டுள்ள இளம் எறும்புகள் பாம்பின் கண்களில் குதிக்க வேண்டும். பிறகு கண்களைக் கடித்துக் குதற வேண்டும். வலி பொறுக்க முடியாத பாம்பு இங்கும் அங்கும் துள்ளும். அப்பொழுது மண்ணிற்குள் பதுங்கி இருக்கும் நாம் வெளியேறி, அப்படியே பாம்பின் உடலைக் கடித்துக் குதற வேண்டும். இதனால் பாம்பு மேலும் துடிக்கும் நாம் விடவே கூடாது. நம்மில் பலருக்கு உயிர்ச்சேதம் கூட ஏற்படலாம். அதைப் பற்றிக் கவலைப் படக்கூடாது!" என்று சொன்னது.

"அருமையான யோசனை! அப்படியே செயற்படுத்துவோம்" என்று கூறின எல்லா எறும்புகளும்.

மறுநாள்-

திட்டமிட்டபடியே எல்லாம் சரியாக நடக்க, நான் என்ற அகந்தை கொண்ட பாம்பு, சாதுவான எறும்புகள் துணிச்சலுடன் போராடியதால், புற்றிற்குள்ளேயே செத்து மடிந்தது.

"அப்பாடா ஒழிந்தான்! இனிநாம் நிம்மதியாக வாழலாம்," என்று சொல்லி சந்தோஷப்பட்டன எறும்புகள்.

## வாரம் ஒரு நாடு
### மியான்மார்

**தலைநகர்**– யாங்கோன் (ரங்கூன்)
**பரப்பு**– 6,76,553 சதுரகிலோ மீட்டர்
**மக்கள் தொகை**– 4.46 கோடி
**மொழி** – பர்மீஸ், பழங்குடி மொழி
**எழுத்தறிவு** – 81%
**சமயம்** – புத்தசமயம்
**நாணயம்** – கயாத்
**தனிநபர் வருமானம்**– 250 டொலர்

**வரலாறு:**


ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இந்தியாவின் ஒரு பாகமாயிருந்த பர்மா, 1989ம் ஆண்டு ஐக்கிய மியான்மார் எனப்பெயர் மாற்றம் பெற்றது. ஏப்ரல் 1937இல் பிரிட்டிஷ் கொமன்வெல்த்தில் தனித்த அங்கமாயிற்று. 1948 ஜனவரி 4 இல் சுதந்திர நாடாயிற்று. 26 ஆண்டுகளாக ஜெனரல் நீவின், பர்மாவை இரும்புக் கைகளால் அடக்கி ஆண்டு வந்தார். 1988 இல் உள்நாட்டு மக்கள் புரட்சி ஏற்பட்டது. 1990 ஜூனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், ஆங்சான் சூகீ தலைமையிலான 'தேசிய ஜனநாயக முன்னணி' பெரும் வெற்றிபெற்றது. ஆனால் இராணுவம் பதவியைத் தர மறுத்து விட்டது. சூகீ தற்போது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

**பொருளாதாரம்:**



மியான்மார், 'கீழை நாடுகளின் அரிசிக் கிண்ணம்' எனக் குறிப்பிடப்படுகிறது. பெட்ரோலியம், ஈயம், தகரம், துத்தநாகம், டங்ஸ்டன், செம்பு, வெள்ளி, இரத்தினங்கள் ஆகியன முக்கிய கனிமப் பொருட்கள். மணிகள், செந்நிறக்கற்கள், நீலக்கல் ஆகியன பர்மாவில் காணப்படுகின்றன. தேக்குமர ஏற்றுமதி பெருமளவில் நடை பெறுகிறது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.05.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 138
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 136

**பரிசுக்குரியவர்:**
ரா.சர்மிளா.
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை.


**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஏ.சி. முஹம்மது றிஸ்வான். சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | ஆர்.கிருஸ்ணவேணி. முவான்கந்தி, மாவத்தகம. |
| எவ். ஹஸ்னா நிஸார். மாருகொன கொளனி, உக்குவலை. | க.அஷோக் ரஜீவ் குமார். க/ஸ்ரீ.முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை. |
| வை.திலீப்நாத். புத்/இந்துக்கல்லூரி, புத்தளம். | செல்வன்.த.துஷ்யந்தன். ரஜமல்வத்தை லேன், கொழும்பு-15. |
| எம். ரேணுகா. விஜயரத்தினம் இந்துமத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | வி.பெருமாள் யுவராணி. ஸ்டோனிக்கிளிப் எஸ்டேட், கொட்டகலை. |
| செல்வி.ராஷிதா ஹுஸைன். தி/முஸ்லிம் மஹாவித்தியாலயம், திருகோணமலை. | பி.ரெபெக்கா பழனிவேல். க/வெஸ்ட் ஹோல் தமிழ் வித்தியாலயம், கெட்டபுலா. |

## செவ்வாய்

* பூமிக்கு மிக அருகில் உள்ள கோள் எது?
செவ்வாய்

* பூமிக்கும் செவ்வாய்க்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?
78.4 மில்லியன் கிலோமீட்டர்.



* செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்கள் இருக்கிறார்கள் என்று சொன்ன விஞ்ஞானி யார்?
இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஜியோவனி சியாபர்லி என்ற விஞ்ஞானி. இவர் அந்தச் செவ்வாய்க் கிரகத்தில் காணப்படும் குறுகிய கோடுகள் அங்கு வசிக்கும் மக்களால் தோண்டப்பட்ட கால்வாய்கள் என்று சொன்னார்.

* செவ்வாய்க் கிரகத்தில் மனித உயிரினங்களின் எடை மிகவும் இலேசானதாக இருக்கும் என்பது உண்மையா?
ஆமாம். செவ்வாய்க் கிரகத்தின் ஈர்ப்புத் தன்மை, பூமியின் ஈர்ப்புத்தன்மையை விட மூன்றில் ஒரு பங்கு குறைவு, அங்கு போனவுடன் மனிதர்களின் எடையும் மூன்றில் ஒரு பங்காகக் குறைந்து விடும்.

* செவ்வாய்க் கிரகத்தில் உயிர்கள் உள்ளன என்ற வாதம் எப்போது மறுக்கப்பட்டது?
விஞ்ஞானிகள் செவ்வாய்க் கிரகம் மனித உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற வகையில் இல்லை என்ற உண்மையைப் பல ஆய்வுகளுக்குப் பின்னர் கண்டுபிடித்தனர். எனவே செவ்வாய்க்கிரகத்தில் வெட்டப்பட்ட கால்வாய்கள் இருக்கின்றன என்ற வாதத்தையும் மறுத்து விட்டனர்.

## கரடி பூனை

படத்தில் இருக்கும் பிராணியின் பெயர் பின்குராங். பூனை வகையைச் சேர்ந்த பிராணியான இதன் உடல் முழுவதும் அடர்த்தியான ரோமங்கள் வளர்ந்து கிடப்பதால் இவரை 'கரடி பூனை' என்று அழைப்பர். பகல் முழுவதும் மரக்கிளைகளில் படுத்துத் தூங்கி விட்டு இரவானதும் மரக்கிளையை விட்டு இறங்கி வந்து இரை தேடும். பழங்கள், பூச்சிகள், சிறிய பறவைகள், குட்டி போட்டுப் பாலூட்டும் சிறிய பிராணிகள் தான் இதன் உணவு. அத்துடன் இவை ஆற்றங்கரைகளுக்குச் சென்று மீன்களையும் பிடித்து உண்ணும். இவை எமது அண்டை நாடான இந்தியாவின் அஸாம் மற்றும் சிக்கிம் மாநிலங்களில் இருக்கின்றன.



## விடுகதைகளும் விடைகளும்

1. துக்கத்தைக் கலைத்திடக் குரலெழுப்பி
தூங்காமற் செய்திடும் துடுக்குக்காரி
தலையிலே பூவுள்ள தளுக்குக்காரி-எந்தச்
சண்டைக்கும் அஞ்சாத கொண்டைக்காரி
யார் அது?

2. ஊருக்கெல்லாம் ஓய்வு
உழைப்பவருக்கும் ஓய்வு
இவனுக்கு மட்டும் ஓய்வில்லை
இரவும் பகலும் ஓட்டந்தான்
என்ன இது?

3. காயமென்னும் உடலைக் காக்கும்
மேலே இதழ் பச்சை கீழே உடல் சிவப்பு
குறுக்கே நறுக்கினால் சக்கரம் வடிவம்
நெடுக்கே நறுக்கினால் சங்கின் உருவம்
அது என்ன?

4. உயர்ந்த மரத்திலே உச்சாணிக் குகையிலே
மூணு கண்ணுத் தலையர்கள்
முப்பது நாற்பதென்று தொங்குறாங்க
அது என்ன?

5. உடலுண்டு என்றாலும் எலும்பேயில்லை
இருபுறமும் கைகளுண்டு விரல்களில்லை
அழகான கழுத்துண்டு தலைதானில்லை
அழகுண்டு என்றாலும் உயிர்தானில்லை
அது என்ன?

6. மேலே பறக்கும் பறவை அல்ல.
கட்டுண்டு இருக்கும் மாடு அல்ல அழகான
வாலுண்டு குரங்கும் அல்ல அது என்ன?

7. பார்க்கப் பச்சை பழுத்தால் சிவப்பு
பல்லிலே பட்டால் கண்ணிலே நீர் அவன்
யார்?

8. யாரும் செய்யாத கதவு தானே திறக்கும்
தானே மூடும் அது என்ன?

9. முதுகைத் தொட்டால் மூச்சு விடுவான்
பல்லைத் தொட்டால் பாட்டுப்பாடுவான்
அவன் யார்?

10. கண்ணைக் கண்ணைச் சிமிட்டினாள்
கடகடவென்று முழக்கமிட்டாள்
கண்ணீர் வடித்தால் காடெல்லாம்
களித்தது உலகம் இது கண்டே!
இவை என்ன?

### விடைகள்

1. சேவல் 2. மூச்சு
3. வெங்காயம் 4. நுங்கு
5. சட்டை 6. பட்டம்
7. மிளகாய் 8. கண் இமை
9. ஆர்மோனியம்
10. மின்னல், இடி, மழை.

தொகுப்பு: எம். உஷா

## நாடுகள் வழங்கும் இராணுவ விருதுகள்

1. இந்தியா-பரம்வீர் சக்ரா
2. இத்தாலி-மெடல் போவோரா
3. ஜப்பான்-ஓடர் ஒவ்த ரைஸிங் சன்
4. ஜெர்மனி-அயர்ன் குரொஸ்
5. இங்கிலாந்து-விக்டோரியாக்ட்.

வி.குணசீலன்.



படிப்பகம்

அந்தச் சின்ன மாருதி கார் 'ஓட்டல் வருக'வுக்குள்ளே நுழையும் சற்று முன்னால் தான் அந்த போன் வந்திருக்க வேண்டும்.

ராஜாவும் ஜென்னியும் தனித்தனியாக லிப்ட் ஏறி அந்த அறைக்குள் போன போது, புரியாத நிலையில் திருக்குமரனும், பீதியுற்று வெளுத்துப் போன நிலையில் கிழட்டு வேடதாரியான வரதராஜனும் தெரிந்தார்கள்.

"என்ன ஆச்சு? ஏன் ரெண்டு பேரும் 'பே'ன்னு முழிச்சிட்டிருக்கீங்க?" ஜென்னி கேட்டாள்.

"இப்ப தான் போன் வந்தது?"

"வீட்டிலிருந்தா? யாராவது எதிரி வந்தானாமா? அல்லது வந்தாளாமா?"

"சே! சே அந்தக் கொலைகாரியே நேரடியாக இங்கே போன் பண்ணினாள்."

"வாட்? அவளுக்கெப்படி நீ இங்கிருக்கிறது தெரியுமாம்?"

"அது தான் புரியல்ல. ஔவையார் மாதிரி சில நிமிஷ நேரத்தில் கிழவனாகி விட்டாயாக்கும்னு சொல்றாளே."

"ஆச்சரியம்" ஜென்னி வியந்தாள். "மாபெரும் ஆச்சரியம்."

"அப்புறம் என்ன சொன்னாள்?"

"தப்பிவிட்டதாக நினைக்காதே. நான் வைச்ச குறி தப்பாது. எந்த நிமிஷமும் மரணம் உன்னை கவ்வி விடும். கவனமாயிரு! என்கிறாளே."

ராஜாவுக்கும் ஜென்னிக்கும் கூட ஒரு சில விநாடிகளுக்கு வாயடைத்துப் போய் விட்டது.

☆☆

இன்ஸ்பெக்டர் வேதநாயகம் அதட்டலாகக் கேட்டார். "சரியாக பார்த்துச் சொல்லுங்க மிஸ்டர்."

"சந்தேகமாக இருக்கிறது. அச்சு அசல் எங்கள் எஜமானியம்மாள் அபிராமி மாதிரியே தானிருக்கிறது."

"எனக்கும் இப்ப நம்பிக்கை வருகிறது. கம்பெனி மோ-பைக்கை அவளே எடுத்து பயன்படுத்தியிருக்கலாம் அல்லது அப்பப்ப தன்னோட காதல் இளைஞனுக்கு கொடுத்திருக்கலாம். ஆனால்-"

"என்ன பேசறீங்க இன்ஸ்பெக்டர்? எவ்வளவு பெரிய கம்பெனி முதலாளி அதுவும் எத்தனை பெரிய பணக்காரி. ஸ்டாண்டர்ட் இரண்டாயிரம், அம்பாஸடர், மாருதின்னு ரகத்துக்கொரு கார் வைச்சிருக்கிறவள் எதற்காக மோ-பைக்கில் போகணும்?"

"ஆட்டோவிலயும் அவன் வீட்டுக்கு போயிருக்கிறதாக தெரிகிறது."

"யார் வீட்டுக்கு?"

"அவளுடைய காதலன் வீட்டுக்கு?"

"நம்ப முடியாத சங்கதி இன்ஸ்பெக்டர்! அவளுக்கு எந்தக் காதலனும் இல்லை. அப்படியேயிருந்தாலும் இப்படி ரகசியமாக ஒளிந்து மறைந்து வாழ வேண்டிய அவசியமில்லை. ஏதோ போலி விலாசத்தில் அவனோட கணவன் மனைவியாக ஒளிந்திருந்து வாழ வேண்டிய தேவையுமில்லை. தவிர அவள் கல்யாணம் செய்து கொள்கிறதில பிரச்சினையே கிடையாதே....

"வீட்டிலிருக்கிறதே அவருடைய வயசான அம்மா மட்டும்தான். அதுவும் கால் விளங்காத முடம். இவளுக்கு இவ கல்யாணத்துக்கு எதிர்ப்பு சொல்லவே மாட்டாங்க. இன்னும் சொல்லப் போனா அவங்க உயிரோட இருக்கிறச்சயே அவ கல்யாணத்தைப் பார்க்கணும்னு துடிச்சிட்டிருக்காங்க. அப்படியிருக்க இந்த ரகசிய வாழ்க்கைக்கு அவசியமேயில்லையே."


இன்ஸ்பெக்டர் வேதநாயகம் மீண்டும் குழம்பிப் போனார். சோர்ந்து துவண்டார்.

வழக்கு மறுபடியும் கிளம்பிய இடத்துக்கே வந்துவிட்டது.

ஒரு வேளை....

அந்த வீட்டில் குடி வந்த தம்பதி வேறு யாராவதாகவாவது இருக்கலாமோ? அவர்களுக்கும் இவளுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்?

ஒரு வேளை அவள் அனுமதியோடு மோ-பைக்கை மட்டும் வாங்கிவந்திருக்கலாம்....









# நீ! நீயா!

"ஆனால் பிணத்தின் முகம் அவங்க அபிராமி மாதிரியேயிருக்கிறதாமே! ஒரு வேளை இப்படியும் இருக்குமோ?"

"அந்த காதல் ஜோடி தங்கள் குட்டு எங்கேயாவது அந்த அபிராமி மூலமாக வெளிப்பட்டு விடுமோ என்கிற பயத்தினால தீர்த்துக்கட்டியிருப்பார்களா?....ஏன் கூடாது?"

"வேற வழியில்லை மானேஜர் சார்! நீங்களே நேரடியாக சவக்கிடங்குக்கு வந்து பிணத்தைப் பார்த்து அடையாளம் சொல்லத் தான் வேண்டியிருக்கிறது. ஸாரி."

"பரவாயில்லை வாங்க போகலாம்." என்று அவர்கள் கிளம்ப முயலும் போது-

தொலைபேசி ஒலித்தது.

தயக்கமாக இருந்தாலும் எடுத்துப் பேசினார் மானேஜர்.

அவர் முகத்தில் பரபரப்பு வேகமாய் பரவுவது இன்ஸ்பெக்டருக்கு வியப்பைத் தந்தது.

"எங்கேயிருந்து பேசறீங்க?"

"பம்பாய் ஏர்-பஸ்ஸில் வரேன். ஏர்-போர்ட்டுக்கு வண்டியை அனுப்புங்க."

சம்மதித்து விட்டு போனை வைத்ததும் இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"யார் போனில்?"

"சொன்னா நம்புவீங்களா?"

"சொல்லுங்க பார்ப்போம். " என்றதும் மெதுவாக ஆனால் அழுத்தமாகச் சொன்னார் மானேஜர்.

"அபிராமி. எங்க மானேஜிங் டைரக்டர்."

●ஃ●

"கிளம்பு வரதராஜன்." ஜென்னி சொன்னாள். "உடனே உன்னை இடம்மாற்ற வேண்டும்."

"ஏன்?"

"என்ன இது சிறு பிள்ளைத்தனமான கேள்வி? உன் மாறுவேடத்தையும் நீ இங்கே தங்கி இருக்கிறது என்கிறதும் தெரிஞ்சு வைச்சிருக்கிறான்னா அதுக்குப்பிறகும் இங்கே தங்குகிறது ஆபத்து."

"இப்ப என்ன செய்யலாம்?"

"என்ன கேள்வி?" ராஜா கேட்டான். "உடனடியாக இந்த ரூமை மட்டுமில்லாம ஹோட்டலையும் மாற்றியாக வேணும்."

"போன் எடுத்து பில் தயார் செய்து அனுப்பச் சொல்லு. இல்லே வேண்டாம். தயாராக வைச்சிருக்கச் சொல்லு. நாமே போய் ரிசப்ஷனிலேயே செட்டில் பண்ணிக்கலாம். கிளம்பு சீக்கிரம்."

"வாங்க போகலாம்."

"இப்படியேவா? முதல்ல உன் கிழட்டு மேக்கப்பை உரித்தெறிஞ்சிடு. மறுபடியும் குமரனாக மாறும்."

"ஏன்?"

"கேள்வி கேட்காதே சிறுவனே! சொன்னதைச் செய்." என்ற ஜென்னி அவன்தலை முடியைப் பிடித்து இழுத்ததில் வெள்ளைப் பொய் முடி- கையோடு வந்தது. மூக்குக் கண்ணாடியைப் பறித்துப் போட்டாள்.

"இந்த தார்பாய்ச்சு வேட்டியையும் தொளதொள ஜிப்பாவையும் கழட்டிப் போட்டு உன் சாயம்போன ஜீன்ஸையும், பனியன் ஜெர்கின்ஸையும் மாட்டிக்க."

அவர்கள் கதவைத் திறந்து வெளிப்படும் போது அவர்களைக் கடந்து போனார் அந்தப் பெரியவர்; இயல்பாகவே கிழவனார்.

தலை முழுக்க வெளுத்திருந்தது. கண்ணாடி அணிந்திருந்தார். தார்பாய்ச்சு வேட்டியும் தொளதொள ஜிப்பாவுமணிந்து மின் ஏணிக்காகக் காத்து நின்றார். லிப்ட் வரவும் இவர்களும் போய் சேர்ந்து கொள்ளவும் சரியாக இருந்தது.

"நான் போகிற அவசரத்தில் இருக்கிறேன்.... முதல் என் பில்லை செட்டில் பண்ணுங்க ப்ளீஸ்" என்று கிழவனார் கெஞ்சவே-

முதலில் அவர் பில் பணத்தை வாங்கி- இவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள் வரவேற்பாளர்கள்.

மீதி பணத்தை வாங்கிய கிழவனார் பெட்டியுடன் நடக்கவிட்டு- வரதராஜன் கும்பல் பார்த்துக் கொண்டிருக்கும் போதே-

மெலிதான 'லிய்ங் விய்ங்க்' என்ற ஓசை மட்டும் கேட்க-

முன்னால் போன கிழவனார் மடிந்து நிமிர்ந்தார். பிறகு ஸ்லோமோஷன் மாதிரி துள்ளி எகிறி பின் புறமாக சரிந்ததும் தான்-

உண்மை உணர்ந்த-ராஜாவும் திருக்குமரனும் ஓடிப் போய் அவரைத் தாங்கிய ராஜாவை விட்டு பாய்ந்து துணிச்சலாக வெளியேறி பார்த்தான் திருக்குமரன்.

அவசரமாக கிளம்பிப் போன காரில் பாதி கன்னங்களை ஓவர் கோட்டு காலரும், மீதி முத்தை வெயில் கண்ணாடியும் தொப்பியுமாக மறைக்க ஆள் தெரிந்தது. மறைந்தது.

வண்டி விலையுயர்ந்த வண்டி.. நம்பரைப் பார்க்கும் முன் சாலையில் திரும்பிப் போய் கும்பலில் சங்கமமாகி மறைந்து விட்டது, கார்.

திரும்பி வந்த திருக்குமரன் பார்க்கும் போது-

கிழவனார்- எப்போதோ முடிந்திருந்தார்.

அவசரமாகப் பறந்த தகவலுக்கு இன்ஸ்பெக்டர் வந்தார். இங்கேயும் வேதநாயகமே வந்திருந்தார்.

"ஹேய் திருக்குமரா! நீ எங்கே இங்கே?"

"என் கிளையன்ட்டைப் பார்க்க வந்தேன். வந்த இடத்தில் பாவம்."

"யாராம் இந்த கிழவனார்?"

"ஆந்திரா தெனாலியிருந்து வந்தவர். சினிமா எடுக்க வந்த வெளியூர் ஆசாமி. ஆனால் ஒரு விஷயம் புரியல்ல. நேற்று தான் வந்தார். இன்று கிளம்பி விட்டார் என்கிறது ஹோட்டல் ரிக்கார்டு. அப்படியிருக்க கொலை செய்கிற அளவு யார் எதிரிகள் இருக்க முடியும்? பணத்துக்காக செய்த கொலையானால் பெட்டி நிறைய பணம் இருக்கே! விட்டுட்டுப் போவானா? அப்படியே பணத்துக்காக கொலை செய்கிறவனானாலும் இப்படி பொது இடத்தில நாலு பேர் முன்னாலா கொலை செய்வான்?"

"ஸோ. இங்கேயும் மோடிவ் கிடைக்கல்ல. மூன்றாவதாக இன்னொரு கொலையா? நிச்சயமா சொல்றேன். திருக்குமரன்! என்னை நீ அடுத்த தடவை பார்க்கிறப்ப தண்ணியில்லாத காட்டிலதான் இருப்பேன் போல."

❋ ஃ ✚ ✍

"சரியான முண்டம் நீ வரதராஜா!" காரில் போகும் போது ஜென்னி அதட்டினாள். "எதை எடுத்தாலும் ஞாபகம் வராத ராஜன் நீ. உருப்படமாட்டே."

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"பின்னே இரண்டு தடவை கொலை செய்ய முயற்சி நடந்திருக்கு. அப்படின்னா அந்தக் கொலையாளியோட ரகசியம் எதையோ நீ பார்த்திருக்கே, ஏதோ ஒரு நிழலான உண்மை உனக்கு தெரிஞ்சிருக்கு, என்கிற தப்பான நம்பிக்கை அவங்களுக்கு வந்திருக்கு, அதனாலதான் உன்னோட கூட இருந்தவங்களை விட்டுட்டு உன்னை மட்டும் துரத்தறாங்க. அதுக்கு என்ன அர்த்தம்?"

"என்னை என்ன செய்யச் சொல்றீங்க?"

"ரீ-கலெக்ட் இட். மறுபடியும் எப்படியாவது ஞாபகத்துக்குக் கொணரப் பாரு. என்னதான் அந்த உண்மை?"

யோசிக்கத் தொடங்கினான் வரதராஜன்.

❖ ■ ● ஃ

காவல் நிலையம் திரும்பியபோது வேதநாயகம் நிரம்பவும் குழம்பிப்போயிருந்தார்.

என்ன இது கொடுமை. முன் பின் தெரியாத ஒரு வெளியூர் அப்பாவியை அதுவும் நாலு பேர் நடமாடற பொது இடத்தில கொலை செய்யறதுன்னா அது என்ன கொடுமை?

முதலில் போட்டோவைப் பார்த்து இறந்து போனது எஜமானி அபிராமி மாதிரி தெரிகிறதுன்னு சொன்னதும் உண்மை. ஆனால் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அதே அபிராமி போனில் வருகிறாள்.

இருவரும் விமானத் தளம் போன போது பிளேன் வரும் முன்பே வந்து வாசலில் நின்றிருந்தாள்; கேட்டாள்-

"ஹைதராபாத் வழியாக வருகிற ப்ளேனில் வந்தேன்" என்கிறாள்.

விசாரித்துப் பார்த்தார்.

"என் கம்பெனி மோபைக்கை நான் பயன்படுத்தறதில்லே. தலையெழுத்தா? என்கிட்ட இல்லாத காரா? யாருக்கும் ரூவிலரை கடனுக்கு கொடுக்க மாட்டேன். அது மானேஜர் கண்ட்ரோலில் இருக்கு."

ஒரேயடியாக சாதிக்கிறாள். அவளே ஒரு வேறு வழியும் சொன்னாள்.

"மோட்டார் பைக்கில் வந்ததைப் பார்த்ததாக சொன்னாங்கன்னு சொன்னீங்க சரி. அது என் கம்பெனி மோ-பைக்காகத்தானிருக்கும்னு எப்படி சொல்றீங்க? நம்பரை சொன்னவங்க கிட்டத்தட்ட என் நம்பர்மாதிரியே சொல்லியிருக்கலாமில்லையா? ஒண்ணு செய்யுங்க. அவங்க பார்த்த மோட்டார் பைக் என்ன மேக்குன்னு கேட்டுப் பார்த்துச் சொல்லுங்க. அப்படி சொன்னால் மோ-பைக் திருடு போனதாகக் கண்டு பிடிக்கலாம்."

பயனில்லை.

அன்று பூராவும் அந்த மர்மத் தம்பதி குடியிருந்த ஏரியாவையும், அந்த மதுக்கடை இளைஞனையும் கேட்டாயிற்று.

ஒருவருக்காவது அது என்ன ரகம் என்று சொல்ல முடியவில்லை.

யோசித்து யோசித்துக் களைத்துப் போனார்.

சோர்வாகத் துவண்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டார்.

'அதே நிலை' அதே பழைய ஆரம்ப கட்டத்துக்கே போய் விட்டேன். காலையில் கமிஷனர் கூப்பிடுவார்- ஐ.ஜி. விளக்கம் கேட்பார். என்ன பதில் சொல்லப் போகிறேன்?"

பயன்படுமென்று சொல்வதற்கில்லை. ஆனாலும், அந்தப் படங்களை அந்த அபிராமியிடம் காட்டி அடையாளம் தெரிகிறதா? என்று கேட்டால் என்ன?

முடிவு செய்யும் முன் நிறைய யோசனை செய்தார்.

வேறு வழியில்லை; கண்ணில்படுகிற வழியிலெல்லாம் போய்ப் பார்த்துவிட வேண்டியது தான்.

தீர்மானத்துக்கு வந்தவர் எழுந்து நின்றார்.

தொப்பியை சரியாக மாட்டிக் கொண்டு கிளம்பினார்; நடந்தார்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ஆர். ராஜ்குமார்.
வயது: 24
முகவரி: தள்துவ எஸ்டேட், அவிசாவளை.
பொழுது போக்கு: பத்திரிகை, புத்தகம், வானொலி.



பெயர்: எம். நளீம்
வயது: 16
முகவரி: 668, கண்டி வீதி, ஹிங்குல, மாவனல்லை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம்.



பெயர்: ரி. தாஸ்
வயது: 23
முகவரி: GAS STR-8, 3005 BERN. SWITZERLAND.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, இசை.



பெயர்: கே. சாந்தி.
வயது: 21
முகவரி: எல்.பி.3, இல.225, லிங்கபுரம், கினிவெட்டி.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: ஏ. றசாக்.
வயது: 21
முகவரி: 39, பெஸ்யான் மாவத்தை, கொழும்பு -11.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, பேனாநட்பு.



பெயர்: எம். நஸீம்.
வயது: 24
முகவரி: P.O.BOX-28, AHAD ROFIDH, KHAMIS MUSHVT, K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி, பேனாநட்பு.

பெயர்: எம். ஜனோபர்.
வயது: 20
முகவரி: 87, நெடுங்குளம் வீதி, புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: எஸ். அஹமட்.
வயது: 23
முகவரி: 13ம் கிராமம், மண்டூர், களுவாஞ்சிக்குடி.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை.

பெயர்: கே. கணேசலிங்கம்.
வயது: 23
முகவரி: WAGEN BURG STR-96, 70186 STUTTGART, GERMANY.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: பி. டானியல்ராஜ்.
வயது: 22
முகவரி: 117, சென்றல் ரோட், கொழும்பு -12.
பொழுது போக்கு: சினிமா, பத்திரிகை, வானொலி.

பெயர்: எஸ். சசிகுமார்.
வயது: 19
முகவரி: 47/12 ராஜசிங்க மாவத்தை, ஒவிடன் பிளேஸ், அவிசாவளை
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எம். பர்ஸான்
வயது: 25
முகவரி: P.O. BOX-48326, CODE NO-54554, SABAHIYA, KUWAIT.
பொழுது போக்கு: வழமையானவை.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# 73 தாய்

"அது சரிதான்!" என்றான் அவன். நடுக்கம் ஒரு புறமிருந்தாலும், அவனது குரல் தெளிவாகவும் துணிவாகவும் ஒலித்தது. "இந்தப் பூமியில் நான் ஒருவன் மட்டும் அல்ல. உண்மை முழுவதையும் அவர்களால் அடக்கிப் பிடித்துவிட முடியாது. நான் எங்கெங்கு இருந்தேனோ அங்கெல்லாம் என்னைப் பற்றிய நினைவு நிலைத்திருக்கும். அவர்கள் எங்களது இருப்பிடங்களையெல்லாம் குலைத்து, எல்லாத் தோழர்களையும் கொண்டு போய் விட்டாலும் கூட...."

"அவன் இதை எனக்காகத்தான் சொல்லுகிறான்" என்று ஊகித்துக் கொண்டாள் தாய்.

"பறவைகள் சிறை விட்டுப் பறக்கும், மக்கள் தளை விட்டு நீங்கும் காலம் வரத்தான் போகிறது."

ஒரு பெண்பிள்ளை ஒரு வாளியில் தண்ணீர் கொண்டு வந்து ரீபினின் முகத்தைக் கழுவினாள். கழுவும் போது 'ஆ-ஒ' என்று புலம்பினாள். அவளது இரங்கிய கீச்சுக்குரல் மிகயீல் பேசிய பேச்சோடு சிக்கி முரணியது. எனவே அவன் பேச்சைத் தாயால் சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை. பொலிஸ் தலைவன் முன்னால் வர, ஒரு சில முஜீக்குகள் முன்னேறி வந்தார்கள். அவர்களில் யாரோ ஒருவன் கத்தினான்:

"இந்தக் கைதியை ஒரு வண்டியில் போட்டுக் கொண்டு போவோம். சரி, இந்தத் தடவை யாருடைய முறைக்கட்டு?"

பிறகு அந்தப் பொலிஸ் அதிகாரி தனக்கே புதிதான குரலில், புண்பட்டவனின் முனகல் குரலில் பேசினான்.

"ஏ, நாயே! நான் உன்னை அடிக்கலாம், ஆனால் நீ என்னை அடிக்க முடியாது!"

"அப்படியா? நீ உன்னை என்னவென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்-கடவுள் என்றா?" என்று கத்தினான் ரீபின்.

உள்ளடங்கிப் போய்க் குழம்பிய கசமுசப்பு அவனது குரலை மூழ்கடித்து விழுங்கியது.

"தம்பி, அவரோடு வம்பு பண்ணாதே. அவர் ஓர் அரசாங்க அதிகாரி."

"நீங்கள் அவன் மீது கோபப்படக் கூடாது, எசமான்! அவன் தன் நிலையிலேயே இல்லை."

"ஏ, புத்திசாலி! சும்மா கிட."

"அவர்கள் உன்னை இப்போது நகருக்குக் கொண்டு போகப் போகிறார்கள்."

"அங்கு, இங்கிருப்பதை விட ஒழுங்கு முறை அதிகம்." ஜனங்களுடைய குரல்கள் கெஞ்சிக் கேட்பது போல் இருந்தன. அந்தக் குரல்கள் ஒரு சிறு நம்பிக்கையோடு முயங்கிக் கலந்து மங்கி ஒலித்தன. போலிஸ்காரர்கள் ரீபின் கையைப் பற்றி, அந்தக் கிராமச் சாவடியின் முகப்பை நோக்கி இழுத்துக் கொண்டு சென்றார்கள். அங்கு சென்றவுடன் அவர்கள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று மறைந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அங்கு கூடி நின்ற முஜீக்குகள் கலைந்து சென்றார்கள். அந்த நீலக்கண் முஜீக் மட்டும் புருவத்துக்குக் கீழாகத் தன்னை உர்ரென்று பார்த்தவாறே தன்னை நோக்கி வருவதைக் கண்டாள் தாய். அவளது முழங்காலுக்குக் கீழே பலமிழந்து சுழலாடுவது போல் தோன்றியது. திகைப்பும் பயமும் அவளது இதயத்தை ஆட் கொண்டு, அவளுக்குக் குமட்டல் உணர்ச்சியைத் தந்தன.

'நான் போகக் கூடாது. போகவே கூடாது' என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

அவள் பக்கத்திலிருந்த கம்பியைப் பலமாக பிடித்தவாறே நின்றாள்.

அந்தப் பொலிஸ் தலைவன் கட்டிடத்தின் முகப்பிலேயே நின்று கைகளை வீசி, கண்டிக்கும் குரலில் பேசினான். அவனது குரலில் மீண்டும் பழைய வறட்சியும் உணர்ச்சியின்மையும் குடி புகுந்து விட்டன.

"நாய்க்குப் பிறந்த பயல்களா! நீங்கள் எல்லாம் முட்டாள்கள். உங்களுக்குத் தெரியாத விஷயங்களிலெல்லாம் நீங்கள் தலை கொடுக்கிறீர்கள். இது ஓர் அரசாங்கக் காரியம், தெரியுமா? நீங்கள் எனக்கு நன்றி தான் செலுத்த வேண்டும். நான் உங்களிடம் இவ்வளவு நல்லபடியாய் நடந்து கொண்டதற்காக, நீங்கள் என் முன் மண்டியிட்டு உங்கள் நன்றி விசுவாசத்தைக் காட்ட வேண்டும். உங்கள் அனைவரையும் கடுங்காவல் தண்டனைக்கு ஆளாக்க வேண்டுமென்று நான் நினைத்தால், அப்படியே செய்து முடிக்க எனக்குத்தைரியம் உண்டு."

தலைகளிலே தொப்பியே வைக்காத சில முஜீக்குகள் மட்டும் அவன் சொன்னதைக் காதில் வாங்கிக் கொண்டார்கள். மேகக் கூட்டங்கள் தணிந்து இறங்கிக் கவிந்த உடனேயே இருள் பரவ ஆரம்பித்தது. அந்த நீலக்கண் முஜீக், தாய் நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கி வந்து சேர்ந்தான்.

"என்ன நடக்கிறது என்று பார்த்தீர்களா?"

"ஆமாம்" என்று மெதுவாகச் சொன்னாள் தாய்.

"நீங்கள் இங்கு எதற்கு வந்தீர்கள்?" என்று அவளது கண்களையே பார்த்துக் கொண்டு கேட்டான் அவன்.

"நான் விவசாயிப் பெண்களிடமிருந்து லேஸ்களும், துணிகளும் விலைக்கு வாங்க வந்தேன்."

அந்த முஜீக் தன் தாடியை மெதுவாகத் தடவிக் கொடுத்தான்.

"எங்கள் பெண்கள் அந்தச் சாமான்களையே நெய்வதில்லையே!" என்று மெல்லக் கூறிக் கொண்டே அந்தக் கட்டிடத்தை ஒரு பார்வை பார்த்தான் அவன்.

தாய் தனது கண்ணால் அவனை ஒரு முறை அளந்து பார்த்தாள்: உள்ளே போவதற்கு வசதியான நேரத்தை எதிர் நோக்கி நின்று கொண்டிருந்தாள். அந்த முஜீக்கின் முகம் அழகாகவும் சிந்தனை நிரம்பியதாகவும் இருந்தது. அவனது கண்களில் சோக பாவம் ததும்பியது. அவன் நெடிய உருவமும் அகன்ற தோள்களும் உடையவனாயிருந்தான்; ஒரு சுத்தமான துணிச் சட்டையும் சட்டைக்கு மேல் ஏகப்பட்ட ஒட்டுகளுடன் கூடிய ஒரு கோட்டும், கபில நிறமான முரட்டுக் கால் சட்டையும், வெறும் கால்களில் செருப்புக்களும் அணிந்திருந்தான்.

இனந் தெரியாத காரணத்தால் தாய் நிம்மதியோடு ஆழ்ந்து பெருமூச்செறிந்தாள். தட்டுத் தடுமாறும் தனது சிந்தனைகளையும் முந்திக் கொண்டு உந்திவரும் ஓர் உணர்ச்சியால் அவள் திடீரெனப் பேசினாள்:

"இன்றிரவு நான் இங்கே தங்குவதற்கு இடம் கொடுப்பாயா?"

அந்தக் கேள்வி அவளுக்கே எதிர்பாராத சொல்லாக ஒலித்தது. அந்தக் கேள்வியைக் கேட்டவுடனேயே அவளது உடல் முழுவதும்



திடீரென இறுகுவது போல் இருந்தது. அவள் நிமிர்ந்து நின்று அந்த மனிதனை உறுதியோடு அசைவற்றுப் பார்த்தாள். என்றாலும் பின்னி முடையும் சிந்தனைகள் அவளது மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தன.

"நான் தான் நிகலாய் இவானவிச்சின் அழிவுக்குக் காரணமாயிருப்பேன். பாவெலையும் நான் ரொம்ப காலத்துக்குப் பார்க்கவே முடியாது. அவர்கள் என்னை அடிக்கத்தான் போகிறார்கள்!"

அந்த முஜீக் அவசரம் ஏதுமில்லாமல், தரையை நோக்கியவாறே தனது கோட்டை இழுத்து விட்டுக்கொண்டு நிதானமாகப் பதில் சொன்னான்:

"இரவு தங்குவதற்கா? ஏன் தரமாட்டேன்? என் வீடு ஒரு சின்ன ஏழைக் குடில். அவ்வளவுதான்."

"நல்ல வீடுகளில் இருந்து எனக்குப் பழக்கமேயில்லை" என்றாள் தாய்.

"அப்படியென்றால் சரி" என்று கூறிக் கொண்டே அந்த முஜீக் தலையை உயர்த்தி மீண்டும் தன் கண்களால் அவளை அளந்து நோக்கினான். ஏற்கெனவே இருண்டு விட்டது. அவனது தோற்றத்தில் இருளின் சாயை படிந்திருந்தது. அவனது கண்கள் மங்கிப் பிரகாசித்தன; முகம் அந்திமயக்க மஞ்சள் வெயிலால் வெளிறித் தோன்றியது.

"சரி, நான் இப்போதே வருகிறேன். தயை செய்து என்னுடைய டிரங்குப் பெட்டியைக் கொஞ்சம் தூக்கி வருவாயா?" என்று மெதுவாகச் சொன்னாள் தாய். அப்படிச்சொல்லும் போது அவள் மலை மீதிருந்து சரிந்து விழுவது போல உணர்ந்தாள்.

"சரி."

"அவன் தோள்களை உயர்த்தி மீண்டும் தன் கோட்டைச் சரி செய்து கொண்டான்."

"இதோ வண்டி வந்து விட்டது" என்றான் அவன்.

**"சத்தியத்தைக் காப்பதற்காக போராடத் தயங்காதீர்கள்!"**

## மக்சீம் கார்க்கி

ரீபின் அந்த அரசாங்கக் கட்டிடத்தின் முகப்பில் தோன்றினான். அவனது தலையிலும் முகத்திலும் கட்டுகள் போடப்பட்டிருந்தன; அவனது கைகளும் மீண்டும் கட்டப்பட்டிருந்தன.

"போய் வருகிறேன், நல்லவர்களே!" என்ற குரல் அந்த குளிரில் அந்தி மயக்க ஒளியினூடே ஒலித்தது; "உண்மையை நாடுங்கள்; அதைப் பேணிப் பாதுகாருங்கள். உங்களிடம் தூய்மையான பேச்சுப் பேசும் மனிதனை நம்புங்கள், சத்தியத்தைக் காப்ப தற்காக போராடத் தயங்காதீர்கள்!"

"உன் வாயை மூடு!" என்று பொலிஸ் அதிகாரி கத்தினான். "ஏ, போலிஸ்கார மூடமே! குதிரையைத் தட்டி விடு!"

"நீங்கள் எதை இழக்கப் போகிறீர்கள்? உங்கள் வாழ்க்கையை எண்ணிப் பாருங்கள்."

வண்டி புறப்பட்டுச் சென்றது. இரு போலிஸ்காரர்களுக்கிடையில் ரீபின் உட்கார்ந்திருந்தான். அங்கிருந்தவாறே அவன் சத்தமிட்டான்:

"நீங்கள் ஏன் பட்டினியால் செத்துக் கொண்டேயிருக்க வேண்டும்? உங்களுக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டால், உங்களுக்கு உணவும் கிடைக்கும், நியாயமும் கிட்டும். போய்வருகிறேன், நல்லவர்களே!"

வண்டிச் சக்கரங்களின் பலத்த ஓசையாலும், குதிரைகளின் காலடியோசையாலும், போலிஸ் தலைவனின் குரலாலும் ரீபினுடைய குரல் ஆழ்ந்து அமிழ்ந்து போய் விட்டது.

"எல்லாம் முடிந்தது" என்று தலையை அசைத்துக்கொண்டே சொன்னான் அந்த முஜீக். பிறகு தாயின் பக்கம் திரும்பித் தணிந்த குரலில் பேசினான்: "எனக்காகக் கடையில் கொஞ்ச நேரம் காத்திருங்கள். நான் இதோ வந்து விடுகிறேன்."

தாய் அறைக்குள் சென்று, அந்தக் கடையின் அடுப்புக்கு எதிராக இருந்த மேஜையருகில் உட்கார்ந்தாள். அவள் ஒரு துண்டு ரொட்டியை எடுத்துப் பார்த்து விட்டு அதைத் தட்டிலேயே வைத்து விட்டாள். மீண்டும் அவளுக்கு அந்தக்கிறக்க உணர்ச்சி ஏற்பட்டது. அவளால் சாப்பிடக் கூட முடியவில்லை. அவளது உடம்பு குதுகுதுத்துக் காய்ந்து உடலை பலவீனப் படுத்தியது. அந்தக் காய்ச்சல் இருதயத்தின் இரத்த ஓட்டத்தை இழுத்து நிறுத்தி, அவளைக் கிறங்கச் செய்தது. அவளுக்கு முன்னால், அந்த நீலக்கண் முஜீக்கின் முகம் தெரிந்தது. ஆனால் அந்த முகம் பரிபூரணமாகத் தோன்றவில்லை. அதைக் கண்டவுடன் அவ நம்பிக்கை உணர்ச்சி மேலிட்டது. அவன் தன்னைக் கைவிட்டுவிடுவான் என்று எண்ணிப் பார்க்க அவள் விரும்பவில்லை. இருந்தாலும் அந்த எண்ணம் அவள் மனத்தில் எப்போதோ குடிபுகுந்துவிட்டது. அவளது இதயத்தை ஒரு பளு அழுத்தியது.

"அவன் என்னைக் கவனித்தானே. கவனித்துப் பார்த்து, ஊகித்துக் கொண்டானே" என்று அவள் லேசாகச் சிந்தித்தாள்.

அந்த எண்ணம் வளரவில்லை. கிறக்க உணர்ச்சியிலும் குழப்ப உணர்ச்சியிலும் அந்த எண்ணம் முங்கி முழுகிப்போய் விட்டது.

*(தொடர்ந்து வரும்)*

# அவசரப் பார்வைகள்

ஆ. இளையவன்

"உள்ளே போக பாஸ் (அனுமதி) இருக்குத்தானே ஏன்.....?"

"விடுறானில்லை. எனக்குப் பிறகு வந்த எத்தனையோ ஜீப், மோட்டார் சைக்கிள்களையெல்லாம் விட்டுப் போட்டு என்னை மாத்திரம் மறிச்சுப் போட்டான். ச்சே! தமிழனாப் பொறந்தா இப்படியும் ஒரு கஸ்டம்."

"என்னடாப்பா புதினமான கதை கதைக்கிறே? சாதாரணமாக உள்ளே போய்வார வேன் தானே....?"

"அதுதானே! இவனுகள் இப்படித்தான். நெனைச்சா ஒன்னைச் செய்வானுகள். பார்த்துக் கொண்டிருக்கும் போதே பாஸைக் கூடக் காட்டாமல் எத்தனையோ சிங்களவர்கள் உள்ளே போய்விட்டார்கள்."

வேன் சாரதியோட வார்த்தைகள் எனக்குள் அவ்வளவு திருப்தியாக இல்லை. நானும் பல தடவைகள் பாஸைக் காட்டாமல் உள்ளே போனவன்தான். இப்பவும் அப்படியாக இருக்கும் போது திருப்தியாக இருக்காது தானே? தமிழனென்றால் ஏது வேறுபாடு.

"கோவிச்சுக்கப்படாது. வேற ஏதாவது வித்தியாசமா நடந்துச்சா....?"

"என்னடாப்பா விசர்க் கதை கதைக்கிறே? நான் வேனுக்குள்ள ஆயுதமா மறைச்சு கொண்டு போகப் போறன்."

"அதுக்கில்லை.... நானும் பாஸைக் காட்டாமல் மோட்டார் சைக்கிளை..."

"உனக்கு நல்லா சிங்களம் பேச வரும். அதப்பயன்படுத்தி எதையாவது சொல்லிக் கொடுத்து அவனுகளை வளைச்சுப் போட்டிருப்பே எங்களுக்குத் தெரியாதா......?"

வார்த்தைகள் சற்று விலகியதும் வழக்கமான என் முகமலர்ச்சி சற்று வாடிப்போனது. முகத்துக்குநேரே எதிர்பார்க்காத வார்த்தைகள் விழுந்தால் அது வழமைதான். ஆனாலும் என்னால் ஜீரணிக்கமுடியவில்லை. வீண் பழியொன்றைச் சுமத்துவது போன்ற உணர்வு. அவனோட சுபாவம் அப்படித்தான். சிலரைப் போல அவசரக்காரன். நண்பன் என்பதால் என்பாட்டில் விட்டுப் போகவும் மனம் இஸ்டப்படவில்லை.

"கூட வருவானே அந்த பியோன் பெடியன் எங்கே?"

"தெரிஞ்ச ஒரு மோட்டார் சைக்கிள் காரனோட உள்ளே அனுப்பி வைத்திருக்கிறேன். சேர்ட (செயலாளர்) பயப்படாமல் நான்சொன்னதாகச் சொல் என்றும் சொல்லியனுப்பி இருக்கேன். நாங்களும் 'கவர்மெண்ட் சேவன்' தான். மத்தவங்களுக்கு கிடைக்கிற சலுகை எங்களுக்கும்தான். இது என்னவென்றால் எங்களை நாய் மாதிரி நடத்துறான்கள். நில் என்றால் நிக்கணும் போ என்றால் போகணும். இன்றைக்கு சேர் சமாதான நோக்குல பெரிசா ஏதாவது சொல்லட்டும் அப்பதான் தெரியும் என்ட குணம். இந்த இழவு பிடிச்ச வேலையை தூக்கிவீசிட்டு பாஸ்போர்ட்டை எடுக்க வேண்டியதுதான்."

"உனக்கு எப்பவும் அவசரம் தான். சரி இவ்விடத்துலதானே நிற்பாட்டியிருக்காங்க இந்த சென்றிக்கென்று ஒரு பெரியவர் இருக்கார். நீ அந்த 'செக்பொயிண்ட்கட்'டுள்ள போய் விசாரிச்சுப் பார்க்க வேண்டியது தானே? இதுக்கெல்லாம் பாஸை அவசியமில்லை. உனக்குத் தெரிஞ்ச சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் கலந்து விடவேண்டியது தானே?"

"நான் ஒன்னும் மடையனில்லை. எல்லாத்தையும் கவனிச்சுப் போட்டுத்தான் ஒரு முடிவோட சேருக்குத் தகவல் அனுப்பியிருக்கேன்."

"அப்படின்னா.....!"

"வரும்போதே கவனிச்சேன். இந்த ஆமிக்காரன் நீ சொல்ற பெரியவன் கிட்டயிருந்துதான் வந்தான். அந்தாள் ஏதோ சொன்னதையும் கவனிச்சேன். கூட வந்த வாகனங்களை விட்டுப் போட்டு என்னை மாத்திரம் அநியாயமா தடுத்துப்போட்டான்."

ஆரம்பத்துல சிவில் நிர்வாகம் என்பது சீர்கெட்டுப் போயிருந்த காலகட்டத்துல பரவலாக அராஜகங்கள் நடைபெற்றது உண்மைதான். ஆனால் இப்போ எல்லாம் ஒரு சகஜ நிலைக்கு வந்த பிற்பாடு அவன் சொல்றத எப்படி.....! எதுக்காக தடுத்திருக்க வேண்டும்? எனக்குள் சந்தேகம் துளிர்விடத் தொடங்கியது.

"வந்து அதிக நேரமாச்சா?"

"பத்து நிமிசம் அநியாயமாப் போச்சு."

"ஆக அவ்வளவுதான். அதுக்குள்ள எப்படியெல்லாம் முடிவெடுத்து என்ன கதையெல்லாம் கதைச்சுப் போட்டே....?"

"என்ன! ஆக இவ்வளவுதானே என்று ஒரு நக்கல். இந்த பத்து நிமிசத்துக்குள்ள இவனுகள் எவ்வளவு பெரிய விசயங்களையெல்லாம் நடத்தியிருக்காணுகள் என்று உனக்குத் தெரியுமா? நீ தெரிஞ்சாலும் சொல்ல மாட்டியே....!"

"ஒவ் நிறுத்து! நாம இந்த விசயத்தை மாத்திரம் கதைச்சுக்கொள்வோம்."



"என்ன பயமா? உன்னைப் போன்ற ஆக்களெல்லாம் நமக்கிட்ட இருக்கிறதாலதான் சமுதாயத்திற்கு இப்படியான அலைச்சலும் நாசங்களும். உனக்குப் பாஸையும் தெரியும் ஆட்களும் அறிமுகம். உனக்கும் உன்ட சொந்தக்காரர்களுக்கும் இவனுகளால ஏதும் நடக்காது என்று மாத்திரம் கனவு காணாதே. மச்சான்! காலம் எப்பவும் ஒரேமாதிரியாக இருக்காது. ஞாபகம் வைச்சுக்கோ."

"நீ என்னடாப்பா சின்ன விசயத்துக்கெல்லாம் பெரிய கதைகளைக் கதைக்கிறே? எல்லாத்துக்கும் அவதிப்படுறே."

"என்ன சின்ன விசயம்? இது செக்கரட்டியோட (செயலாளர்)வேன். அவரோட தனிப்பட்ட பாவனைக்கு மாத்திரமே பயன்படுத்துவது என்றும் எல்லாருக்கும் தெரியும். உள்ளே போறதற்குப் பாஸ் வேற இருக்கு அதைக்காட்டியும் ஏதோவெல்லாம் சொல்றான். விசறன். பின்னே என்ன? எதுக்காக என்னைமாத்திரம் நிற்பாட்டணும்? எத்தனை தடவைகளாக இவனுகளையும் ஏத்திப் பறிச்சிருப்பேன்? நன்றி கெட்ட ஜென்மங்கள்.... இன்னைக்கு ஒரு முடிவை எடுத்துத்தான் ஆகணும். மேலிடம் வரைக்கும் கொண்டு போறது. இல்லாட்டி வேலையை தூக்கியெறிஞ்சுட்டு போக வேண்டியதுதான்."

அவன் ஆவேசமாக கதைத்துக் கொண்டு வேனுக்குள் ஏறி வேகமாக கதவைச்சாத்தியதும், பச்சிளம் குழந்தையைச் சுருட்டித் தூக்கிக் கொண்டு அருகே வந்து கொண்டிருந்த பெண் ஒருத்தி சத்தத்தினால் தடுமாறிப் போனாள். கவனித்தேன். கூட இரண்டு பெண்கள். அண்மையில்தான் குழந்தை கிடைத்திருக்க வேண்டும். நடக்கமுடியாது மிகவும் சிரமப்பட்டு நிதானமாக அடியெடுத்து வந்து கொண்டிருந்தார்கள். மூவரும் தமிழ்ப்பெண்கள்.

இவனைத்தடுத்து நிறுத்திய ஆமிக்காரன்; அப்பெண்கள் வேனை அண்மித்ததும் 'சென்றிபொயின்ட் கட்'டிலிருந்து வேகமாக வேனை நோக்கி வந்தான்.

"எபா.... பஹிங்யன்ட எபா. வேன் எத்துல நகின்ட."

அந்தப் பெண்களுக்கும் ஏதும் புரியவில்லை. சில நேரங்களில் சம்பளமில்லாது நான் செய்யும் மொழிபெயர்ப்பாளர் வேலையை அப்போவும் செய்ய வேண்டிய நிலைமை. "உங்களை நடக்க வேண்டாமாம். வேனில ஏறி உள்ளே போகச் சொல்றார்."

கஸ்டங்களை ரொம்பவும் அனுபவிச்சுக் களைச்சுப் போன அப்பெண்களுக்கு அவ்வார்த்தைகள் இதமாக இருந்ததை முகமலர்ச்சி தெளிவாகக் காட்டியது. தங்களையும் மறந்து அவனைக் கும்பிட்டனர். பின்னர் அடையாள அட்டையை எடுப்பதற்காக மேல் சட்டைக்குள் கையைவிட எத்தனிக்கும் போது.

"ஓண்னே.... ஒயலா துப்பத்மினிசு. பிரஸ்னன் னே கிஹில என்ட....."

"ஐடின்டி கார்ட் தேவையில்லையாம் வேன்ல ஏறிப் போங்க."

மூன்று பெண்களும் நிதானமாக மெதுவாக வேனுக்குள் ஏறி வசதியாக ஆசனத்தில் உட்கார்ந்ததும், வெளியில் தொங்கிய சாரித் தலைப்பையும் எடுத்து வேன் உள்ளே போட்டு மெதுவாக கதவைச்சாத்திய அந்த ஆமிக்காரன் அவர்களைப் பார்த்து புன்னகைத்து,

"பௌ நேத....' என்றான் என்னைப் பார்த்து. பின்னர் சாரதியிடம் 'சமா வென்ட மல்லி. ஹிமிங்யன்ட.... பார சவ்த்து."

உடன் சம்பவத்தை என்னால் புரிஞ்சு கொள்ள முடிந்தது. அதிகமானோரிடம் மனிதம் நிறைந்துதான் இருக்கின்றது. சிலர் பிரயோசனப்படுத்துவதில்லை. தங்கள் கௌரவம் உத்தியோக உயர்வுகள் காரணமாக.

சற்று முன்னர் வார்த்தைகளினால் பொரிந்துதள்ளிய சாரதி நண்பனைப் பார்த்தேன். என் முகத்தைப் பார்க்கக் கூடிய பக்குவத்தை அவன் இன்னும் அடைந்திருக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# விடிவுக்கு முந்திய மரணங்கள்

**சிறுகதை**

**யாழமீர் மர்சூன்**

அன்று வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. ஒரு வித பயங்கர ஓசையுடன் சுழல்காற்று வீசியது. கும்மிருட்டாகவிருந்த வானில் மின்னல்கள் பளிச்சிட்டன. தூரத்து இடி முழக்கங்களும் கேட்டன. அகதிகள் வாழும் அப்பிரதேசம் அனாதரவான நிலையில்– ஆழ்ந்த தூக்கத்தில் மூழ்கியிருந்தது. ஆனால் அவளது குடிசையில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டேயிருந்தது. யாரவள்.....? அவள் ஒரு விதவை! இரண்டு பெண்களுக்குத்தாய். கூலி வேலை செய்து தன்னிரு கண்மணிகளையும் உயிர்காத்து வரும் ஓர் உத்தமி. அவர்களது கடந்த கால வாழ்க்கை வளம் செறிந்ததாகவும், பசுமை நிறைந்ததாகவுமிருந்தது. ஆனால் இன்று...?

முகவரியில்லாத மடல்களாகி அகதி என்ற முத்திரை குத்தப்பட்டுள்ளது. பிறருடைய சவால்களுக்கெல்லாம் முகம் கொடுத்து வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு இங்கே வாழவேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளது. இன்று தீரும் நாளை தீரும் இந்த இடுக்கண் என்று காத்திருந்து காத்திருந்து காலங்கள் போனதுதான் மிச்சம். ஆயினும் என்றாவது ஒருநாள் தாயகம் திரும்புவோம் என்ற நம்பிக்கை மட்டும் அவர்களது உள்ளத்தை விட்டு அகலவில்லை. அவர்கள் பலதுன்பங்களையும் சகித்துக்கொண்டு காலத்தை ஓட்டினர். ஆண்டுகள் உருண்டோடின. ஆசைகள் தீயில் வேகின.

சென்ற வருடம்தான் அவளது கணவன் காலமானான். அவன் ஒரு இருதய நோயாளி! ஊரைவிட்டு பிரிந்து வந்த நாளிலிருந்து எப்படியெல்லாமோ அவன் கஷ்டப்பட்டு உழைத்தான். கண்ணிமைபோன்றே தன் குடும்பத்தைக் காத்துவந்தான். தன் பெண்களுடைய எதிர்காலத்தையே சதா எந்நேரமும் சிந்தித்தவண்ணமிருந்தவன் ஒரு நாள் திடீரென கண்களை மூடிவிட்டான். வாழ்க்கை எனும் கடலிலே துடுப்பற்ற ஓடமானது அக்குடும்பம்; அழுதனர், துடித்தனர். என்ன செய்வது? ஆண்டாண்டு அழுது புலம்பினாலும் மாண்டவர் திரும்புவதில்லையே! அவர்களது விடிவுக்கு முன்பே அவன் உயிர் பிரிந்துவிட்டது. காலதேவன் அவனையும் அழைத்துக் கொண்டான். அதனால் குடும்ப பாரத்தைச் சுமக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவளுக்கு ஏற்பட்டது.

ஊரிலிருந்தபோது நான்கு சுவர்களுக்கு நடுவே வளர்ந்த தனது பெண்களை அவள் இன்றும் அவ்வாறே கௌரவமாக வளர்க்கவே தீர்மானித்தாள். அதனால் தன் பெண்கள் ஏதேனும் ஊழியம் செய்வதைக்கூட அவள் சிறிதும் விரும்பவில்லை. கணவன் இல்லையே என்று கலங்கிக்கொண்டு இருந்துவிடவுமில்லை. அவர்களை காக்கும் பணியில் கண்ணும் கருத்துமாகவிருந்தாள். இரவு பகலென்று பாராது மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்து நின்றாள். அவர்களது தேவைகளை சிறிது

**கொழும்பு நோக்கிச் சென்ற அந்த பஸ் வண்டியில் சோகமே உருவாக அமர்ந்திருந்தாள் ஜீனா.**

சிறிதாக நிறைவேற்றினாள். ஆனால் தான் ஒரு நோயாளியாக உருமாறிக் கொண்டிருப்பதனை ஒரு பொருட்டாக அவள் கருதவேயில்லை. அதன் காரணமே இன்று நோயில் வீழ்ந்து பாயில் படுத்து விட்ட பரிதாப நிலைக்கு ஆளானாள்.

நாட்கள் மெல்ல நகர்ந்தன. அவளின் மூத்த மகளான ஜீனா தாய்க்குத் தெரியாதவாறு தன் தோழி ஒருத்தியின் உதவியோடு வெளிநாடு செல்வதற்கான ஒழுங்குகளை துரிதப்படுத்தினாள். ஒரு நாள் தன் தங்கை நிஷாவை அழைத்து அவளிடம் எல்லாவற்றையும் விபரமாகக் கூறினாள். அவளுக்கு நல்ல புத்திமதிகளும் கூறினாள்.

சில நாட்களில் தாய் முற்றாக உடல் நலம் தேறினாள். அவள் தன்னுள் ஏதோ ஓர் இனம்புரியாத மாற்றத்தைக் கண்டாள். அவளது உள்ளம் எதற்காக வேண்டியோ சஞ்சலப்பட்டது. தன் மூத்த மகள் ஜீனா தன்னை விட்டுப் பிரிந்து செல்லப் போகிறாள் என்ற உண்மை அவளுக்கு புரியாமலிருந்தது. மீண்டும் அவள் கூலி வேலைக்கே திரும்பினாள். அவர்களது முகாமிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது



அவள் வேலை செய்யும் உப்பளம். தினமும் கால் நடையாகச் சென்று வருவதையே அவள் வாடிக்கையாகக் கொண்டிருந்தாள்.

ஜீனா வெளிநாடு செல்வதற்கான நேரமும் நெருங்கியது. ஒருநாள் அந்த நாளும் வந்தது. ஜீனா தன் தங்கை நிஷாவை ஆரத்தழுவி தன் பாசத்தையும் நேசத்தையும் தெரிவித்துக் கொண்டாள். இருவரது கண்களும் நேருக்கு நேர் கண்டபோது அவை செந்நிறமாக உரு மாறின. சிறிது மௌனம் நிலவியது அங்கே!

"நான் போகின்றேன். நிஷா நீதான் உம்மாவை கவனமாகப் பாத்துக்கொள்ளவேண்டும். எவ்வளவு சொல்லியும் உம்மா கேட்கவில்லை. பார்த்தியா? மறுபடியும் உம்மா நோயில் விழுவதற்கு முன் நான் போயாக வேண்டும். நீ புத்தியாய் நடந்து கொள், என்ன! நான் அங்கே போனகையோடு கடிதம் போடுகிறேன். தைரியமாக இரு!" என்று ஆறுதல் கூறி விட்டு தங்கையிடமிருந்து கண்ணீரோடு விடை பெற்றாள் ஜீனா. அதுவரை என்ன பேசுவதென்றே தெரியாமல் வாயடைத்துப் போய் நின்றாள் நிஷா. இப்போது இருவருக்குமிடையே நீண்டதோர் இடைவெளி நிலை கொண்டது. பின்னது மெல்ல மெல்ல தொலைவாகி ஜீனாவின் உருவமும் மறைந்து போனது. அப்போதுதான் தங்கை நிஷாவுக்கு பிரிவின் துயர் என்னவென்று தெரிந்தது. அழுகை பொங்கிக்கொண்டு வந்தது. வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது அவளுக்கு. அதனால் உள்ளே ஓடிச் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டு 'ஓ' என்று கதறியழுதாள்! அழுதாள்! தனிமையிலே அழுதாள். ஆறுதல் சொல்லத்தான் யாருமில்லை அவளருகில்.

கொழும்பு நோக்கிப் புறப்பட்ட அந்த பஸ் வண்டியிலுள்ள ஜீனா சோகமே உருவானவளாக தன் சிறிய பிரயாணப்பை ஒன்றுடன் ஏறிக் கொண்டாள். பஸ்வண்டி பயணமானது. தன் மனதில் சுமந்திருக்கும் சுமைகளை இறைவனின் பெயரால் மெல்ல இறக்கி வைக்க முயன்றாள் ஜீனா. அவளது மனம் என்றுமில்லாதவாறு பேதலித்தது. உடலெல்லாம் வியர்த்தது. வேதனையிலிருந்து மீள்வதற்கு அவளது உள்ளம் இறையை மன்றாடியவண்ணமேயிருந்தது. வேகமாகப் போய்க் கொண்டிருந்த பஸ்வண்டி சில நிமிடங்களில் தன் வேகத்தைக் குறைத்துக் கொண்டபோது பிரயாணிகள் தம்தலைகளை ஜன்னல் வழி வெளியே நீட்டி வேடிக்கை பார்த்தனர்.

அங்கே வேறொரு பஸ்வண்டி பாதையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதனைச் சூழ மக்கள் கூட்டமும் இரைச்சலுமாக இருந்தது. என்ன நடந்ததென்று ஒருவரை ஒருவர் துருவித் துருவிக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் ஜீனாவுக்கு எதுவுமே புரியவில்லை. காரணம் அது பற்றி அறிந்து கொள்ளக்கூடிய மன நிலையில் அவள் இருக்கவுமில்லை. அவளது நினைவுகளெல்லாம் அவளது குடும்பத்தையே சுற்றி சிறகடித்தன.

சில நிமிடங்களில் பஸ்வண்டி மீண்டும் தன் வேகத்தை அதிகரித்தது. பிரயாணிகள் சிங்கள மொழியில் ஏதேதோ பேசிக் கொண்டனர் தமக்குள். எதுவுமே புரியாதவளாய் அவளிருந்தாள். ஒரு வயோதிபப் பெண் மணி பஸ் வண்டி ஒன்றில் அடிபட்டு மாண்டுவிட்டதாகவும் அனாதரவான நிலையில் அவளது சடலம் கிடப்பதாகவுமே அவர்கள் பேசிக் கொண்டனர். இறந்து போன அப்பெண்மணிக்காக அவர்கள் பெரிதும் பரிதாபப்பட்டனர். ஒரு குறிப்பிட்ட நேரம் வரை அதே பேச்சாகத்தானிருந்தது அவர்களுக்குள்.

ஜீனா தன் தாயின் உடல் நிலைபற்றியே பெரிதும் கவலைப்படடுக்கொண்டிருந்தாளே தவிர, அந்த பஸ்வண்டியில் அடிபட்டு நடுவீதியில் கேட்பாரற்று அனாதைப் பிணமாகக் கிடப்பது தன்னை ஈன்ற அன்புத் தாய்தான் என்பதனை அறிந்து கொள்ளத்தவறி விட்டாள். இந்த உண்மையை அறியாத நிலையிலேயே அவளது பயணம் தொடர்ந்தது.

# நாட்டு நடப்புக்கள்

**ஷர்மிளா இஸ்மாயில் கண்டி**

**"இம்முறை என் பிரார்த்தனை வீண்போகலை. வெற்றி என் பக்கம்."**

ஜீவாவை இன்னும் காணோம். டிவியில் கிரிக்கெட் மாட்ச் ஆரம்பமாகி பத்து நிமிடங்கள் போயின. ஒரு மணி நேரமும் ஆயிற்று.

ரகுவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. தனியாக உட்கார்ந்து 'உம்'மென விளையாட்டை இரசிக்க முடியவில்லை. ஜீவா பக்கத்திலிருந்தால் வம்பளந்து, அரட்டையடித்துக் கொண்டே மாட்ச் பார்க்கலாம். வாய் துருதுருவென்றது. யாரோடாவது கதைக்க வேண்டும் போலிருந்தது.

"அம்மா, வாங்களேன் மாட்ச் பார்ப்போம்!" சமையலறையிலிருந்த அம்மாவை துணைக்கழைத்தான். "ம்ஹூம்.. போடாப்பா... எனக்கு வேற வேலையே இல்லை?. கிரிக்கெட்டாவது ஒண்ணாவது. ஏன் உன் ஃப்ரெண்ட் ஜீவா வரலியா?" அம்மா கேட்டாள்.

"வா.. வா.. இப்போதாவது வந்தியே.. ஏன்டா இத்தனை லேட்?" ரகு திருப்பிக் கேட்டான். "அது வந்து... காலைலேயே பிரார்த்தனை பண்ணி வேண்டுதல் செய்துட்டு வர்றேன். நாட்டுப் பற்றற்ற உன் போன்ற மனுஷங்களை நாட்டை விட்டே கடத்திடணும். நம்ம நாட்டு டீம் தான் வெல்லும். பாரேன்.." ஜீவா ஆவேசமானான்.

"சும்மாத்தான் கத்துறே. இந்த ஜனநாயக நாட்டுல பேச்சு, எழுத்து எல்லாமே சுதந்திர வஸ்த்துக்கள். நான் யாருக்கும் சப்போர்ட் பண்ணுவேன். அது என்னோட பிறப்புரிமை. நான் அந்த நாட்டு கிரிக்கெட் பிளேயர்லைத்



"அதானே பாருங்கம்மா.. ஜவாபபயல மெதுவா கைகழுவி விட்டான். நம்ம டீம் விளாசித் தள்ளுது. ஹை.. ஆ.. அப்படித்தான்.. கமோன்" ரகு கூப்பாடு போட்டான்.

"ம்... ஏன்டாப்பா நம்ம டீமா..? யாரு நீ? எந்த நாட்டுக் குடிமகன் தாங்கள்? இந்த தேசத்துல பிறந்து. இங்கேயே வளர்ந்து. இந்தக் காற்றையே சுவாசித்து நாளைக்கு இங்கேயே மண்டையப் போடப் போற நீ.. எப்படி இன்னுமொரு அந்நிய நாட்டுக்கு சப்போர்ட் பண்ணுவது? இது நீதியா இல்லை நியாயமா?" கேள்வி மேல் கேள்வி கேட்டபடியே ஜீவா வந்துவிட்டான்.

தான் விரும்புறேன். பாராட்டுவேன். என் வோட்டு.. ஸொரி.. சப்போர்ட்டு என்றைக்குமே அந்த அந்நிய தேசத்துக் குழுவையே சாரும்." ரகு தீர்மானமாய் ஏகத்தாளத்தோடு வாதாடினான்.

"ஐயோ.. ஐயோ.. விளையாட்டைப் பார்க்கறீங்களோ இல்லையோ, சண்டைக்கொண்ணும் குறைச்சலில்லை. மனுஷனுக்கு வாழ்க்கையிலும் நாட்டிலும் எத்தனையோ பிரச்சனைகள். மனுஷன் நாயாக பேயாக அலையுறான். அவதிப்படுறான்... அவலமா செத்துப் போறான். எல்லாத்தையும் விட்டுட்டு இந்த டி.வி. முன்னால மணிக்கணக்கா அசையாம குந்தியிருந்து பார்த்துட்டே இருந்தா சரி.." அம்மா கோபம் குரலில் தொனிக்க தேனீரை நீட்டினாள்.

"அப்படி சொல்லாதீங்கம்மா. இன்பமும் துன்பமும் வாழ்க்கையில சகஜம். எல்லாத்தையும் அனுபவிப்போமே! இன்னைக்கு இப்படி கிரிக்கெட் பார்ப்போம். நாளை எப்படியோ? அகதியா ஆயிட்டா துண்டைக் காணோம் துணியைக் காணோம்னு ஓடணும். நம்நாட்டு நெலவரம் அப்படி! என்ன செய்வது? சூழ்நிலைக்கேற்ப வாழ்க்கைய அமைச்சுகிட்டு வாழ்ந்துட்டா சரி. அவ்ளோதான்." ரகு தத்துவம் பேசினான். ஜீவாவும் ஆமோதித்தான்.

"ஹை... சிக்ஸர்..கமோன்.. வெல்டன்... ஏய் ரகு, நாம தான் சம்பியன்ஸ் இந்தமுறை. என் பிரார்த்தனைகள் வீண் போகலை. வெற்றி எங்க டீம் பக்கம்... வர்றியா கடைப் பக்கம் போய் பட்டாசு வாங்கி வெடிக்கலாம்..." ஜீவா சொல்லிச் சிரித்தான்.

ரகுவுக்குள் கடுப்பு. "போடா ரொம்பத்தான் துள்ளுறே.. ஒரு பக்கம் தோற்றாத்தான் மறுபக்கம் வெற்றி முடியும். என்னமோ நீ தான் போய் விளையாடி வெற்றியை வாங்கிக் கொடுத்தது போல நெனைப்பு. போடாபோ.." எரிச்சலுடன் முணுமுணுத்தான் ரகு.

"ம்ஹூம்.. வெற்றிவங்களை வாழ்த்தற நல்ல பழக்கம் கூட உனக்கில்லை. ம். சரி. வர்றேன்.. வரட்டுமா? பட்டாசு கொளுத்தணும்.." என ரகுவுக்குள் சினத்தை மூட்டி விட்டு படியிறங்கினான் ஜீவா. "சும்மாவா பின்னே? எங்கள் தேசத்து டீம் வெற்றி பெற்றது.. நாங்கள்ளாம் வென்றது போல. பெருமைதானே?" ஜீவாவின் குரல் தொடர்ந்தொலித்து தேய்ந்தது.

மாலை இருளாகி இரவானது. ஜீவாவுக்கு ஏதோ காயம் பட்டுவிட்டதாம். வைத்தியசாலையில் அனுமதித்திருக்கிறார்களாம். தகவல் அரசல் புரசலாகக் கேள்விப்பட்டதும் ரகு பதறியபடி போனான். ஜீவா களைப்பாயிருந்தான் கண்களில் ஒரு சோகம். "மாணிக்கம் முதலாளி கடைல பட்டாசு வாங்கிட்டு இருக்கையில திடீர்னு நாலஞ்சு கல்வந்து விழுந்துச்சு. என்னடான்னு நான் எட்டி வெளியே பார்த்தா யாரோ தடிப்பயல்கள் கல்லெறிஞ்சு கலாட்டா பண்ணினாங்க. என்னான்னு கேட்டா.. நம்ம இனம் கிரிக்கெட்ல வெற்றி. உங்க இனம்-அதான் அந்த அந்நிய தேசத்து டீம்-தோத்துப் போயிடுச்சுன்னு குடிச்சுப் போட்டு முதலாளி கடைக்கு கல்லெறிஞ்சு கலாட்டா. அவங்கள விலக்கப் போன இடத்துல காயம்.." ஜீவா சொன்னான். அவன் உடல் காயத்தை விட மனக்காயமே அதிகம் என ரகு உணர்ந்தான். ஜீவா பெருமூச்சு விட்டு சோர்ந்திருந்தான்.

# குரல்

**அதிலும்-அவள் கதை சொல்வதைக் கேட்டால்-ஊண் உறக்கம் தேவையில்லை.**

**உதா திபன்**

ஹலோ... உங்களைத்தான். ஒரு நிமிஷம் நில்லுங்களேன். என்னைப் பற்றி உங்களிடம் சொல்ல ஆசை. கேட்பதற்கு விருப்பமா?

பதில் சொல்லுங்கள் சார். உங்களின் குரலை நான் கணிக்க வேண்டும். என்ன.. வித்தியாசமாக பார்க்கிறீர்கள்? எனக்கு குரல்கள் மேல் அபார ரசனை. ஒருவரின் குரல் பிடித்திருந்தால் மட்டுமே, அவர்களோடு உற்சாகமாகப் பேசுவேன். இல்லையென்றால் அசட்டை தான்.

அட.. இன்னும் பதில் பேசவேயில்லையே நீங்கள்.

வேண்டாம். ஒரு வேளை உங்களின் குரல் தகரமாக இருந்தால் நான் ஓடிவிடுவேன். எனவே வாயைத் திறவாதீர்கள். செவி கொடுத்து நான் கூறுவதை மட்டும் கேட்டுக் கொள்ளுங்கள்; போதும்.

இந்த விநோதப் பழக்கம் என்னுள் எப்பொழுது தொடங்கியது எனச் சரியாகத் தெரியவில்லை. சிறு வயதிலிருந்தே இது ஊறியிருக்க வேண்டும் என்றுதான் தோன்றுகிறது. காரணம் அப்பொழுதே எனது பெற்றோரைவிட பாட்டியிடம் தான் அதிகம் ஒட்டிக்கொண்டிருப்பேன்.

காரணம் அம்மாவுக்கு கீச்சுக்குரல். இரண்டடி தள்ளி நின்றாலே கேட்காது. அப்பாவுக்கு பீரங்கி. இரண்டுமே ரசனைக்குரியதல்ல. ஆனால் பாட்டியின் குரல்.. தேன். அவளுடைய உருவத்துக்குதான் வயதாகிக் கொண்டே வந்ததே தவிர குரல் மார்க்கண்டேயமாக இருந்தது.

அதிலும், அவள் கதை சொல்வதைக் கேட்டால்... ஊண் உறக்கம் தேவையில்லை. தினம் அவளிடம் கதை கேட்கத் தவறமாட்டேன்.

நான் பத்தாவது படிக்கையில் பாட்டி இறந்து போனாள். அவளைக் கூடத்தில் கிடத்தினார்கள். வீடு நிரம்பியது.

கதம்பமான அழுகை. ஒப்பாரி. அப்பொழுதும் நான் குரல்களைத்தான் தேடினேன். ஐம்பது மார்க்குக்கு மேல் ஒன்றும் தேறவில்லை.

பாட்டியைத் தூக்கிச் செல்லும் பொழுது, எல்லோரும் உரக்கக் கதற நானும் அழுதேன். என் குரலே சகிக்கவில்லை. மௌனமாகி விட்டேன்.

பள்ளியிலிருந்து கல்லூரி போன பின்பும் இந்தச் சுபாவம் தொடர்ந்தது. கணக்கு புரொபசரின் வகுப்பில் ஆழ்ந்திருப்பேன். அவர் பேசும் அழகே தனி. பாடத்தின் சாராம்சத்தை கோட்டை விட்டுவிட்டு, அவரின் குரலையே கவனிப்பேன்.

எனது நண்பர்கள் கூட சுவாரஸ்யமான குரல்கள் உடையவர்களாகத்தான் இருந்தார்கள். அதை விட, அப்படியிருந்தவர்கள்தான் நண்பர்களானார்கள் என்று சொல்லலாம்.

ஒருமுறை ரேடியோவில் சோப்பு விளம்பரத்தில் பேசிய பெண்ணின் குரல் வியக்க வைத்தது. எண்பது மார்க் கொடுக்கலாம். எனவே ஆவல் மீறி வானொலி நிலையத்தை தொடர்பு கொண்டு முகவரி பெற்று திருச்சியிலிருந்து சென்னை சென்று நேரிலேயே சந்தித்து வந்தேன். அந்தப் பெண்மணியே என்னை வித்தியாசமான ஜந்து போலப் பார்த்தாள்.

அவளைப் பத்து நிமிடம் பேசச் சொல்லி ஒலிநாடாவில் பதிவு செய்து வந்தேன். அது இன்றும் என்னிடம் இருக்கிறது. அடிக்கடி போட்டுக் கேட்பேன்.

என்னுடைய அலுவலகத்தில் முக்கால் வாசிப்பேர் பெண்கள். அதில் நிர்மலாவோடு மட்டுமே அதிகம் பேசுவேன்.

"என்ன சேது.. கறுப்பா, ஒட்டடைக் குச்சியாட்டம் இருக்கா. அவகிட்டப் போய் மணிக்கணக்கா வழியிறியே?" மற்றவர்கள் கிண்டல் செய்வார்கள்.

நான் அவளின் அழகையா கவனிக்கிறேன்? உண்மையான காரணத்தை சொல்ல முடியாது. சிரிப்பார்கள்.

எனக்கு இருபத்தைந்து வயதானது. வீட்டில் பெண் பார்த்தார்கள். பதினான்கு பேரை தள்ளுபடி செய்தேன். எல்லாருக்கும் சிவந்த நிறம். செதுக்கிய மேனிதான். என்ன செய்ய? குரல் ரசிக்கும்படி இல்லையே...

"இதைவிட அழகான பொண்ணுங்களை எங்க தேடறது?" என அம்மா அலுத்துக் கொண்டாள்.

"கடைசியா இன்னும் ஒரே ஒரு இடம் பார்ப்போம். அதுவும் பிடிக்கலேன்னா



அவ்வளவுதான். அப்புறம் நீயே தேடிக்கோ..." என்றார் அப்பா.

நல்ல வேளையாக பதினைந்தாவது பெண்ணின் தொண்டையில் அமிர்தம். பேசுகையில் அது கரைந்து குரலில் வழிந்தது.

பெயர் சுகுணா. சுமாரான அழகுதான். சிரிக்கையில் பல் பயமுறுத்தியது. என்றாலும், அந்த இடத்திலேயே சம்மதம் சொல்லி விட்டேன்.

வைகாசி மாதம் திருமணம் என்று முடிவானது.

திருமணத்திற்கு பத்து நாள் இருக்கையில் அலுவலகம் முடிந்து பேருந்தில் திரும்பிக் கொண்டிருந்தேன். பயணிகளில் திடீரென இரண்டு பேர் எழுந்தார்கள். ஒருவன் கறுப்பாய், குள்ளமாய்: மற்றொருவனும் கறுப்பு, சற்றே நெட்டை.

துப்பாக்கியைக் காட்டி பேருந்தை நிறுத்தச் சொல்லி விட்டு நெட்டை பேசினான்:

"நாங்கள் தீவிரவாதிகள். எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த மூன்று பேரை அரசாங்கம் கைது செய்து விட்டது. அவர்களை விடுவிக்கும்படி பல விதங்களில் கேட்டுப்பார்த்து விட்டோம். பயனில்லை. எமது முதல்கட்ட நடவடிக்கையாக இந்தப் பேருந்தில் வெடிகுண்டை பொருத்தியிருக்கிறோம். அனைவரும் கீழே இறங்கி தங்களின் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படி...."

அவர்கள் இருவரும் முதலில் இறங்கிக் கொள்ள பயணிகள் ஒருவர் மேல் ஒருவர் இடித்து புரண்டு கூச்சலுடன் வெளியே குதித்தார்கள். போக்குவரத்துக் கலவரமாய் தடைபட்டது. பேசிய அந்தத் தீவிரவாதியின் குரலில் தொனித்த கவர்ச்சியில் ஈர்க்கப்பட்டு அதனை அசைபோட்டவாறே கடைசியாக இறங்கினேன். நெட்டை மனிதன் தனது கையில் வைத்திருந்த ரிமோட் கன்ட்ரோலை அமுத்த...

அடுத்த வினாடி பேருந்து என் மேலேயே வெடித்தாற் போல உணர்ந்து மிக உயரமாய்த் தூக்கியெறியப்பட்டேன்.

மறு நாள் காலை.

வெடிகுண்டு வைத்து தீவிரவாதிகள் பேருந்தை எரித்தனர். இரண்டு மணி நேரத்தில் அவர்களைக் கைது செய்து காவல் துறையினர் சாதனை போன்ற பரபரப்பான செய்திகளைக் கடந்து அரசாங்க மருத்துவமனைக்கு வந்தால்–

அப்பொழுதுதான் நான் கண் விழித்தேன். எதிரே பெற்றோரின் கவலையான முகம், மயக்கம் தெளிந்து நான் சுயநினைவு பெற்றதைக் கண்ட அம்மா ஏதோ சொன்னாள்.

என்ன இது.. வெறும் வாயை மட்டும் அசைக்கிறாள். குரல் திடீரென மிகவும் கீச்சாகிவிட்டதோ? அதற்குள் டாக்டர் வந்து குனிந்து எதையோ எழுதிக் காட்டினார்.

மிஸ்டர் சேது?

அசாதாரணமான சப்தத்தை கேட்டதில் உங்களின் செவிப்பறை நரம்புகள் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டன. இதை எவ்வித அறுவைசிகிச்சையிலும் சரிப்படுத்த இயலாது என்பதோடு 'ஹியரிங் எய்ட்' பொருத்தினாலும்கூட கேட்கும் சக்தி திரும்ப வராது என்பதுதான் துரதிர்ஷ்டம். இனி, நீங்கள் இது போன்று எழுத்து மற்றும் சைகை மூலமாகத் தான்...

அதற்கு மேலே படிக்க முடியாமல், கண்ணீர் திரையிட அதிர்ச்சியுடன் நான் அலறியது எதிரே இருந்தவர்களுக்கு நிச்சயமாகக் கேட்டிருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

## உயிருக்கு வேர்

சூடந்தலில் சூடி உதிர்ந்த மலர் வாடியிருந்தது. அந்த மலர் சந்திரமதியின் கால்பட்டு நசிந்து போனது.

'மிதித்துவிட்டேனே' என்று வருத்தப் பட்டாள் சந்திரமதி. மறு நொடியே காதலனைப் பிரிந்திருக்கும் நிலையோடு அதனை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டாள் சந்திரமதி.

'காதலன் அருகில் இருக்கும்வரை என் மனமும் புதிய பூவாய் மலர்ந்திருந்தது.

காதலன் பிரிந்து சென்ற பின்னர் என் மனமும் உதிர்ந்த பூவாய் பொலி விழந்தது.

பிரிவென்ற அரக்கனின் இரக்கமற்ற கால்களுக்கு இடையில் என் மனமும் மிதிபட்டுக் கொண்டிருக்கிறது.'

நினைத்தபோது விழியோரங்களில் நீர்திரண்டு உருண்டு நெஞ்சில் பட்டது. பட்ட இடம் சுட்டது.

கண்ணீரிலும் வெப்பம்! நெஞ்சில் எரியும் விரகதாபத்தீயில் விழிநீரும் சூடானதோ?!

"சந்திரமதி!"

"நான்தான்!"

"கேலி வேண்டாம். கேள்வி தொடு!"

"சரி! என்ன பிரபு?"

"நான் பிரபுவல்ல, ஏழை!"

"அப்படியா! என்ன உதவி வேண்டும் உமக்கு? கேளும் தருகிறேன்!"

"பசி, பசி. கொலைப் பசி!"

"என்ன வேண்டும்?"

"இது என்ன கேள்வி, உண்ண வேண்டும்! உதடு என்னும் வாழை யிலையில் என் பசிதீரப் படையலிட வேண்டும்!"

சந்திரமதி சிவந்து போவாள். முகம் பொத்தி சிணுங்குவாள். முகம் பொத்திக் கொண்டு அவள் இருக்க, அதுதான் தருணமென்று அவள் நெஞ்சில் மலர்ந் திருக்கும் இரு தாமரைகள் மத்தியிலே அவன் முகம் புதைப்பான். விலக்க முயலாமல் அவள் முகம் மூடிக்கொண்டே இருப்பாள்.

நரம்புகளில் சூடுபரவும். இதயம் வண்ணத்திப் பூச்சியின் சிறகு போல படபடக்கும். நெற்றியில் வியர்க்கும்.

"போதும்!" என்று பலவீனமாய் தடுப்பாள். குனிந்திருப்பவனின் கழுத்தில் விரல்களால் கிள்ளிவிடுவாள். தடுத்துக் கொண்டே ஊக்குவிக்கும் முரண்பட்ட நிலையில் அவள் இருப்பாள்.

அன்றைய நினைப்பில் இன்றும் சிலிர்த் தாள். அவன் அருகே இருப்பது போன்ற பிரமையில் "சேச்சே நீங்கள் மோசம்" என்று உளறினாள்.

"யாரடி மோசம்?" கேட்டது குரல். நினைவுச் சங்கிலி சட்டென்று அறுந்தது. வந்தவள் தோழி. சந்திரமதியை வெட்கம் விழுங்கியது.

"நெஞ்சைத் தட்டி நினைவுகளை அழைத்தாயோ? கொஞ்சும் கனவுகளில் மிதந்தாயோ?" தோழி கேலி பேசினாள்.

"உனக்கும் பிரிவு வந்தால் தெரியுமடி! சுகமும், சோகமும் சொல்லிப் புரியாதடி!" என்றாள் சந்திரமதி.

"நாளையோ, மறு நாளோ வரத்தானே போகிறார். அதற்குள் என்னடி அத்தனை வருத்தம்?"

"போனது இதயமென்பதால் மனதிலே காயம் வரத்தானே செய்யும்!"

"உயிரோடுதானே இருக்கிறாய்!" சந்திரமதியை கேலியோடு கிள்ளிப் பார்த்துக் கொண்டாள் தோழி.

தோழி கிள்ளியபோது சந்திரமதிக்கு



மறுபடியும் அவன் நினைப்பு.

தோழியும்தான் கிள்ளுகிறாள். உடனே சுள்ளென்று வலிக்கிறது! பதிலுக்கு ஒரு அறை கொடுக்கலாம் போல கோபமும் வருகிறது.

அவர் கிள்ளினால் மட்டும் கிள்ளிய இடம் வலிப்பதில்லை. உள்ளத்திலும் கோபம் வருவதில்லை. அது எப்படி? மனதில் வியந்தாள்.

இடையிலே கிள்ளுவான். அடுத்தது எங்கே கிள்ளுவான்? அவளுக்குத் தெரியும். அதனால் கோபம் போல முகத்தை திருப்பி வைத்திருப்பாள். முகம் பார்த்தால் தடுக்க வேண்டியதாகிவிடுமல்லவா. அதற்குத்தான் அந்த தந்திரம்.

"பூங்காவனத்தில் பூக்களுக்கா பஞ்சம்? எந்தப் பூவை கிள்ளுவது என்பதில்தான் கலக்கம்!" என்பான் வியப்பான குரலில்.

"வலிப்பது தெரியாமல், பழிப்பு வேறு!"

"வலிக்காதே!"

"அப்படியா?" என்று கேட்டபடியே அவனின் முழங்காலுக்கு மேலே பதிலுக்கு கிள்ளுவாள் சந்திரமதி.

"பதிலுக்கு பதில்!" என்று சந்திரமதியின் தொடையில் கிள்ளிவிட்டு "வலிக்கிறதா?" என்று பொய்யான கரிசனை காட்டி கிள்ளிய இடத்தில் விரல்களால் வருடிவிடுவான்.

"அதொன்றும் வலிக்கவில்லை, விட்டால் போதும்!"

"வலிக்கவில்லையா? இப்போது எப் படி" அவன் கிள்ளிய இடத்தை நினைத்து சட்டென்று சிரித்துவிட்டாள் சந்திரமதி.

"அப்படியே அம்மா! நான் இங்கிருக்கி றேன். நீ எங்கிருக்கிறாய்!?" தோழி அவள் தோள் தொட்டு உலுக்கினாள்.

சந்திரமதி சங்கடத்தால் நெளிந்தாள். தோழி தன் உதட்டைப் பிதுக்கிவிட்டு சொன்னாள்:

"உன்னை மீட்கவே முடியாதடி! அவர் வந்தால்தான் நினைவுக் கடலில் இருந்து நீ கரைக்கு வருவாய்! பாவமடி அவர்!"

"ஏனடி?"

"மலர் முழுக்க மகரந்தம். முழுவதும் அருந்தி முடிப்பதென்றால் வண்டுக்கு மூச்சு முட்டப் போகிறதடி!"

"வண்டைப் பற்றி தெரியாமல் பேசு கிறாய், குடம் குடமாய் தேன் கொடுத்தாலும், 'இன்னும் கொடு' என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கும்!"

"விட்டுக் கொடுக்க மாட்டாயே அவரை! வரட்டும் அவர் கேட்டு விடுகிறேன்!"

"என்ன கேட்கப் போகிறாய்?"

"இந்த மதுக் கிணற்றில் நீர் வீழ்ந்த மாயமென்ன? என்று!"

"அள்ளினாலும் வற்றாது! ஒருமுறை சுவை கண்டால் உயிர் உள்ளவரை போதை தீராது!"

"அதிசயம், ஆனால் உண்மையோ?"

"ஆமடி, போடி!" தோழியை முதுகில் அறைந்தாள்.

"சந்திரமதி உன்னிடம் ஒரு கேள்வி கேட்கவா?"

"கேளடி!"

"அவர் உனக்கு உயிர்! நீ விழியென்றால் அவர் இமை! அவர் பால் என்றால் நீ அதிலிருக்கும் சுவை! நீ பாட்டென்றால் அவர் இசை! அவர் செந்தமிழ் என்றால், நீ அதிலிருக்கும் நயம்! அப்படியிருந்தும் பிரிவைத் தாங்கி எப்படியடி உயிர் வாழ்கிறாய்?"



"நல்ல கேள்வியடி. எதனால் என் உயிர்ப் பறவை சிறகடித்து பறக்காமல் இருக்கிறது என்று தானே கேட்கிறாய்?"

"ஆமாம்!"

"அவர் நினைவென்னும் கூண்டுக்குள் சிறைப்பட்டிருப்பதால்!"

தோழி வியந்தாள். சந்திரமதி தொடர்ந்தாள்.

"என் உயிர் ஒரு மரம் என்றால் அது விழுந்துவிடாமல் இருப்பது எப்படி என்றா கேட்கிறாய்?"

"ஆமாம்!"

"இருவரும் ஒன்றாய் இரண்டறக் கலந்த நாட்கள் நெஞ்சில் வேர்விட்டிருப் பதால், உயிர் மரம் விழுந்துவிடாமலிருக் கிறதடி!"

உடனே தோழி கேட்டாள்.

"நினைவு நீரூற்றும். அனுபவ சுகம் வேர் காக்கும். உயிர் மரம் நிலைத் திருக்கும். சரிதானே நான் சொல்வது?" என்றாள் தோழி.

"சரிதான். பின்னர் எப்படி என் உயிர் இருக்கிறதாம். அப்படித்தானே!" என்றாள் சந்திரமதி.

கூடல் நினைவில் உயிர் வாழும் காதலியை திருவள்ளுவரும் நமக்கு காட்டுகிறார்.

**"மற்றியான் என்னுளேன் மன்னோ-**
**அவரொடுயான்**
**உற்றநாள் உள்ள உளேன்."**

குறள்-1206, அதிகாரம்-121.

## தருவது ரசிகன்

* நடிகை ரேவதி தேர்தலில் போட்டி யிடுகிறார் அல்லவா, வெற்றி பெறுவாரா?

சி.சசிரேகா, நீர்கொழும்பு.

ரேவதியை நாடாளுமன்ற உறுப்பின ராகப் பார்க்க ஆசைப்பட்டால் நல்ல நடிகையை இழந்துவிடுவோம். எனவே நம் சார்பிலும், தமிழக மக்கள் சார்பிலும் தென் சென்னைத் தொகுதிமக்கள் தேர்தலில் அவரைத் தோற்கடித்து, திரையுலகில் நல்ல நடிகை நீடிக்க துணைபுரிவார்கள். ஹி..ஹி...ஹி.

* காதலிக்க எங்கே கற்றுக் கொள்ளலாம்?

எம்.வசீகரன், கண்டி.

காதலித்தால் தான் கற்றுக் கொள்ளலாம்.

* ரிவிரெச 2, எப்படிப்போகிறது?

வி. ஆறுமுகம், தெகிவளை.

வாய்க்குள் சீலையைத் திணித்துவிட்டு அடிக்கிறார்கள். செய்தித் தணிக்கையைத் தான் சொல்கிறேன்.

* ரஜினியின் செல்வாக்குக்கு என்ன காரணம்?

எஸ்.சாஜகான், கல்முனை.

திரையுலகில் அவரது செல்வாக்குக்கு காரணம் தனித்துவமான ஸ்ரைல். அரசிய லில் அவரது செல்வாக்குக்குக் காரணம், தமிழக அரசியல் தலைவர்கள் தம்மீது தாமே நம்பிக்கை இழந்திருப்பது. அதனால் தான் ரஜினி அரசியலிலும் சூப்பர் ஸ்டாராகி யுள்ளார்.

*இம்ரான்கானின் மருத்துவமனையில் குண்டு வைத்தது யார்?

கே.பிரகாஷ், மருதானை.

ஏன் இம்ரான்கானாகவே இருக்கக் கூடாது என்று அவரிடமே பொலிசார் துருவத்தொடங்கியிருக்கிறார்கள். அரசியலில் ஒரு விஷயம் என்ன தெரியுமா, குண்டுயாருக்கு வைக்கப்படுகிறதோ அவர் செத்துவிட்டால் அனுதாபம் சொல்வார்கள். தப்பிப் பிழைத்து விட்டால் அவர்மீதே சந்தேகப்படத் தொடங்கி விடுவார்கள்.

* இந்தியாவில் அடுத்து ஆட்சி அமைக்கப்போவது யார்?

செல்வன் கே.சாரங்கன், பதுளை.

யாருக்குமே பெரும்பான்மை கிடைக்கப் போவதில்லை. எம்.பிகளை நல்ல விலைக்கு வாங்கக்கூடிய பலம் யாருக்கு இருக்குமோ அவர்தான் அடுத்த பிரதமர். அப்படிப் பார்த்தால் நரசிம்மராவுக்கும் வாய்ப்பு இருக்கும். மனிதர் சிரிக்க மாட்டாரே தவிர சித்து விளையாட்டுக்களில் கில்லாடி.

* உங்கள் கனவில் ஜெயலலிதா தோன்றி னால்?

எஸ்.திவாகர், வவுனியா.

முதலில் பயந்துவிடுவேன். (அவர் உருவத்தைக் கண்டு) பின்னர் சுதாகரித்துக் கொண்டு, "அம்மா! தாயே! ஆயுள் முழுக்க முதல்வராக இருந்திருக்கலாம், உடன் பிறவாச் சகோதரியை மட்டும் அருகில் சேர்க்காமல் இருந்திருந்தால்! பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல, உங்கள் பக்கம் சாய்ந்த தமிழக மக்களை பக்குவமாக ஏமாற்ற நினைக்காமல், பகட்டால் ஏமாற்ற நினைத்தது தப்பும்மா தப்பு." என்று சொல்லிவிட்டு கண்ணைத் திறந்துகொள்வேன்.

* ஆடைக்குறைப்பில் வெளுத்துக் கட்டும் நடிகை யார்?

என்.மில்டன், திருமலை.

ஆடையை எப்படி எப்படி அவிழ்ப்பது என்பதில்தான் போட்டி. வெளுத்துக்கட்ட ஆடை மிஞ்ச வேண்டுமே.

### கமலுக்கு ஈடுகொடுக்கும் நடிகை?



* கமல்ஹாசனுக்கு ஈடுகொடுக்கக்கூடிய நடிகை யார்?

வி. நிர்மலா, வவுனியா.

ஒரு நடிகை மட்டும் போதாது என் பதால்தானே, இந்தியனில் ஒன்றுக்கு மூன்று பேரை கொடுத்திருக்கிறார்கள்.

* சார்ஜாவில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றுவிட்டதே.

மா.பாஸ்கரன், கொழும்பு.06.

வெற்றி தோல்வியை விட்டுத் தள்ளுங்கள் பாஸ்கரன், எனது கவலை என்ன தெரியுமா, தென்னாபிரிக்காவுக்கு சரியான போட்டியே இருக்கவில்லை என்பதுதான்.

* 'இந்தியன்' படம் சாதனை படைக்கும் என்று நம்பலாமா?

சி. கமலநாதன், மட்டக்களப்பு.

திரையிடப்பட முன்னரே விற்பனையில் சாதனை படைத்திருக்கிறது. 12 கோடி ரூபாய்க்கு வியாபாரமாகியிருக்கிறதாம். இந்திய சினிமா வரலாற்றில் இது ஒரு சாதனை. கொஞ்சம் நடிப்பு, கொஞ்சம் கவர்ச்சி, கொஞ்சம் கமரா-கம்யூட்டர் சாகசம், கொஞ்சம் இசை எல்லாம் சேர்ந்து சூப்பர் மசாலாவாக வருகிறதாம். நல்ல பட ரசிகர்கள் ஜொள்ளு மன்னர்கள் என்று இரு தரப்பாருக்கும் செம தீனி.

* தமிழ்நாட்டில் துணிச்சலான அரசியல்வாதி யார்?

கா.மரியதாஸ், நுவரெலியா.

ஜெயலலிதா! இதுவரை இல்லாத அளவுக்கு ஊழல் செய்தும்கூட, எந்தத் தயக்கமும் இல்லாமல் மக்களைச் சந்திக்கிறார் அல்லவா. துணிச்சல்தானே!

* 'ஆனந்தம்' படம் புலிகள் பற்றிய கதைதானே?

எல்.எம். ஹமீத், கண்டி.

புரளி!

### சிந்தியா பதில்கள்

* வாசிம் அக்ரம் மறுபடியும் பாகிஸ்தான் அணியில் இடம்பெறுவாரா?

எம்.பாத்திமா, கொழும்பு-11.

வாசிம் அக்ரம் வந்ததும் கப்டன் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்து விடு வேன் என்று பெருந்தன்மையோடு சொல்லி யிருக்கிறார் அமீர் சொகைல்! குணமடைந்து வருகிறேன். விளையாட வருகிறேன். என்கிறார் வாசிம் அக்ரம். இரண்டுமே நல்ல செய்திதானே! ஆனால் எனக் கென்னவோ அமீர்சொகைல்தான் நல்ல கப்டன் என்றுபடுகிறது.

* சிங்கர் கிண்ணத்தில் இலங்கை அணியின் தோல்விக்கு காரணம் யார்?

எஸ். ஜோசப், குருநாகல்.

ஜெயசூரியாவின் விளாசல். அவர் விளாசிவிட்டதால் அதேயளவு இல்லா விட்டாலும் அதில் பாதியாவது விளாசிக் காட்டவேண்டும் என்று அரவிந்த டி. சில்வா போன்றவர்கள் நினைத்துவிட்டனர். வேறு சிலர் வெற்றி உறுதி என்ற அதீத தன்னம் பிக்கையில் கோட்டை விட்டனர். ஜெயசூரியா அவுட்டானால் அவரே போய்விட்டாரே என்று சிலர் மலைத்துப் போயினர். இந்திய அணியின் வியாதி இலங்கை அணிக்கும் தொற்றலாம்போலத் தெரிகிறது.

### ஜெயலலிதாவின் பலம்

1. எதிர்க் கட்சிகளின் மோதலால் வாக்குகள் சிதறுவது.
2. நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் ஆதரவு. காங்கிரஸ் பிளவுபட்டா லும் வாக்காளர்களுக்கு பழக்கப்பட்ட கைசின்னம் நரசிம்மராவ் காங்கிரசிடம் இருப்பது.
3. எம்.ஜி.ஆரின் சின்னம் என்று கிராமப்புற வாக்காளர்கள் நம்பும் இரட்டை இலை.
4. பணபலம்- அதிகாரபலம்.
5. எம்.ஜி.ஆரின் வாரிசு என்ற இமேஜ்.
6. பெண் என்பதால் பெண் வாக்காளர் களது அனுதாபம்.
7. கிராமப்புறங்களில் ஜெயலலிதாவின் ஊழல் தொடர்பாக போதிய விளக்கம் இல்லா திருப்பது.

### கருணாநிதியின் பலம்

1. ஜெயலலிதாவுக்கு எதிராக தொடர்ந்து அரசியல் நடத்திவரும் ஒரே தலை வர்.
2. ஆட்சி நடத்துவதில் சிறந்த நிர்வாகி என்ற பெயர்.
3. தொண்டர்கள் பலம்.
4. எப்போதும் மக்களுடன் தொடர்பில் உள்ளவர்.
5. தமிழக மாநில காங்கிரசுடன் கூட்டணி.
6. ரஜினிகாந்தின் ஆதரவு. மற்றும் திரை யுலகத்தினரின் ஆதரவு.
7. பேச்சாற்றல் மற்றும் பிரசாரபலம்.
8. பத்திரிகையுலக ஆதரவு.

### ஜெயலலிதாவின் பலவீனங்கள்

1. மக்களிடமிருந்து கடந்த ஐந்தாண்டு களாக அந்நியப்பட்டிருந்தமை.
2. உடன்பிறவாத சகோதரி என்று சொல்லப் படும் சசிகலா குடும்பத்தின் ஆதிக்கம்.
3. ஊழல் புகார்கள்.
4. ஜெயலலிதா கட்சி சட்டமன்ற உறுப் பினர்களது அடாவடித்தனங்கள்.
5. பத்திரிகைகளை பகைத்துக் கொண்டமை.
6. கூட்டுவைத்துள்ள காங்கிரஸ்கட்சி தமிழ் நாட்டில் பிளவுபட்டுள்ளமை.
7. மிக முக்கியமாக, ரஜினியை சீண்டிவிட்டு அவரது ரசிகர்களின் எதிர்ப்பை சம்பாதித் துள்ளமை.

### கருணாநிதியின் பலவீனங்கள்

1. 72 வயதாகிவிட்டது
2. கடந்தகாலத்தில் அவரது ஆட்சிக்காலத் தில் எழுந்த ஊழல் புகார்கள்.
3. வை. கோபால்சாமியின் ம.தி.மு.க.வின் கடும் எதிர்ப்பு.
4. கிராமப்புற தாய்க்குலத்தின் மத்தியில் ஆதரவு போதாது.
5. கடைசிநேரத்தில் நரசிம்மராவுடன் கூட்டுச்சேர தயாராக இருந்தது.
6. எம்.ஜி.ஆரை இன்று புகழ்ந்து பேசினாலும் கூட உண்மையான எம்.ஜி.ஆர் பக்தர்கள் அவரை நம்பத் தயாராக இல்லாதது.
7. அதிகாரபலம் இல்லாதிருப்பது.
8. பாட்டாளி மக்கள் கட்சியோடு கூட்டணி அமைக்கும் வாய்ப்பை நழுவவிட்டது.

### ரஜினிகாந்தின் பலம்

1. துணிச்சலானவர், நேர்மையானவர் என்று நல்ல பெயர்.
2. ரசிகர் மன்றங்களின் பலம்.
3. பத்திரிகைகள் மூலமாகக் கிடைக்கும் பாரிய விளம்பரம். அதன் மூலமாக மக்களிடம் எதிர் பார்ப்பு.
4. கருணாநிதி, மூப்ப னார் போன்ற தலைவர்கள்கூட கொடுத்துவரும் மரியாதை.
5. துக்ளக் 'சோ' போன்றவர்களது ஆலோசனைகள்.



### ரஜினியின் பலவீனங்கள்

1. எந்த முடிவையும் உறுதியாக எடுக்காமல் தடுமாறுவது.
2. தனிக்கட்சி தொடங்காமல், வேறு கட்சிகளை ஆதரிப்பது.
3. தான் ஆதரிக்கும் அணியில் ஊழல் புகார்கள் உள்ளவர்களும் இடம் பெற்றி ருப்பதை கண்டும் காணாமல் இருப் பது.
4. சண்டைக்காரர் என்று அவரது எதிரிகள் செய்யும் பிரசாரம்.

தமிழகத் தேர்தலில் எத்தனை கட்சிகள் மோதினாலும், மேற்கண்ட மூன்றுபேரினதும் பலம் பலவீனம்தான் தமிழ் நாட்டில் அடுத்த ஆட்சி யார் வசம்? என்பதை தீர்மானிக்கப்போகின்றன.

ஜெயலலிதா வெற்றி பெற்றால் அந்த வெற்றிக்கான காரணத்தில் 80 வீதம் அவரையே சேரும்.

தி.மு.க.கூட்டணி வெற்றி பெற்றால் அதில் மூவருக்கு பங்கிருக்கும்.

கருணாநிதிக்கு 40 வீதம், ரஜினிக்கு 40 வீதம், மூப்பனாருக்கு 20 வீதம். ஆனால் மொத்த லாபம் கருணாநிதிக்குத்தான். அவர் தானே முதலமைச்சராவார். தி.மு.க.தான் ஆளும்கட்சியாக இருக்கும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 147இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

| | |
|---|---|
| 1. கே. கௌசல்யா, கொழும்பு-13. | 6. செல்வி. பாத்திமா வஸீரா, நீர்கொழும்பு. |
| 2. செல்வி. ஏ. ஆரிகா, கல்முனை-06. | 7. எம். ஹில்மி, மாவனல்லை. |
| 3. எஸ். கருணாகரன், வவுனியா. | 8. எம். மகேஸ்வரன், முறக்கொட்டாஞ்சேனை. |
| 4. தாஹிர் எம். சிம்சார், வெலிகம. | 9. திருமதி. ஷீலா மார்கிரட் எட்வேட், பண்டாரவளை. |
| 5. எஸ். சிறீதரன், புசல்லாவ. | 10. செல்வி. கே. லலிதா, மொரட்டுவ. |



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 29

இராமர் சுசீட்சண முனிவரைக் கண்டு உரையாடும்போது சூசகமாக ஒரு தகவலைக் கூறினார். "இங்கு ஏராளமான தவசிரேட்டர்கள் வசிக்கிறார்கள். அவர்களுடைய தவ வாழ்க்கைக்கும் வேள்விகளுக்கும் பல கொடிய வன விலங்குகள் கெடுமதி செய்து வருகின்றன." இவ்வாறு கூறியதன் உட்பொருளை இராமரும் இலக்குவனும் புரிந்து கொண்டனர். உண்மையில் நான்கு கால்களை உடைய வனவிலங்குகளை முனிவர் குறிப்பிடவில்லை. வேள்விகளை நடத்தவொட்டாமல் தடுப்பதுடன் முனிவர்களுக்கும் துன்பம் விளைவித்து அவர்களைக் கொன்று உண்ணும் அரக்கர்களைப் பற்றியே அவர் குறிப்பிட்டார். சுசீட்சண முனிவர் மட்டுமல்லாமல் தண்டகாரணிய(வன)த்தில் வாழும் முனிவர்கள் அனைவருமே இராமரிடம் அபயம் கோரினார்கள். அவரும் 'அஞ்சேல்' என அபயமளித்துவிட்டார்.

முனிவரின் கூற்றுக்குப் பதிலளித்த இராமர், "மாமுனிவரே! என்தம்பி இலக்குவனிடமும் என்னிடமும் போதியளவு அம்புகளும் வில்லும் உள்ளன. முனிவர்களை எத்தீங்கும் அணுகாமல் காப்பது எங்கள் கடமை." என்று வாக்களித்தார் இராமர்.

ஜனக மாமன்னரின் மகளான சீதைக்கும் இவர்களுடைய உரையாடலின் அர்த்தம் தெளிவாகப் புரிந்துவிட்டது. சுசீட்சண மாமுனிவரிடம் விடைபெற்று மற்றோரிடத்தில் வாழும் முனிவர்களின் ஆசிரமங்களை நாடி மூவரும் சென்றனர்.

### சீதையின் வேதனை

இயற்கை வஞ்சகமில்லாமல் தன் எழிலை அள்ளிக் குவித்திருந்தது. முன்பு போல் சீதையால் அங்கு நிறைந்து கிடந்த அழகினை இரசிக்க முடியவில்லை. அவளுடைய உள்ளத்தில் விபரிக்க முடியாத புயல் வீசிக் கொண்டிருப்பதை இராமர், அவளுடைய அகத்தைக் காட்டும் முகத்தின் மூலம் கண்டு கொண்டார். இயற்கை அழகினை இரசிக்கும் வகையில் அதுவரை இராமர் கூறிவந்த கதைகள் எதிலுமே சீதை நாட்டம் காட்டவில்லை. இதனால்தான் ஜானகியின் உள்ளத்தைக் குடையும் வேதனை என்ன என்பதை அறிய முற்பட்டார்.

"ஜானகி, என்றுமே இல்லாதவாறு உன் முகத்தில் சிந்தனைக் கோடுகள் கோலம் போடுகின்றனவே! காரணத்தை நான் அறியலாமா?" என்று இராமர் கேட்டார். சீதை உடனடியாக இவ்வினாவுக்கு விடை அளிக்க முடியாது தவித்தாள். பின்னர் ஒருவாறு கூறத் தொடங்கினாள்.

"பிராண நாதா! தாங்கள் அறியாத தொன்றல்ல; இருப்பினும் என் உள்ளத்தை உறுத்தும் வேதனைக்கு தங்கள் விடையே தகுந்த மருந்தாகும்."

"என்னிடம் எதையும் கேட்பதற்கு உன்னை விட உரிமையுடையவர் யாரிருக்கிறார்கள்? தாராளமாகக் கேள் கண்ணே!"

"நாதா! எந்தக் கொடிய மிருகமும் எவரையும் கொல்ல வேண்டும் என்று தானாக நினைத்து நம்மைக் கொல்ல வருவதில்லை. நம்மால் தனக்குத் தீமை ஏற்படக்கூடும் என்று நினைத்தால் தான் அது நம்மைத்தாக்க வருகிறது. இல்லயேல் நம்மைத் தனது இரையாக்க வேண்டும் என்று கருதினாலும் நம்மைக் கொல்ல வரலாம். தானாகத் தன்பாட்டுக்கு வேறு இரையைத் தேட ஓடும் விலங்கினை நாமேன் வலியச் சென்று தாக்கிக் கொல்ல வேண்டும்? இதே போல் அரக்கர்கள் தீய எண்ணத்துடன் நம்மை நாடி வரவில்லையே? முனிவர்களை அரக்கர்கள் கொல்ல நினைத்தால் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசனைச் சார்ந்தது. தாங்கள் தங்கள் தந்தை சொல்லைக் காக்க தவவேடம் தாங்கி வந்தவர்கள். ஆகவே அரக்கர்களை வதம் செய்யத் தாங்கள் நினைப்பது, தாங்கள் ஏற்றுள்ள தவ விரதத்துக்கு ஏற்புடையதல்லவே?"

இவ்வாறு சீதை தன் உள்ளக் கிடக்கையைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டியமை இராமருக்கு உண்மையில் பெரு மகிழ்ச்சியையே கொடுத்தது. புன்முறுவல் பூத்தவராகக் கூறினார்: "எனது தர்ம பத்தினியாகிய நீ கூறிய கருத்து முற்றிலும் உண்மை. நான் அரசனாக பதவியேற்கவில்லை என்றாலும் நான் ஒரு சத்திரியன். தனக்குவரும் துன்பத்தை விட பிறருக்குத் துன்பம் ஏற்படாமல் காப்பதுதான் சத்திரிய தர்மம். அதுமட்டுமல்லாமல் இங்கு வாழும் முனிவர்கள், அரக்கர்களிடமிருந்து தங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று எம்மைத் தஞ்சமடைந்தனர். காப்பதாக வாக்களித்து விட்டேன். கொடுத்த வாக்கினைக் காப்பாற்றுவதே தர்மம். வாக்கு மீறுவது எவருக்கும் நல்லதல்ல. உன் கணவன் 'கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியா கையாலாகாதவன்' என்று பிறர் கூறுவதைக் கேட்டுக் கொண்டு உன்னால் அமைதியாக இருக்க முடியுமா? ஆகவே அமைதியாக இருந்து நடப்பவற்றைத் துணிவுடன் ஏற்கப் பழகிக் கொள்வாயாக" என்றார்.

✻ ✪ ❖

தண்டகாரணியத்தில் பத்து ஆண்டுகள் வாழ்ந்து விட்டு மீண்டும் சுசீட்சண முனிவரின் ஆசிரமம் வந்தனர். அவரிடம் விடைபெறும் போது, தெற்கே அகத்திய மாமுனிவரிடம் செல்ல விரும்புவதாக இராமர் கூறினார். இராமரும் ஏனையோரும் அகத்திய முனிவரை தரிசிப்பது அவசியம் என்று ஆசி வழங்கி வழி அனுப்பி வைத்தார், முனிவர்.

## தமிழால் உலகளந்த தவத்திலுயர் அகத்தியன்

### குள்ள முனி அகத்தியன்

வித்திய மலை மீதிருந்து பந்நெடுங் காலம் தவமியற்றிய அகத்திய மாமுனிவர் தமிழ் மொழியை சிவபெருமானிடமே கற்றறிந்தவர் என்று பல நூல்கள் கூறுகின்றன. காவேரி ஆற்றினை தன் கமண்டலத்திலே அடக்கி தமிழ் நாட்டில் அந்நதி பெருக்கெடுத்தோட வகை செய்தவர். இமயமலையிலே சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் நடைபெற்ற திருமண விழாவில் தேவர்கள், மூவர்கள் அனைவரும் கலந்துகொள்ள அங்கு சென்றமையினால் பாரம் தாங்காமல் இமயம் தாழ்ந்து தென்புலம் மேலெழுந்தது. உலகத்தைச் சமநிலைப்படுத்த அகத்தியரை தென்திசை ஏகுமாறு பணித்தார் சிவபெருமான். முனிவர் விந்தியம் வந்ததும் பூமி சமநிலை அடைந்ததாம். அதுமட்டுமல்லாமல் சிவ-பார்வதி திருமணத்தை தெற்கே இருந்த வண்ணம் கண்டு களித்தாராம் அகத்திய மாமுனிவர்.

இத்தகைய பல பெருமைகளை உடைய குள்ள முனியான அகத்தியரைத் தரிசிக்க இராம- இலக்குவனுடன் சீதையும் வந்து கொண்டிருந்தாள். தாங்கள் வந்துவிட்ட செய்தியை தம்பி இலக்குவன் மூலம் முனிவருக்கு இராமர் தெரியப்படுத்தினார். இலக்குவன் மூலம் தகவல்பெற்ற அகத்தியரும் அகமகிழ்ந்து, இராமர் இருந்த இடம் நோக்கி ஓடிச் சென்றார்.

அகத்திய மாமுனிவரும் இராமரும் சந்தித்த காட்சியை கம்பநாட்டாழ்வார் மிகச் சிறப்பாக நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்:

**ஆண்தகையர் அவ் வயின்**
**அடைந்தமை அறிந்தான்;**
**ஈண்டு, உவகை வேலை துணை**
**ஏழ் உலகம் எய்த,**
**மாண்ட வாதன் சரண் வணங்க,**
**எதிர் வந்தான்–**
**நீண்ட தமிழால் உலகை**
**நேமியின் அளந்தான்.**

(ஆரணிய காண்டம்-2666)

பொருள்:

*மூவுலகத்தையும் தன் திருப்பாதங்களால் திருமால் அளந்ததுபோல, என்றும் நிலைத்துள்ள தமிழால் உலகினை அளந்தவனாகிய அகத்திய மாமுனிவன், ஆண்மை மிகப் பெற்றவர்களான இராமனும் இலக்குவனும் தன்னை நாடி வந்ததை அறிந்தான். இதனால் ஈரேழு பதினான்கு உலகங்களும் மகிழ்ச்சி பெருகும் தன்மையை அடைந்தவனாகி, பெருமை மிகு வரங்களை அருளும் தன்மையுடைய இராமன் தன்னை வணங்கும் பொருட்டு, அவர்கள் முன் வந்து நின்றான்.*

✯ ★ ✧ ★

இராமரை ஆலிங்கனம் செய்த அகத்திய மாமுனிவர் மூவரையும் தமது ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்று உபசரித்தார். தன்னிடமிருந்த வில்லினை எடுத்து, "இராமா! இந்த வில்லினை மகாவிஷ்ணு எனக்களித்தார். இதோ இருக்கும் கணைகள் பிரம்மதேவனாலும், என்றும் குறையாத அஸ்திரங்களைத் தந்துகொண்டிருக்கும் அம்பறாத்தூணிகள் இந்திரனாலும் எனக்குத் தரப்பட்டவை. இவை அனைத்தையும் உன்னிடம் தருவதற்காகவே இதுவரை வைத்திருந்தேன். இவற்றைப் பெற்றுக் கொள்," என்று அனைத்தையும் ஒப்படைத்தார்.

சிரமபரிகாரங்கள் முடிந்ததும் உணவு உட்கொண்டபின்னர், தனது தவவாழ்க்கையின் எஞ்சிய காலத்தைக் கழிப்பதற்கேற்ற இடம் ஒன்றினைக் குறிப்பிடுமாறு இராமர் முனிவரைக் கேட்டார். அங்கிருந்து சற்றுத் தொலைவிலுள்ள பஞ்சவடி என்ற வனமே அவர்களுக்கேற்ற சிறப்பான இடம் என்று, அங்கு செல்லுமாறு கூறினார். அத்துடன், "அரசிளங்குமரியான சீதை இத்தகைய வனவாசத்துக்கு ஏற்றவளல்ல; உன் மீதுள்ள அளவற்ற காதலினால் உன்னை, எக்காலத்திலும் பிரியலாகாது என்று விரதமேற்று வந்துள்ளாள். அவளை மிகக் கவனமாகக் காப்பது உங்கள் இருவரது கடமையுமாகும்." என்று கூறி வழி அனுப்பினார்.

### விதி யாரை விட்டது....?

மூவரையும் வழி அனுப்பிவிட்டு அகத்திய மாமுனிவர் அவர்களின் பின்னாலேயே தன் சிந்தனையையும் செலுத்தினார். பஞ்சவடி நோக்கிச் செல்லும் அவர்களுக்கு எதிர்காலத்தில் என்னென்ன சிக்கல்கள் தோன்றப் போகின்றன என்பவற்றையெல்லாம் அவருடைய அகக் கண்ணாடி காட்டியது. தெய்வமே திரு அவதாரமெடுத்து வந்து, உலகின் கண் வாழும் நல்லவர்களுக்கும் முனிவர்களுக்கும் வானவர்களுக்கும் தீங்கிழைத்துவரும் கொடியவர்களை அழிக்கப்போகிறது. சகல வல்லமையுமுள்ள அத்திரு அவதாரம்- மாநிடனாகப் பிறந்தமையினால் இந்த மண்ணுக்குரிய மாந்தர்



அனுபவிக்கும் துன்பங்களையெல்லாம் அனுபவிக்க வேண்டியிருக்கிறதே என்பதை அகத்தியர் எண்ணிப் பார்த்தார்.

விதி பொல்லாதது. நாள் கோள் நட்சத்திரங்கள் எந்தெந்த நிலையில் சஞ்சரிக்கின்றனவோ- ஒவ்வொரு உயிரும் தாய் வயிற்றிலிருந்து வெளிவரும் அதே கணத்தில் அவை எங்கெங்கே நிற்கின்றனவோ- அதே காலத்துக்கேற்பவே ஓர் உயிரின் விதி நிர்ணயிக்கப்படுகிறது. இந்த விதியிலிருந்து எவரும்- தெய்வப்பிறவியாக இருந்தாலும் மாநிடப்பிறவியாக இருந்தாலும்- தப்பவே முடியாது.

மூவருக்கும் மீண்டும் மானசீகமாக முனிவர் ஆசி கூறினார்.

✻ ❧ ☐ ❥

ஒரு மலையின் உச்சியில் கம்பீரமாக நின்றிருந்த பெரிய கழுகு ஒன்று இராம இலக்குவன், சீதை ஆகிய மூவரையும் கண்டு பறந்து வந்து அவர்கள் முன் நின்றது. இதனைக் கண்ட இலக்குவன் "இதுவும் ஓர் அரக்கனின் தோற்றமே! அண்ணா! விடை கொடுங்கள்! ஒரே பாணத்தில் அவன் உடலைக் கிழித்தெறிகிறேன்." என்றான்.

## இராஜகுமாரன்

இராமனோ, "பொறு தம்பி! ஆத்திரம் பொல்லாதது," என்றதும் அந்தப் பறவையே பேசத் தொடங்கியது: "தசரத மாமன்னரின் தவப்புதல்வர்களே! நான் உங்கள் தந்தை தசரத மாமன்னரின் ஆப்த நண்பன். கழுகரசனான என்பெயர் ஜடாயு. நீங்கள் நடந்து வந்த தோற்றத்தைத் தொலைவில் இருந்தே அவதானித்தேன். என் நண்பன் தசரதமாமன்னரின் கம்பீரமான நடையினை உங்கள் இருவரிடமும் கண்டேன். களிப்பு மேலீட்டால் பறந்து வந்தேன். தங்கள் தந்தை நலமாக இருக்கிறாரா? நாடாளவேண்டிய தசரத குமாரர்கள் காடாள வந்தது ஏனோ....?" என்று கேட்டார், ஜடாயு.

தந்தை விண்ணுலகம் சென்று விட்டதை தனயர்கள் கூறியதும் ஜடாயு மூர்ச்சித்து வீழ்ந்தார்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 27

**சரியானவிடை:- நந்திக் கிராமம்**

1. திருமதி. ஸ்ரீநிவாசன். டயகம றோட், வின்டுல.
2. ந. ரதீஸ்வரன். சிறைச்சாலை, மட்டக்களப்பு.
3. எல். கீதா. கோவில் கடை, மாவதுர, கம்பளை.
4. செல்வி. தாரணி பத்திநாதர். இல. 24 வட்டவித், கழுதாவளை, மாத்தளை.
5. கே. லலானி பறனாந்து. இல. 3 மங்குலிய றோட், நீர் கொழும்பு.

**போட்டி இல. 29** கேள்வி:- தமிழால் உலகளந்தவர் யார்?

மே.04 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.29, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

---

தமிழக தேர்தலில் இம்முறையும் நடிக, நடிகையர் ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறது. இந்த நிலை தொடர்ந்தால் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்கிறார் நமது காதிலை பூ கந்தசாமி.

## நக்மா ஆவேச முழக்கம்

தமிழக சட்டசபைத் தேர்தலில் நக்மாவும் போட்டியிடுவது தெரிந்ததே. நேற்று மாலை நக்மா தனது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

நக்மா கூட்டத்தில் உரையாற்றுவதற்கு முன்பாக வாக்காளர்களை உற்சாகப்படுத்த 'காதலன்' படத்தில் இருந்து சில பாடல் காட்சிகள் வீடியோவில் போட்டுக் காண்பிக்கப்பட்டன.

"கோழிக் குஞ்சு வைத்திருக்கேன் கோபாலா" என்ற பாடல் காட்சி காண்பிக்கப்பட்டபோது ரசிகர்கள் உணர்ச்சிவசப்பட்டு 'நக்மாவுக்கு ஜே' என்று கோஷமிட்டனர். அதனைக் கவனித்த நக்மா ஆனந்தக் கண்ணீரோடு காணப்பட்டார்.

பின்னர் பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

"என்னைப் பார்த்து பம்பாய்க்காரி என்று பழிசொல்லுகின்றனர் சிலர். நான் பிறந்தது பம்பாயில்தான். ஆனால் என்னை வாழவைத்து, வளம் சேரவைத்தது தமிழ் நாடுதான். பிறந்தது பம்பாயில். சிறந்தது தமிழ் நாட்டில். இப்போது சொல்லுங்கள் நான் பம்பாய்க்காரியா?"

(கூட்டத்தினர் இல்லை. இல்லை என்று கோஷம் போட்டனர்.)

என்னை பரோட்டா, வெண்ணெய்க் கட்டி, மாகோ மாம்பழம், ஜிக்கு புக்கு ரயிலு என்றெல்லாம் புகழ்ந்துதள்ளிய தமிழக மக்களுக்காக என் உயிரையும் தரச் சித்தமாக இருக்கிறேன்.

(வேண்டாம் வேண்டாம் என்று கூச்சல்.)

நக்மா என்ன தியாகம் செய்தார்- என்று நாக்கில் நரம்பில்லாமல் கேட்கிறார்கள்.

ரசிகர்களின் சந்தோஷமே எனது சந்தோசம் என்று அணிந்திருந்த ஆடைகளையே தியாகம் செய்தவள் நான். உணர்ச்சியற்ற ஜடங்களுக்கு அது புரியாமல் இருக்கலாம். உணர்ச்சியுள்ள ரசிகர்கள் அவர்களை மன்னிக்கமாட்டார்கள். என்று முழக்கமிட்டார் நக்மா.



## கலைஞர் கருணாநிதி கண்டனம்

நடிகை நக்மாமீது காரசாரமாக கண்டனம் தொடுத்தார் கலைஞர் கருணாநிதி.

யார் இந்த நக்மா? பம்பாய்க்காரிகளுக்கு தமிழன் பட வாய்ப்புக் கொடுப்பானே தவிர, பதவி வாய்ப்புக் கொடுக்க மாட்டான்.

யாராக இருந்தாலும் ஆடுவதை ரசிக்கும் பண்பாடு நமக்கிருப்பதால், நம்மை ஆட்டிப்படைக்கலாம் என்று ஆடவந்தவர்கள் ஆணவமாய் நினைப்பதா? மானமுள்ள தமிழன் அதனை அனுமதிப்பதா?

நக்மா பதவிக்கு வந்தால், நக்மாவுக்கு ஒரு உயிர்த்தோழி தேவைப்படலாம். அந்தத் தோழி தமிழன் தோளில் ஏறிக் கொக்கரிக்கலாம். அந்த நிலை, ஏற்கனவே அனுபவித்து நொந்தநிலை மறுபடி வர வேண்டுமா? தமிழா சிந்தி. உடன்பிறப்பே விழித்தெழு.

தமிழக சட்டசபையை படப்பிடிப்புத் தளமாக நினைக்கும் பாவைகளை பதவியில் அமரவைத்துவிடாதீர்கள்.

ஆடினாள். ஆடினோம். நயனவிழிப் பாசையால் தமிழர்கள் சயனநிலையில் மானம் இழந்தோம் என்று வரலாறு வசைபாட அனுமதியாதீர்" என்று உரையாற்றினார் கலைஞர் கருணாநிதி.

## காதிலை பூ கந்தசாமி

## கலைஞர் கட்சியில் நக்மா

*நடிகை நக்மா தனது ஆதரவை தி.மு.க வுக்கு வழங்கப் போவதாக அறிவித்துள்ளார். அதனால் தனது வேட்பு மனுவை வாபஸ் வாங்கியுள்ளார்.*

கலைஞர் கருணாநிதியை நக்மா சந்தித்து 30 நிமிடம் உரையாடினார். அதனையடுத்து கலைஞரும் நக்மாவும் புன்னகை பூத்தபடி பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்தனர்.

"நக்மா எனது நாலாண்டுகால நண்பி. நல்ல பண்பாளி. நக்மா போன்றவர்களின் ஆதரவு நமக்கு கிடைத்திருக்கிறது என்றால் தமிழகத்துக்கு விமோசனம் வரப்போகிறது என்பதற்கு அது ஒரு முன் அறிவித்தல்" என்றார் கலைஞர்.



நிருபர்:- நக்மாவை கடுமையாக தாக்கியிருந்தீர்களே?

கருணாநிதி:- தாக்கினேன் என்பது தவறு. அது பிராமணப் பத்திரிகைகளின் கட்டுக்கதை. நக்மா என்பது மூன்றெழுத்து. நமது என்பதும் மூன்றெழுத்து. நமது நக்மா என்பது மூன்றும் மூன்றும் ஆறெழுத்து.

நிருபர்:- நடிகைகளின் செல்வாக்கை வைத்து வாக்குத்தேடும் நிலை தி.மு.கவுக்கு ஏற்பட்டுவிட்டதே?!

கருணாநிதி:- நடிகைகளும் உழைப்பாளர்கள்தான். நாமெல்லாம் மகிழவேண்டும் என்பதற்காக உழைப்பவர்கள். உழைப்பாளர்களின் சின்னம் உதயசூரியன். எனவே நக்மா உதய சூரியனை ஆதரிப்பது பொருத்தம்தான்.

நிருபர்:- நடிகை நக்மா பல படங்களில் ஆடைக்குறைப்பு செய்து நடித்துள்ளாரே? தமிழர் பண்பாடு பாதிக்கப்படாதா?

கருணாநிதி:- காந்தி கூடத்தான் ஆடையைக் குறைத்துக் கொண்டார்.

நிருபர்:- நடிகர் ரஜினிகாந்த் தனிக்கட்சி தொடங்கி தேர்தலில் போட்டியிடுகிறார். தி.மு.கவுக்கு கடும் போட்டியாக இருப்பார் அல்லவா?

கருணாநிதி:- ரஜினி நல்ல நண்பர் என்றுதான் முன்னர் சொன்னேனே தவிர, நல்ல தலைவர் என்று நான் சொன்னதில்லை. அவரது ஸ்டைல் கண்டு வாக்குப்போடும் அளவுக்கு தமிழன் புத்தி கெட்டவனல்ல. தன்மானப் பக்தி கெட்டவனல்ல.

நிருபர்:- சென்ற தேர்தலில் ரஜினியின் பெயரைப் பயன்படுத்தினீர்களே?

கருணாநிதி:- அது 1996. இது 2001ம் ஆண்டு. ஐந்து வருடங்களுக்குள் அவரது புறத் தோற்றம் மட்டுமல்ல, அகத்தோற்றமும் மாறிவிட்டது. ஆதரவு தருகிறேன் என்றார், தமிழர் பண்பாடு காரணமாக அதனை ஏற்றுக்கொண்டோம். இப் போது 'ஆளவிடு' என்கிறார். எப்படி அனுமதிப்பது? தமிழ் மக்களை அவரிடம் ஒப்படைத்தால் ஸ்ரைலாக தூக்கிப் போட்டு உடைத்துவிடுவார். அதற்கு அண்ணாவழி வந்த தி.மு.க. அருமை நண்பர் எம்.ஜி.ஆர். போன்ற தலைவர்கள் உறுப்பினர்களாக இருந்த தி.மு.க ஒரு போதும் இடமளியாது.

நிருபர்:- ரஜினி ஒரு தடவை சொன்னா நூறுதடவை சொன்னமாதிரி என்கிறார்களே அவரது கட்சியினர்?

கருணாநிதி:- ரஜினி ஒரு தடவை ஜெயித்தா தமிழர்கள் நூறு தடவை தோற்றதுமாதிரி என்பதுதான் நமது பிரதான கோஷம்.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (QD/24/NEWS/96)
www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

# இளமையில் முதுமை

தமிழ், இந்தி, தெலுங்கு ஆகிய மும்மொழிகளில் கமல் நடிக்க ஷங்கர் இயக்கும் படம் 'இந்தியன்'.

இன்றைய திகதியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள படம் இதுதான். எதிர்பார்ப்புக்கு பல காரணங்கள்! படத்தில் உள்ள கம்பியூட்டர் சாகசங்கள். மற்றும் கமலின் வித்தியாசமான மேக்-அப். ஏ.ஆர்.ரகுமானின் இசை. ஷங்கரின் இயக்கம். கமல், மனிஷா, ஊர்மிளா, சுகன்யா என்று நட்சத்திர பட்டாளம். பிரமாண்டமான பாடல் காட்சிகள்.



அம்மன் ஜுவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11

அருகே உள்ள படத்தில் இருப்பது கமல்தான். இந்தியன் படத்துக்காக கமல் போட்டுள்ள கிழவன் வேஷம்தான் இது. மேக்-அப் விடயத்தில் கமல் அசத்தியிருக்கிறார். இரண்டு வேடத்தில் மூன்றுவித கெட் அப்பில் தோன்றி தூள் கிளப்புகிறார் கமல்.

தேர்தல் பரபரப்பு ஓயட்டும் என்று பட வெளியீட்டை சற்றுத் தள்ளிப் போட்டிருக்கிறார்கள்.

இதுவரை இந்தியாவில் தயாரான சகல படங்களையும்விட அதிக விலைக்கு விற்கப்பட்டுள்ளது 'இந்தியன்'.

'இந்தியன்' படம் மாபெரும் வெற்றிபெறுமானால் தமிழ் பட உலகில் பல மாற்றங்கள் ஏற்படலாம்.

தமிழ் பட உலகம் தொழில் நுட்ப ரீதியில் படுவேகமாக முன்னேறிவருகிறது. கம்பியூட்டர் சாகசங்கள் எல்லாம் ஹொலிவுட் ஆங்கிலப் படங்களுக்கு மட்டுமே உரிய சாகசங்கள் என்று வாய்பிளந்து கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது.

'இந்தியன்' படம் தமிழ் பட உலகில் மட்டுமல்ல. இந்தியப் படவுலகிலேயே ஒரு மைல்கல்லாக மாறுவது மட்டும் உறுதி.

கமலின் மேக்-அப் வியக்கப்படுவதால் இனிமேல் புதுமையான மேக்-அப் முயற்சிகளில் ஏனைய பிரபல நடிகர்களும் கவனம் செலுத்தக்கூடும்.

# நீளமாய் மீட்டலாம்



⬆ படத்தில் இருப்பதுதான் உலகில் மிகப் பெரிய அகொஸ்ரிக் கிற்றார். இதன் நீளம் 28 அடி 5 அங்குலம். இதன் அகலம் 3 அடி 2 அங்குலம். பிரிட்டனின் பிறிஸ்டல் நகரில் எக்ஸ்புளோறற்றறியிலுள்ள காட்சிக் கூடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டது. உலகில் மிக நீளமான கிற்றார் இதுதான் என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. கிற்றாருக்கு மேல் அமர்ந்திருப்பவர்கள்தான் இதனை கூட்டாகத் தயாரித்த சாதனையாளர்கள். தயாரிக்க மட்டுமல்ல, இதனை மீட்டவும் பல கரங்கள் தேவைதானே!

மற்றொரு தகவல், உலகில் மிகப் பெரிய எலக்ரிக் கிற்றார் அமெரிக்காவில் இருக்கிறது. இதன் நீளம் 38 அடி 2 அங்குலம். அகலம் 16 அடி. மீட்ட மீட்ட நயம்தான்!

# தேடுதலின் பின் ஆடுதல்

➡ எங்குதான் வன்முறை இல்லை. அதனால்தான் விளையாடக்கூட பயமாக இருக்கிறது. விளையாட்டுப் போட்டிகள் தானே என்று விட்டுவிடாமல் அங்கும் வன்முறை கைநீட்டிவிடுமோ என்று பயம். படத்தில் உள்ள காட்சி என்ன தெரியுமா? வில்ஸ் உலக கோப்பை போட்டிகளுக்கு முன்னர் ஆடுகளம் அலசப்படுகிறது. மனிதரை மட்டும் நம்பாமல் மோப்ப நாய்களையும் பயன்படுத்தினார்கள். நன்றாக அலசிவிட்டார்கள் என்று தெரிந்தால்தான் வீரர்கள் நெஞ்சில் திக், திக் எழாது.

என்ன உலகமடா. நிம்மதியாக விளையாடவும் வழி இல்லையே!






# டார்லிங் டார்லிங்

**தவறு** சென்ற வாரம் 20ம் பக்கத்தில் அவுஸ்ரேலிய கப்டனின் பெயர் மாட்டின் குரோ என்று தவறுதலாக இடம் பெற்றுவிட்டது. மார்க் டெய்லர் என்பதே சரியானது. கவனக் குறைவுக்கு வருந்துகிறோம்.



அசாருதீன்-சங்கீதா விவகாரம் ஒருவழியாக முடிவுக்கு வரப்போகிறது. சங்கீதாவை திருமணம் செய்யப்போவதாக அறிவித்துவிட்டார் அசார். அதன் மூலம் முதன் முதலாக தனது காதல் விவகாரத்தை ஒப்புக் கொண்டுள்ளார் அசார்.

அசாரின் காதலுக்கு இந்திய அணியில் பயங்கர ஆதரவாம். துணைக் கப்டன் டெண்டுல்கார், சஞ்சய் மஞ்ரேக்கர் போன்றவர்கள் அசாரை தட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த உற்சாகத்தில்தான் பகிரங்க அறிவிப்பு வெளியிட்டார் அசாருதீன்.

சங்கீதா கர்ப்பமாக இருக்கிறார் என்று இந்திய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. அதனை அசாருதீனிடம் நேரடியாகக் கேட்க நிருபர்களுக்குப் பயம். முன்னர் இசகு பிசகாக கேள்வி கேட்ட நிருபர் ஒருவரை புரட்டி எடுத்தவர் அசார். அந்த ஞாபகமே பயத்தின் காரணம்.

சார்ஜாவில் பாகிஸ்தானை அமோகமாக தோற்கடித்தது மூலம் அசாருதீன்மீது இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கு இருந்த கோபமும் மறைந்துவிட்டது. 10 பந்தில் 29 ரன் குவித்து சார்ஜாவில் அசாருதீன் தனது அடித்தாடும் திறனை நிரூபித்தார். அதற்கு முதல் நாள்தான் சுனில் கவாஸ்கர் அசாருதீன் பதவி விலக வேண்டும் என்று பகிரங்கமாகவே கூறியிருந்தார். அசாரின் அடியில் அதுவும் அடிபட்டுப்போனது.

# ஒரு கை பார்க்கலாம்



வெற்றி-தோல்விகளுக்கு அப்பால் நம்பிக்கையோடு நோக்கப் படக்கூடிய அணிதான் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி.

வில்ஸ் உலகக் கிண்ணப் போட்டிகளிலும், சார்ஜா போட்டிகளிலும் அசத்தலான ஆட்டத்தால் ரசிகர்களின் பாராட்டு மழையில் நனைந்தது தென்னாபிரிக்க அணி.

பாகிஸ்தானுக்கு எதிராக சார்ஜாவில் தென்னாபிரிக்க அணி அசுரத்தனமாக ஆடியது. மூன்று விக்கெட் இழப்புக்கு 50 ஓவர்களில் 314 ரன்கள் குவித்தது. 143 ரன் வித்தியாசத்தால் பாகிஸ்தான் தோற்றது. அதுவும் சார்ஜாவில் தோற்றது பயங்கர அதிர்ச்சிதான். (இரண்டாவது சுற்றிலும் 8 விக்கெட்டால் பாகிஸ்தான் தோற்றது.)

முதல் சுற்றில் தென்னாபிரிக்கா பாகிஸ்தானை அதிக ரன்களால் வெல்லக் காரணமாக இருந்தவர் கலினன். 110 ரன்களை குவித்துவிட்டு அவுட்டாகாமல் திரும்பினார் கலினன். 109 பந்துகளை சந்தித்து 3 சிக்ஸர், 6 பவுண்டரிகள் உட்பட 110 ரன்களை சேகரித்திருந்தார்.

தென்னாபிரிக்க அணியில் கலினன் வளர்ந்துவரும் நம்பிக்கை நட்சத்திரம். அணியின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்பதால், கலினனின் துடுப்பாட்டத் திறனும் வளரும் என்று நம்பலாம்.



இப்பத்திரிகை கொழும்பு நெல்பனை காலிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 28, வெல்வார, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்